விலை: 20.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு


# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 சித்திரை 13 வியாழக்கிழமை (26.04.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 128

# தமிழ் மக்களுடைய பிரச்சினை 2020ல் தீரும்



### நல்லாட்சி அதற்கான செயற்திட்டத்தினையே முன்னெடுத்துள்ளது - யாழில் வைத்து தெரிவித்தார் இராஜாங்க அமைச்சர் பௌசி

**(யாழ்ப்பாணம்) நல்லாட்சி அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு 2020இற்குள் நல்ல தீர்வினை முன்வைக்கும். அதற்கான ஆலோசனைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றதாக தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி யாழில் வைத்து தெரிவித்துள்ளார்.** (23-ம் பக்கம் பார்க்க...)

முல்லை மாங்குளத்தில்

## காற்றுடன் மழை; வீடுகள் பல சேதம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாங்குளம் பகுதியில் நேற்று மாலை 5 மணிய 24

## 80 வீத காணிகள் வடக்கில் விடுவிப்பு

இராணுவம் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தில் படையினர் வசமிருந்த காணிகளில் 80 வீதமானவை விடுவிக்கப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய இராணு 23

அரசிலிருந்து வெளியேறிய

## 16 பேரும் எதிர்க்கட்சியில் அமர ஜனாதிபதி அனுமதி

(கொழும்பு)

அரசாங்கத்திலிருந்து வெளியேறிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 16 பேருக்கும் எதிர்க்கட்சியில் அமர்வதற்கு கட்சியின் தலைவரான ஜனாதிபதி 24

ஈ.பி.டி.பியின் அலுவலகமான ஸ்ரீதர் தியேட்டரை

## விடுவித்து தருமாறு கோரி யாழ். நீதிமன்றில் மனுதாக்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரின் மத்தியில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் தலைமை அலுவலகம் இயங்கும் ஸ்ரீதர் கட்டடத்தின் உரித்தை மீளப் பெற்றுத் தருமாறு யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 23

விடுவிக்கப்பட்ட வலி. வடக்கில்

## வெடி மருந்தை கடத்தியவர் பொலிஸாரால் நேற்று கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவு வள்ளுவர்புரம் பகுதியில் வெடிபொருள் மருந்தினை கடத்திய சந்தேகத்தின் பேரில் இளைஞர் ஒருவர் குற்றத் தடுப்பு பொலிஸா 24

## யாழ் பல்கலையில் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி அமைக்கத் தடை?

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி அமைப்பதற்கு இடைக்காலத் தடை விதித்து பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு பல்கலைக்கழக மானிய 23

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மேலும் பலப்படுத்த தீர்மானம்



அமைச்சர் மகிந்த சமரசிங்க

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை மேலும் பலப்படுத்துவது கட்சியின் பாராளு 23

## தனிப்பட்ட பிரேரணையாக 20-வது அரசியலமைப்பு சீர்திருத்தம்

அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

20-வது அரசியலமைப்பு சீர்திருத்தம் தனிப்பட்ட பிரேரணையாக எதிர்வரும் மே மாதம் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவி 23

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை

## ஒழிக்கும் யோசனை நாடாளுமன்றத்தில்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இல்லாதொழிக்கும் 20ஆவது திருத்த யோசனையை அடுத்த மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது உறுதி என்று ஜே.வி.பி அறிவித்துள்ளது.

இந்த யோசனையை தனிநபர் பிரேரணையாக சபைக்கு 23

வடக்கு அமைச்சர்கள் மீதான

## மோசடிக் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க ஆளுநர் கூரே உத்தரவு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண அமைச்சரவை மீது முன்வைக்கப்பட்டுள்ள மோசடிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து உண்மை நிலை அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு மாகாண பிரதம செயலாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநரிடம் செய்தியாளர்கள் நேற்று கேள்வி எழுப்பினர். அதற்குப் பதிலளிக்கும் போது ஆளுநர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

மாகாண அமைச்சர்கள் மீதான மோசடிக் குற்றச்சாட்டுக்கள் 24

## ஜே.வி.பியுடன் எவ்வித பேச்சுவார்த்தைகளும் இல்லை - மகிந்த

(கொழும்பு)

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ரத்துச் செய்வதற்காக மக்கள் விடுதலை முன்னணியினால் முன்வைக்கப்படவுள்ள பிரேரணை தொடர்பில் கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களை கருத்தில் கொண்டு தீர்மானமொன்றிற்கு வரவுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி 23

இறுதி யுத்தத்தின் போது இராணுவத்திடம் சரணடைந்து

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான மனு நீதிமன்றால் நிராகரிப்பு

(பனிக்கன்குளம்)

இறுதி யுத்தத்தின்போது இராணுவத்திடம் சரணடைந்த பின்னர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட மூன்று ஆட்கொணர்வு மனுக்களை முல்லைத்தீவு நீதிமன்றம் நிராகரித்துள்ளதாகவும், அந்த வழக்குகளின் விசாரணை அறிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்காக வழக்குகள் மே மாதம் 22ஆம் திகதிக்கு வவுனியா மேல் நீதிமன்றத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் தெரிவித்தார்.

இந்த மனுக்கள் தொடர்பான விசாரணைகளில் அளிக்கப்பட்ட சாட்சியங்களில் முரண்பாடுகள் காணப்படுவதாகவும், சாட்சியங்களில் தெரிவித்தபடி, காணாமல் போனவர்கள் என்ன வகையான பேருந்தில் ஏற்றிச் செல்லப்பட்டார்கள், என்ன இலக்கமுடைய பேருந்தில் ஏற்றிச் செல்லப்பட்டா 24

## ஐ.தே.கட்சியின் பொது செயலாளராக காரியவசம் நியமனம்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளராக 24

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# காற்றாடிகள் அமைக்கப்பட்ட பின்னர் பளைப் பகுதியில் மழைவீழ்ச்சி குறைந்துள்ளது

## பிராந்திய முகாமையாளர் வைகுந்தனிடம் மக்கள் முறையீடு

(பளை)

மின்சார உற்பத்திக்கான காற்றாடிகள் நிறுவப்பட்ட பின்னர் பளைப் பகுதியில் மழைவீழ்ச்சி கடுமையாக குறைந்துள்ளதாக தென்னைப் பயிர்ச் செய்கையாளர்கள் நேற்று தெரிவித்தனர்.

வட பிராந்திய தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் ஏற்பாட்டில் நேற்று பிற்பகல் 2.00 மணியளவில் பளைப் பிரதேசத்தைச் சேர்ந்த தென்னைப் பயிர்ச் செய்கையாளர்களுடனான கலந்துரையாடல் பளை கமத்தொழில் திணைக்களத்தில் நடைபெற்றது.

தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் வட பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்,

தென்னைச் செய்கையை ஊக்குவித்தல், பயனாளிகளுக்கு கிடைக்கக்கூடிய மானிய உதவிகள், தென்னைகளைத் தாக்கும் வண்டுகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் எனப் பல்வேறுபட்ட விடயங்கள் அங்கு பிரஸ்தாபிக்கப்பட்டன.

இதன்போது மின்சாரத்திற்காக காற்றாடிகள் அமைக்கப்பட்ட பின்னர் பளைப் பிரதேசத்தில் மழைவீழ்ச்சி கடுமையாகக் குறைந்துள்ளது எனவும் கொடிகாமம், மிருசுவில் ஆகிய இடங்களில் மழை பெய்கின்ற போதிலும் காற்றாடிகள் அமைக்கப்பட்டுள்ள பளைப் பிரதேசத்தில் மழை பெய்யவில்லை எனவும், தென்னைப் பயிர்ச் செய்கையாளர்கள் வட பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தனிடம் முறையீடு செய்துள்ளனர்.

அத்துடன் இது குறித்து ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கதைப்பதற்கு ஏற்பாடு செய்துதருமாறு அவரை கேட்டுக்கொண்டனர்.

இது தொடர்பில் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பிரஸ்தாபிப்பதற்குரிய ஏற்பாட்டை செய்யும் நடவடிக்கைகளை எடுப்பதாக பிராந்திய முகாமையாளர் உறுதியளித்தார்.

இதேவேளை பளைப் பிரதேசத்தில் பத்து ஏக்கருக்கு மேற்பட்ட தென்னங்காணி உடையவர்களை இணைத்து அவர்களை ஒரு சங்கமாக இயங்க வைப்பதனூடாக பல்வேறு நன்மைகளைப் பெறமுடியும் எனவும் இங்கு கூறப்பட்டது.

இக்கருத்தமர்வில் வட பிராந்திய பண்ணை திட்டமிடல் உத்தியோகத்தர் ஈ.சற்குணன், பளை பிரதேசத்திற்கான தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி எல்.றுசிபா மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி ஜே.மரியவேயின் ஆகியோர் இக் கருத்தமர்வில் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் சிறுதோட்ட தென்னைச் செயகையாளர்களுக்கு மானியத்துக்குரிய காசோலைகளும் வழங்கப்பட்டன. (ம)

## புத்தளத்தில் விபத்து பெண் ஒருவர் பலி

(புத்தளம்)

புத்தளம் பாலாவி பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒரு பெண் உயிரிழந்துள்ளதுடன் 6 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வான் ஒன்றும் லொறியொன்றும் மோதியதால் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் புத்தளம் பாலாவி பகுதியை சேந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## பாதசாரியை பஸ்ஸால் மோதிய இ.போ.ச சாரதி விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

வீதியில் சென்ற பாதசாரி ஒருவரை மோதிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் சாரதியை வரும் மே 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

கோப்பாய், யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வீதியில் சென்ற பாதசாரியை மோதினார் என்ற குற்றச்சாட்டிலேயே இ.போ.ச பேருந்து சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சாரதியை கோப்பாய் பொலிஸார், யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தினர்.

விபத்தில் படுகாயமடைந்த முதியவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அத்துடன், சந்தேக நபரான சாரதியிடம் இதே குற்றத்துக்கு இதற்கு முன்னரும் நீதிமன்றால் தண்டம் அறவீடு செய்யப்பட்டது என்று பொலிஸார் மன்றில் தெரிவித்தனர்.

சாரதி சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி பிணை விண்ணப்பம் செய்தார்.

இருதரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் சின்னத்துரை சதீஸ்தரன், சாரதியை வரும் மே 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ம)

## 2018 பொதுநலவாய விளையாட்டு விழாவில் திறமைகளை வெளிப்படுத்திய வீரர்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராட்டு

(கொழும்பு)

2018 பொதுநலவாய விளையாட்டு விழாவின் போது திறமைகளை வெளிப்படுத்திய வீர வீராங்கனைகளுக்கு பாராட்டு தெரிவித்து அவர்களுக்கு சன்மானம் வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் தலைமையில் நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இவ்விளையாட்டு விழாவில் வரலாற்றில் முதல் முறையாக அதிகூடிய பதக்கங்களை இலங்கை வென்றெடுத்ததன் மூலம் நாட்டிற்கு பெற்றுக்கொடுத்த கீர்த்தியை இட்டு அவ் விழாவில் போட்டியிட்ட அனைவருக்கும் ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

அத்தோடு அவர்களின் எதிர்கால விளையாட்டுத்துறை வளர்ச்சிக்கு வாழ்த்துக்களை தெரிவித்த ஜனாதிபதி, அவர்களின் வளர்ச்சிக்கு பெற்றுக்கொடுக்கக்கூடிய மிக உயரிய ஒத்துழைப்பினை பெற்றுத்தருவதாகவும் தெரிவித்தார்.

விளையாட்டுத் துறையானது ஒழுக்கமும் நன்னடத்தையும் மிக்க நல்ல மனிதர்களை உருவாக்குவதாக தெரிவித்த ஜனாதிபதி, சிறந்தவொரு சமூகத்தை நோக்கிய பயணத்தில் விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்காக பெற்றுக்கொடுக்க வேண்டிய சகல வசதிகளையும் பெற்றுக்கொடுப்பதாக இதன் போது தெரிவித்தார்.

இவ்வருட பொதுநலவாய விளையாட்டு விழாவில் பளுதூக்கும் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்ற இந்திக்க திஸாநாயக்க, வெண்கலப் பதக்கம் வென்ற ஜே.ஏ.சீ.லக்மால் மற்றும் பீ.டீ.ஹன்சனி கோமஸ் ஆகிய வீர வீராங்கனைகளுக்கும் பொதுநலவாய விளையாட்டு வரலாற்றில் முதல் தடவையாக இலங்கையின் சார்பில் மகளிர் குத்துச் சண்டை பிரிவில் பதக்கம் வென்ற வீராங்கனையாக வரலாறு படைத்த அனுஷா கொடிதுவக்கு மற்றும் வெண்கலப் பதக்கம் வென்ற திவங்க ரணசிங்க மற்றும் இஷான் செனெவிரத்ன பண்டார ஆகிய வீர வீராங்கனைகளும் இந்நிகழ்வில் பங்கேற்றனர். இவ்வெற்றிகளுக்கு தமது பங்களிப்பினை வழங்கிய பயிற்றுவிப்பாளர்களும் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.

அமைச்சர் பைசர் முஸ்தபா, பிரதி அமைச்சர் எச்.எம்.எம்.ஹாரிஸ், முன்னாள் அமைச்சர் தயாசிறி ஜயசேக்கர, விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் ஜயந்த விஜேரத்ன, விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எச்.என்.பீ.பி. ஹேரத் ஆகியோரும் பொதுநலவாய விளையாட்டு விழாவில் பங்கேற்ற வீர வீராங்கனைகள், விளையாட்டுச் சங்கங்களின் உத்தியோகத்தர்கள் ஆகியோரும் இந்நிகழ்வில் பங்கேற்றனர். (ம)

## அமெரிக்க கடற்படையின் மிதக்கும் மருத்துவமனை திருகோணமலையில்



(கொழும்பு)

அமெரிக்காவின் பசுபிக் ஒத்துழைப்பு.ஒத்திகைத் திட்டத்தின் ஒரு கட்டமாக, அமெரிக்க கடற்படையின் மிகப் பெரிய மிதக்கும் மருத்துவமனை இலங்கைக்கு வருகை தந்துள்ளது

சான் -டியேகோவை தளமாக கொண்ட அமெரிக்க கடற்படையின் மேர்சி (USNS Mercy) என்ற மருத்துவமனைக் கப்பல் நேற்று மாலை திருகோணமலைத் துறைமுகத்தை வந்தடைந்தது.

2018 ஆம் ஆண்டு அமெரிக்கா மனிதாபிமான உதவி மற்றும் இடர் உதவி தயார்படுத்தல்களை மேற்கொள்வதற்காக ஆசிய-பசுபிக் ஒத்துழைப்பு திட்டத்தின் கீழ் இரண்டு கப்பல்களை ஈடுபடுத்தியுள்ளது.

இதற்கமைய பெப்ரவரி தொடக்கம் ஜூன் வரையான காலப்பகுதியில், யூஎஸ்என்எஸ் மேர்சி என்ற மருத்துவமனைக் கப்பல் இந்தோனேசியா, மலேசியா, இலங்கை, வியட்னாம் ஆகிய நாடுகளுக்கும், யூஎஸ்என்எஸ் ப்போல் ரிவர் (USNS Fall River) என்ற கப்பல், மலேசியா, பாலி, தாய்லாந்து, மைக்ரோனேசியாவில் உள்ள யாப் ஆகிய இடங்களுக்கும் பயணங்களை மேற்கொள்கின்றன. (ம)


கண்ணீர் அஞ்சலி



கிளிநொச்சி சாரண உதவி மாவட்ட ஆணையாளரும், கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி ஆசிரியருமான திரு.ம.ஜெகதீஸ்வரன் அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர் வாரித்தம்பி மகாலிங்கம்

அவர்கள் இறைபதமடைந்தமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

இலங்கை சாரணர் சங்கம்-கிளிநொச்சி மாவட்டம்



கண்ணீர் அஞ்சலி

திருமதி பாக்கியம் திருநாவுக்கரசு



எமது பாடசாலை ஆசிரியரான திருமதி செ.உமாகரன் அவர்களின் அன்புத் தாயாரான

திருமதி பாக்கியம் திருநாவுக்கரசு

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது கல்லூரிச் சமூகம் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(3785)

ஆசிரியர் கழகம் - யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி

# வெள்ளைவான் கடத்தல்களின் சூத்திரதாரி கோத்தபாயவே

## மேர்வின் மீண்டும் அதிரடி



(கொழும்பு)

வெள்ளை வான் கடத்தல்களின் முக்கிய சூத்திரதாரி முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவே எனத் தெரிவித்துள்ள முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா, வெள்ளை வான் கடத்தல்களுக்கான உத்தரவுகளை வழங்கிய கோத்தபாய ராஜபக்ஷவை விசாரணை செய்வதற்கு எவருக்கும் முதுகெலும்பு இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை உத்தரவு இன்றி எதுவும் இடம்பெற்றிருக்க முடியாது எனக் குறிப்பிட்டுள்ள மேர்வின் சில்வா வெள்ளை வான் கடத்தல்களுக்கான உத்தரவினை பாதுகாப்பு அமைச்சரோ அல்லது பாதுகாப்புச் செயலாளரோ வழங்கியிருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

2012 ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற படுகொலைகளுக்காகவும் கோத்தபாய ராஜபக்ஷவை விசாரணை செய்ய வேண்டும் எனவும் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பாதாள உலகத்தவர்களுடன் எவருக்காவது தொடர்பிருந்தால் அவர் உடனடியாக கொலை செய்யப்பட்டார். இது குறித்து பொலிஸ் விசாரணைகள் எதுவும் இடம்பெறவில்லை எனவும் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பொலிஸார் இது குறித்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ள மேர்வின் சில்வா படுகொலைகளில் ஈடுபடுவதற்கு எந்த அரசியல்வாதிக்கும் உரிமையில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)

## இலங்கைக்கு கடத்தி வரப்பட்ட பீடி இலைகள் மூடை மூடையாக மன்னாரில் கரையொதுங்கியது

### 50இலட்சம் பெறுமதியானது என சுங்கத்துறை தகவல்



(மன்னார்)

மன்னார் வளைகுடா கடல் வழியாக இலங்கைக்கு கடத்தி வரப்பட்ட 50 இலட்சம்ரூபா மதிப்பிலான உயர்ரக பீடி இலைகள் மூடை மூடை யாக கடலில் கரையொதுங்கி யுள்ளதாக கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து சுங்கத்துறையினர் மீட்கப்பட்டுள்ளனர்.

மன்னார் வளைகுடா கடல் பகுதியான பாம்பன் குந்துகால் கடல்பகுதியில் நேற்று அதிகாலை மூடை மூடைகளாக நடுக்கடலிலும் கடல் கரையோரத்திலும் கரை ஒதுங்கியுளள்தாக சுங்கத் துறை அதிகாரிகளுக்கு அப்பகுதி மீனவர்கள தகவல் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த சுங்கத்துறையினர் மீனவர்கள் உதவியால் கரை ஒதுங்கிய சுமார் 25 மூடை உயர்ரக பீடி இலைகளை பறிமுதல் செய்தனர். மேலும் நடுக்கடலில் மிதந்துவரும் மூடைகளை மெரைன் பொலிஸார் மீனவர்களின் உதவியால் மீட்டனர். பறிமுதல் செய்யப்பட்டுள்ள பீடி இலைகள் உயர் ரகத்தை சேர்ந்தது எனவும் இதன் மதிப்பு சுமார் 50 இலட்சம் எனத் தெரிவித்தனர்.

மேலும் இலங்கைக்கு கடத்தி வரப்படும் போது நடுக்கடலில் படகு மூழ்கியதால் மூடைகள் தவறி கடலில் விழுந்திருக்கலாம் அல்லது கடற்படையினரோ அல்லது கடலோர காவல் படையினரோ ரோந்துப் பணியின் போது படகில் மூடைகள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு படகை பறிமுதல் செய்ய முயற்ச்சிக்கும் போது கடலில் தள்ளி விட்டு படகுடன் கடத்தல்காரர்கள் தப்பிச் சென்றிருக்கலாம் என்ற அடிப்படையில் பாதுகாப்பு படையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். (2-281-9)

## வித்தியா வழக்கில் விடுவிக்கப்பட்டவரின் விளக்கமறியல் மே 9ம் திகதிவரை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா கொலை வழக்கில் முதலாவது சந்தேக நபராக இருந்து நீதிமன்றால் விடுவிக்கப்பட்டு பின்னர் பொலிஸார் ஒருவரை அச்சுறுத்திய வழக்கில் விளக்கமறியலினுள்ள பூபாலசிங்கம் இந்திரகுமாரின் விளக்க மறியல் எதிர்வரும் மாதம் 09 ஆம் திகதி வரை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இவ் வழக்கானது ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் நீதவான் ஏ.எம்.எம். றியால் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே நீதவான் இவ் உத்தரவை பிறப்பித்தார்.


குறித்த வழக்கு தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து கிடைக்க வேண்டிய அறிக்கை கிடைக்கவில்லை என பொலிஸார் மன்றுக்கு தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து குறித்த வழக்கு தொடர்பாக நீதிமன்றுக்கு அதிகாரம் இல்லை எனவும் மேன்முறையீட்டு நீதிமன்றுக்கே அதிகாரம் உண்டெனவும் , இவ் வழக்கு கோவைகள் தொடர்பாக விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ள சட்டமா அதிபருக்கு நினைவூட்டல்கடிதமொன்றை அனுப்புவதாக குறிப்பிட்ட நீதவான் இவ் வழக்கு விசாரணையை எதிர்வரும் 09 ஆம் திகதி வரை ஒத்தி வைத்ததுடன் அதுவரை அந் நபரை விளக்கமறியலில் வைக்கவும் உத்தரவிட்டார்.

மாணவி வித்தியா கொலை வழக்கில் இவர் நிரபராதியாக விடுதலை செய்யப்பட்ட போதும் பொலிஸாரை அச்சுறுத்திய வழக்கிலேயே தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

## எட்டாம் திகதிக்குப் பின்னர் சக்தி வாய்ந்த அரசாங்கம்

### இராஜாங்க அமைச்சர் பௌசி யாழில் தகவல்



(யாழ்ப்பாணம்)

நாட்டில் எதிர்வரும் எட்டாம் திகதிக்கு பின்னர் சக்தி வாய்ந்த அரசாங்கம் ஒன்று உருவாகும் என தேசிய ஒருமைப்பாடு மற்றும் சகவாழ்வு இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகை தந்த இராஜாங்க அமைச்சர், யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்குட்பட்ட பாடசாலை நூலகங்களை தரமுயர்த்தும் செயற்றிட்டத்தின் கீழ் அவற்றுக்கு நூல்கள் வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நாட்டில் கூட்டரசாங்கம் உருவாகிய பின்னர் மக்கள் சமாதானத்துடனும் பொருளாதரத்தில் முன்னேற்றத்துடனும் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த அரசில் ஒரு சில சிறிய குழப்பங்கள் காணப்படுகின்றன.எது எவ்வாறாயினும் நாட்டு மக்கள் நலனை கருத்தில் கொண்டு கூட்டு அரசாங்கத்தை தொடர்வது என கடந்த சிலதினத்துக்கு முன்னர் சந்தித்த ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் கூட்டாக முடிவு எடுத்துள்ளனர்.

அத்துடன் அரசும் பலமாக இருக்கின்றது. எனவே நாட்டில் குழப்பங்களுக்கு இடமில்லை.

வடக்கு மக்களாகிய நீங்கள் நாட்டில் நடந்த 30 ஆண்டு கால யுத்தம் காரணமாக பின்னோக்கிய நிலையில் காணப்படுகின்றீர்கள். நீங்கள் முன்னோக்கி பயணிக்கும் பணிகளை முன்னெடுக்க வேண்டும். அதுவே உங்கள் கடமை.

எனவே இங்குள்ள மாணவ மாணவிகளே நீங்கள் அனைவரும் கல்வியில் சிறப்பான இடத்தில் இருக்க வேண்டும்.

இங்கு படித்த ஏராளமானவர்கள் தென்னிலங்கையில் வைத்தியர்களாகவும்.உயர் அதிகாரிகளாகவும் உள்ளனர்.

நீங்கள் அனைவரும் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என அறிவுரை வழங்கினார்.

கடவுளின் அருளால் தற்போது அரசாங்கம் நன்றாகவே உள்ளது. ஆனால் எதிர்வரும் எட்டாம் திகதிக்கு பின்னர் நாட்டில் மிகவும் சக்தி வாய்ந்த அரசாங்கமொன்று உருவாகும் என தெரிவித்தார்.

இதேவேளை பொது எதிரணியானது பொதுத் தேர்தலொன்றை நடத்த கோருவது தொடர்பாக கேள்வியெழுப்பியபோது,

அவ்வாறு பொதுத் தேர்தலை நடத்த முடியாது. அவ்வாறு பொதுத் தேர்தலை நடத்துவதாயின் அதற்கு அரசாங்கத்தை கலைக்க வேண்டும்.


ஆனால் அரசாங்கத்தையும் கலைக்க முடியாது. எனவே பொதுத் தேர்தலையும் நடத்த முடியாது. பொது எதிரணியானது தேர்தலுக்காக 2020 வரை காத்திருக்க வேண்டும் என்றார்.

அரசாங்கம் தீர்வு முயற்சிகளை மேற்கொள்ளாவிடின் நிர்வாக முடக்கல் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாக கூட்டமைப்பின் ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளமை தொடர்பாக வினவிய போது,

இவ் அரசாங்கம் உருவாகிய நாளில் இருந்து தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான அபிப்பிராயத்தையும், ஆலோசனைகளையும் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

அதற்காகவே அதிகமான நேரத்தை செலவு செய்தும் வருகின்றது எனத் தெரிவித்தார். (இ-4)

# தல தோனி சுப்பர் சிக்ஸ் சென்னை 'திரில்' வெற்றி



அண்டர்சன் வீசிய இறுதி ஓவரின்4ஆவது பந்தை, தல தோனி அசால்டாக சிக்ஸருக்கு விளாச, பெங்களூர் அணிக்கு எதிரான லீக் போட்டியில் சென்னை 2 பந்துகள் மீதமிருக்கையில் 5 விக்கெட்டுக்களால் திரில் வெற்றி பெற்றது.

இந்தியாவில் ஐ.பி.எல்., தொடரின் 11ஆவது சீசன் நடக்கிறது.

பெங்களூருவில் நேற்று நடந்த 24ஆவது லீக் போட்டியில் ஹோலி தலைமையிலான பெங்களூரு அணி, தோனியின் சென்னை அணியுடன் மோதியது.

நாணயச் சுழற்சியில வென்ற சென்னை அணியின் தலைவர் தோனி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார். சென்னை அணியில் டு பிளசி, கரண் சர்மா நீக்கப்பட்டு ஹர்பஜன், தாகிர் சேர்க்கப்பட்டனர்.

**டி வில்லியர்ஸ் அரைச்சதம**

பெங்களூர் அணிக்கு அணித் தலைவர் ஹோலி (18) விரைவில் திரும்பினார். பின், இணைந்த குயினரன் - டி வில்லியர்ஸ் ஜோடி அசத்தியது. எதிரணி பந்து வீச்சை சிதறடித்த இருவரும் அரைச்சதம் கடந்தனர். பிராவோ பந்தில் குயின்ரன் (53) ஆட்டமிழந்தார். தாகிர 'சுழலில்' டி வில்லியர்ஸ் (68), கோரி அண்டர்சன் (2) சிக்கினர். மன்தீப் சிங் (32) வேகமாக ஓட்டங்கள் சேர்த்தார். கிராண்ட்ஹோம் (11) ரன்-அவுட்டானார். வோஷிங்டன் சுந்தர் ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் அடித்தார்.

20 ஓவர்கள் நிறைவில பெங்களூர் அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 205 ஓட்டங்கள் எடுத்தது. சுந்தர் (13) ஆட்டமிழக்காமல் இருநதார்.

**ராயுடு விளாசல்**

கடின இலக்கை விரட்டிய சென்னை அணிக்கு வோட்சன் (7), ரெய்னா (11) ஏமாற்றினர். சகால் 'சுழலில்' பில்லிங்ஸ் (9), ஜடேஜா (3) ஆட்டமிழந்தனர். பின், கைகோர்த்த ராயுடு, அணித் தலைவர் தோனி ஜோடி மிரட்டியது. அபாரமாக விளையாடிய ராயுடு அரைச்சதம் கடந்தார். தன் பங்கிற்கு அசத்திய தோனியும் அரைச்சதம் எட்டினார். ராயுடு (82) ரன்-அவுட்டானார்.

இதனால், சற்று நெருக்கடி ஏற்பட்டது. இருப்பினும், தோனியின் அனுபவ ஆட்டம் கைகொடுக்க, சென்னை அணி 19.4 ஓவர்களில் 5 விக்கெட்டுக்கு 207 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. தோனி (70), பிராவோ (14) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

போட்டியின் ஆட்டநாயகனாக சென்னை அணித்தலைவர் தோனி தெரிவானார்.

# தலைமைப் பதவி; கம்பீர் 'குட்-பை'

ஐ.பி.எல்., தொடரில், டில்லி அணியின் தலைமைப் பதவியிலிருந்து கௌதம் கம்பீர் விலகினார்.

இந்தியாவில் ஐ.பி.எல்., தொடரின் 11ஆவது பருவ காலத்துக்கான போட்டிகள் நடக்கிறது. இந்திய சீனியர் வீரர் கம்பீர் (வயது-36), இம்முறை டில்லி அணிக்காக ரூ.2.80 கோடிக்காக வாங்கப்பட்டார்.



ஏற்கெனவே, கொல்கத்தா அணிக்காக இவர் இரண்டு முறை (2012, 14) கிண்ணம் வென்று கொடுத்ததால் டில்லி அணியின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

ஆனால், எதிர்பார்ப்புக்கு மாறாக இதுவரை விளையாடிய 6 போட்டிகளில் ஒரு வெற்றி மட்டுமே பெற்றுக் கொடுத்துள்ளார். இதுதவிர தனிப்பட்ட துடுப்பாட்டத்திலும் (6 போட்டி, 85 ஓட்.) ஏமாற்றமே அளித்தார்.

இந்நிலையில், அணித் தலைமைப் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

இது குறித்து கம்பீர் கூறுகையில்,

"அணி சிறப்பான நிலையில் இல்லாததால், மீண்டு வருவோம் என்ற நம்பிக்கை என்னிடம் இல்லை. நெருக்கடியை கையாளத் தெரியவில்லை. இதனால், பல முறை யோசித்த பின்பு, தலைமைப் பதவியிலிருந்து விலக முடிவு எடுத்துள்ளேன்," என்றார்.

இவர் விலகியதால், இளம் வீரர் ஸ்ரேயாஸ் ஐயர் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.




# பட்டையைக் கிளப்புமா பஞ்சாப்?



ஐ.பி.எல்., தொடரில் இன்று நடக்கும் 25ஆவது லீக் போட்டியில் பஞ்சாப், ஹைதராபாத் அணிகள் மோதுகின்றன.

இதில் பஞ்சாப் அணி பட்டையை கிளப்பும் பட்சத்தில், 6ஆவது வெற்றியை பதிவு செய்யலாம்.

இந்தியாவில், 11ஆவது பருவகாலத்துக்கான ஐ.பி.எல், போட்டிகள் நடக்கிறது.

இன்று ஹைதராபாத் நகரில் நடக்கும் 25ஆவது லீக் போட்டியில் ஹைதரபாத் - பஞ்சாப் அணிகள் மோதுகின்றன.

கடந்த,ஏப். 19ல் மொஹாலியில் நடந்த லீக் போட்டியில் பஞ்சாப் அணி, 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஹைதராபாத்தை வீழ்த்தி இருந்தது.

**ஹெய்ல் நம்பிக்கை**

பஞ்சாப் அணி, இதுவரை விளையாடிய 6 போட்டிகளில், 5ல் வெற்றி பெற்றுள்ளது. டில்லி அணிக்கு எதிராக விளையாடாத கிறிஸ்ஹெய்ல், இன்று களமிறக்கப்படலாம். ஒரு சதம், 2 அரைச்சதம் உடபட 229 ஓட்டங்கள் எடுத்துள்ள இவர், மீண்டும் அதிரடி காட்டலாம். இவருக்கு லோகேஷ் ராகுல் (236 ஓட்.) ஒத்துழைப்பு கொடுத்தால் நல்ல ஆரம்பம் கிடைக்கும். கருண் நாயர், மயங்க் அகர்வால், ஆரோன்பின்ச், டேவிட மில்லர், யுவராஜ் சிங் கைகொடுக்கும் பட்சத்தில் நல்ல ஓட்டஎண்ணிக்கையைப் பெறலாம்.

வேகத்தில் அன்ட்ரூ ரை (9 விக்கெட்டுக்கள்) பலம் சேர்க்கிறார். மோகித் சர்மா (5 விக்.,) எழுச்சி காண வேண்டும். 'சுழலில்' முஜீப் ஐத்ரன் (6 விக்.,), அணித் தலைவர் அஷ்வின்(5) ஓரளவு நம்பிக்கை அளிக்கின்றனர்.

**வில்லியம்ஸன் அபாரம்**

ஹைதராபாத் அணி, இதுவரை விளையாடிய 6 போட்டிகளில், 4இல் வெற்றி பெற்றுள்ளது.

துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் வில்லியம்சன் (259 ஓட்.) அசத்துகிறார். மும்பைக்கு எதிராக 5 ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றிய ஷிகர் தவான், இன்று எழுச்சி கண்டால் நல்ல ஆரம்பம் கொடுக்கலாம். விரிதிமன் சகா, மணிஷ் பாண்டே, யூசுப் பதான், சகிப் அல் ஹசன் கைகொடுததால் இமாலய இலக்கை பதிவு செய்யலாம்.

சமீபத்தில் மும்பை அணியை 87 ஓட்டங்களுக்கு சுருட்டிய உற்சாகத்தில் ஹைதராபாத் பந்துவீச்சாளர்கள் உள்ளனர்.

இப்போட்டியில் புவனேஷ்வர் குமார் இல்லாத நிலையில் சந்தீப் சர்மா, சித்தார்த் கவுல், பசில் தம்பி 'வேகத்தில்' அசத்தினார். 'சுழலில்' ரஷிட் கான், ஆதிக்கம் செலுத்துவது வெற்றிக்கு முக்கிய பங்குவகிக்கிறது.

# குறைபாடுகள் சீர்செய்யப்படுவதோடு அடிப்படை வசதிகள் முன்னேற்றப்படும்

## நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் கிரிதரன் கன்னியுரையில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைக்குரிய 10ஆம் வட்டாரத்தில் காணப்படும் குறைபாடுகளை சீர்செய்வதோடு அடிப்படை வசதிகளை முன்னேற்றுவதற்கே நான் இச்சபைக்கு வந்துள்ளேன் என நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் கிரிதரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற நல்லூர் பிரதேச சபை அமர்வில் கலந்து கொண்டு கன்னியுரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் அ[illegible]கையில்,

எமது ஊராகிய கல்வியங்காட்டில் தேவையான அடிப்படை வசதிகளை முன்னேற்றுவதற்காகவும் அவற்றிலே காணப்படும் குறைபாடுகளை சீர்திருத்துவதற்காகவும்தான் நான் இச் சபைக்கு வந்துள்ளேன் எனக்கூறிய அவர்,

அரசியல் செய்வதற்காக நான் இச்சபைக்கு வரவில்லை எனக் கூறியுள்ளார்.



இதேபோல அனைத்து உறுப்பினர்களும் கட்சி பேதமின்றியும் வட்டார பேதமின்றியும் பிரதேச அபிவிருத்திக்கு ஒத்துழைக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

நான் தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகள் யாவும் இச்சபையினால் நிறைவேற்றப்படக்கூடியவை என்றும் கூறியுள்ளதுடன், குறிப்பாக குளங்களைப் புனரமைத்தல் மற்றும் தெரு விளக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் அத்துடன் புதிய வீதிகளை நிர்மாணித்தலும் பழைய வீதிகளை செப்பனிடுதல் போன்றவற்றை சீரான முறையில் செயற்படுத்துவதன் மூலம் எமது பிரதேச சபையினை இலங்கையிலுள்ள ஏனைய பிரதேச சபைகளுக்கு முன்மாதிரியானதாக நடத்தவேண்டும் என்பது எனது விருப்பம் எனவும் தெரிவித்தார். (ம)

# தவான், மந்தனாவுக்கு 'அர்ஜூனா'

## பிசிசிஐ., பரிந்துரை



அர்ஜூனா விருதுக்கு ஷிகர தவான், மந்தனா பெயர் பரிநதுரை செய்யப்பட்டுள்ளது.

இந்திய விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்கும் நட்சத்திரங்களுக்கு மத்திய அரசு சார்பில் ஆண்டு தோறும் அர்ஜூனா விருது வழங்கப்படுகிறது.

இம்முறை இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.,) சார்பில் ஷிகர் தவான், வீராங்கனை மந்தனா பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

டில்லியை சேர்ந்த தவானுக்கு கடந்த ஆண்டு சிறப்பாக அமைந்தது. 22 ஒரு நாள் போட்டியில் 3 சதம், 6 அரைச்சதம் உட்பட மொத்தம் 960 ஓட்டங்கள் குவித்தார்.

மகராஷ்டிராவின் மந்தனாவை பொறுத்த வரை, கடந்த உலக கிண்ணத் தொடரில் 9 போட்டிகளில் ஒரு சதம், ஒரு அரைச் சதம் உட்பட மொத்தம் 232 ஓட்டங்கள் குவித்து, அணி இறுதிக்கு செல்ல கைகொடுத்தார்.

இது குறித்து பி.சி.சி.ஐ., தற்காலிக செயலர் அமிதாப் சௌத்ரி கூறுகையில்,

"மத்திய அரசு வழங்கவுள்ள அர்ஜூனா விருதுக்காக, ஷிகர் தவான், மந்தனா பெயரை பரிந்துரை செய்துள்ளோம்," என்றார்.

# எதிர்காலத்திற்கான தொழில் வாய்ப்புகள்

## எமது தயாரிப்புக்கள்

காவேரி ஊதுபத்தி-சாம்பிராணி, பிறந்த நாள் மெழுகுவர்த்திகள் பல வடிவங்களில்-பலநிறங்களில் ஊதுபத்தி தயாரிப்பதில் அனுபவம், பிறந்தநாள் மெழுகுவர்த்திகள் வர்ணம் தீட்டுவதில் சித்திர வேலை தெரிந்தவர்கள் மற்றும் விற்பனையாளர்கள் தொடர்பு கொண்டு வரவும்.

எமது தயாரிப்புகள் யாழ்-மாதகல் கடைகளில் கிடைக்கும். யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தொழில் இல்லை என நினைப்பவர்கட்கு அரிய வாய்ப்பு.

தொடர்பு எண்: 070 310 7250
Viber: 077 967 2462,

காவேரி தொழிலகம்,
பிள்ளையார் கோவில் வீதி, 2ம் வட்டாரம்,
கைவேலி, புதுக்குடியிருப்பு

(3702)


## 'பிரணவ மந்திரத்தின் பொருள்' சின்மயா மிஷனில் விளக்கவுரை

(யாழ்ப்பாணம்)

யாழ். சின்மயா மிஷன், சுவாமி சிதாகாசானந்தாவால் கந்தபுராணம் வாராந்த விளக்கவுரை பிரதி வெள்ளிக்கிழமைகளில் மாலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை இல. 700, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள "ஞானவேல்"ஆச்சிரமத்தில் இடம்பெறுகின்றது.

இதில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை 27/08/18 அன்று "பிரணவ மந்திரத்தின் பொருள்" என்ற தலைப்பில் விரிவுரை நடைபெறவுள்ளது. ஆர்வலர்கள் அனைவரும் கலந்து பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர். (இ-7)

# எங்கள் சொத்தே இறையடி சேர்க



அமரர் திருமதி.
## முருகேசு அன்னக்கொடி

வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து நின்றாய்
வளமோடு மக்களையும் வாழவைத்தாய்
கண்ணான கணவனையும் கடவுள் தந்தார்
கதறியழ வைத்து விட்டுச் சென்று விட்டாய்

உற்றாரும் மற்றாரும் ஊரார் தானும்
உன்பிரிவு கேட்டு எமைத் தேற்ற வந்தார்
சொத்தாக எங்களுக்கு நீ இருந்தாய்
சுகமளித்தாய் இறையடியில் சுகத்தைக் காண்பாய்

16.03.2018 அன்று ஐக்கிய அமெரிக்காவில் இறைபதம் எய்திய எமது குடும்ப விளக்கு அமரர் முருகேசு அன்னக்கொடி அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு ஆறுதல் சொல்ல வந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு அன்னாரின் நினைவாக 28.4.2018 அன்று எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

நாகர்கோவில்
மேற்கு நாகர் கோவில்

(2398)

# கண்ணீர் அஞ்சலி

வடமாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ.கே சிவஞானம்
அவர்களின் அன்பு மனைவி
திருமதி.
## சரோஜினிதேவி சிவஞானம்



(இ-2399)

அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நல்லூர் கந்தப் பெருமானின் திருவடிகளை வேண்டுகின்றோம். ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கஜமுகன் ஹாட்வெயார்
147, 149 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

லயன் E.S.P. நாகரத்தினம்
(PMJF)

# இராசி பலன்

**மீனம்:** உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், ஆரோக்கியம் சீராகும், தொழிலை முன்னேற்றும் எண்ணம் உருவாகும்.

**மேடம்:** சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படலாம், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு.

**இடபம்:** தொலைபேசி வழியில் ஆச்சரியப்படும் தகவல்கள் வந்து சேரலாம், சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்:** பொதுநல ஈடுபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சகோதர வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்:** குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், தொழில் வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.

| | | | |
|---|---|---|---|
| புத | சூரி | சுக் | |
| | இராசி பலன் | | ராகு |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>திருவோணம், அவிட்டம்<br>இரவு 2.40 மணிக்கு<br>கன்னி--சந் | | சந் |
| சனி,<br>செவ் | | குரு | |

**26.04.2018**
சித்திரை 13, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
ஏகாதசி முற்பகல் 10.08 மணிவரை
பூரம் பிற்பகல் 3.05 மணிவரை
சுபநேரம் 7.29-8.59 மணிவரை
இராகுகாலம் 1.29-2.59 மணிவரை
ஏகாதசி விரதம்

வளவன்

**கடகம்:** கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மகரம்:** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

**சிம்மம்:** வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புகளும் கூடலாம், திடீர் பயணங்கள் ஏற்படலாம்.

**தனுசு:** எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதியைக் கொடுக்கும், பூர்வீக சொத்துக்களால் நன்மையுண்டு.

**விருச்சிகம்:** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், தொலைபேசியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள்.

**துலாம்:** செல்வ நிலை உயரும் நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**கன்னி:** விரதங்களில் நம்பிக்கை கூடும், சுபகாரியச் செலவுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம், வேலைச்சுமை கூடும்.

# தூளாக்கும் இயந்திரம் இயக்கம்


(படங்கள்:-சக்தி)

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட கழிவுகளை தூளாக்கும் இயந்திரம் மூலம் செய்துகாட்டல் நிகழ்வு நேற்று ஈவினை தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் மேற்கொள்ளப்பட்டது.

உடுவில் விவசாயப் போதனாசிரியர் பே.கோபிராஜாவால் இந்நிகழ்வு ஒழுங்குபடுத்தப்பட்டது. இந்த இயந்திரமானது நீரான்கு சில்லு உழவு இயந்திரத்தின் உதவியுடன் இயக்கப்படுகின்றது.

சேதனப் பசளைப் பாவனையை ஊக்குவிக்குமுகமாக இவ் இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வாழைச் செய்கையின் போது வாழைக்குலை அறுவடை செய்ததன் பின் காணப்படும் வாழைக் குற்றிகளை நேரடியாக இவ் இயந்திரம்' சிறு துகள்களாக வெட்டி வெளியேற்றும். அத்துடன் பனையோலை, சிறு கட்டுகளாகக் கட்டிய பூவரசு, வேப்பங்குழைகள், கிழுவந் தடி போன்றவற்றை இவ் இயந்திரத்தினுள் செலுத்தும் போது சிறு துகள்களாக வெளியேற்றும். இதன்மூலம் சேதனப் பசளைப்பாவனையை ஊக்குவிக்க முடியும். அத்துடன் தற்போது நிலவும் தொழிலாளர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முடியும்.

இச் சிறு துகளாக்கும் இயந்திரம் (Multi chopper) ஆனது Tractor மூலம் தேவையான இடங்களுக்குகொண்டு சென்று பயன் பெற முடியும். இது விவசாயிகளுக்கு பயனளிக்கக் கூடிய இயந்திரமாகும்.

இவ் இயந்திரத்தின் சேவையைப் பெற விவசாய திணைக் களத்துடன் அல்லது கோப்பாய், நாவற்காடு இளைஞர் விவசாயகழகங்களுடன் தொடர்பு கொண்டு சேவை யைப் பெற முடியும்.

மேலதிக விபரங்களுக்கு பாட விதான உத்தியோகத்தர் எஸ்.பாலகிருஸ்ணன் (பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர்) அலுவலகம் யாழ்ப்பாணம். 077 613 9134 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ

# மக்களின் போக்குவரத்திற்கு இடையூறாகவுள்ள அனைத்து உள்ளக வீதிகளும் சீரமைக்கப்படும்

## வேலணை தவிசாளர் உறுதி

(வேலணை)

வேலணைப் பிரதேசத்தில் காணப்படும் சீரமைக்கப் படவேண்டிய உள்ளக வீதிகள் அனைத்தும் செப்பனிடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்என வேலணை பிரதேசசபை தவிசாளரும் குறித்த பிரதேசத்தின் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நிர்வாகச் செயலாளருமான நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

வேலணை - துறையூர் பகுதி மக்கள் மற்றும் முக்கியஸ்தர்களுடனான சந்திப்பின்போது குறித்த பகுதி விநாசி வீதியின் புனரமைப்பு தொடர்பாக அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். குறித்த வீதியை பார்வையிட்ட பின் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் எமது கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் அயராத உழைப்பின் காரணமாகவே இப்பகுதியில் பல்வேறுபட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதைவிட வேலணை பிரதேச மக்களது நலன் கருதி சிதைந்து காணப்பட்ட அதிகளவான வீதிகள் செப்பனிடப் பட்டும் மணல் மேடாய்க் கிடந்த பல ஒழுங்கைகள் காப்பெற் வீதிகளாகவும் அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தன.

அந்த வகையில் தொடர்ந்தும் இப்பகுதி மக்கள் டக்ளஸ் தேவானந்தா மீது கொண்ட நம்பிக்கை காரணமாகவே இப்பிரதேசத்தின் ஆட்சி அதிகாரத்தை மீண்டும் எம்மிடம் தந்துள்ளீர்கள்.

மக்களின் நம்பிக்கையை நாம் ஒருபோதும் வீணடிக்கப் போவதில்லை. அந்தவகையில் எமது பிரதேச சபைக்குட்பட்ட அனைத்து உள்ளக வீதிகளையும் செப்பனிடுவதற்கான முயற்சிகளை நாம் காலக்கிரமத்தில் மேற்கொண்டு மக்கள் போக்குவரத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வை பெற்றுத்தருவோம் என தெரிவித்தார். (இ)

# தாக்குதலைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்



(சாவகச்சேரி)

நாவற்குழி ஜே/294 பிரிவு பொருளாதார அபிவிருத்தி உத்தி யோகத்தர் மீது கடந்த வாரம் நடத்தப்பட்ட தாக்குதலை கண்டித்து தென்மராட்சி பிரதேச செயலக வெளிக்கள உத்தியோகத்தர்கள் பிரதேச செயலகத்தில் நேற்றுக்காலை ஒரு மணித்தியாலம் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். (இ-29)

# வைத்தியசாலையில் மலசலகூடங்கள் சீரின்மையால் நோயாளர்கள் அவதி

(கரணவாய்)

பருத்தித்துறைஆதாரவைத்தியசாலையில் மலசல கூடங்கள் உரிய முறையில் பராமரிக்கப்படுவதில்லைஎனவைத்தியசாலையில் இடம் பெற்ற கலந்துரையாடலில் சுட்டிக் காட்டப்பட்டது.

பருத்தித்துறைஆதாரவைத்திய சாலையின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெற்ற போதே மேற் கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டது. மேலும் இவ் வைத்திய சாலையை இரண்டு இலட்சத்து 64 ஆயிரம் மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

வைத்தியசாலை விடுதிகளில் உள்ள மலசலகூடங்கள் சீரின்மையால் நோயாளர்கள் அவதிப்படுகின்றனர்.

எனவே காலத்திற்கு காலம் மலசலகூடங்களை சீர் செய்வதற்காக நிதி வழங்கப்பட வேண்டும் என அங்கு இடம் பெற்ற கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டது. (இ-60)




# வடக்கு தொண்டராசிரியர்களை பதிவு செய்யுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த 19, 20ஆம் திகதிகளில் மத்திய கல்வியமைச்சில் நடைபெற்ற நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படாத பாதிக்கப்பட்ட வடமாகாண தொண்டர் ஆசிரியர்களை அவசரமாக பதிவு செய்யுமாறு சங்கம் கேட்டுள்ளதுடன் தவறும் பட்சத்தில் தங்களுக்கான நியமனத்தை இழக்க நேரிடும் எனவும் அறிவுறுத்தியுள்ளது. பதிவு செய்ய வரும் போது,

1. அடையாள அட்டை போட்டோ கொப்பி

2. இறுதி நேர்முகத்தேர்வு கடிதப்பிரதி

3. க.பொ.த சாதாரண மற்றும் உயர்தர சான்றிதழ்

4. பாடசாலை அதிபரின் முதல் நியமன கடிதம் உள்ளிட்ட அனைத்து ஆவணங்களுடனும் நாளை 27/04/2018 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 2. மணிக்கும் இடைப்பட்ட நேரப் பகுதியில் யாழ்ப்பாணம் ஆரியகுளம் புதிய உயர்கல்லூரி மண்டபத்தில் ஒன்று கூடுமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார்.

தொடர்புக்கு தலைவர்: யோ.அருட்செல்வம்.தொ.பே: 077 437 9606 செயலாளர்: நா.கருணாகரன் தொ.பே 077 037 6013 என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# மணிவிழாவும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி இலக்கிய அணியும் ஸ்ரான்போட் கல்வி நிறுவனமும் தென்மராட்சி பொதுஅமைப்புக்களும் இணைந்து முன்னெடுக்கும் "நற்றமிழ் வேந்தன்" கவிஞர் த.நாகேஸ்வரனின் மணிவிழா மாண்பும் அரங்கில் பொழிந்த அமுத மழை நூல் வெளியீடும் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் மாணவர்களின் எதிர்கால வெற்றிக்கு தாய்மொழிக் கல்வி அவசியம், அவசியமற்றது என்ற சிறப்பு பட்டிமன்றம் இடம்பெறும்.(இ

# பரிசளிப்பு நிகழ்வும் நிறுவுநர் தினமும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.புங்குடுதீவு ஸ்ரீ சித்தி விநாயகர் மகா வித்தியாலய பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் தம்பியான் கென்றிநீசன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இளங்கோ, சிறப்பு விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார், கௌரவ விருந்தினராக சிற்பக் கலைஞரான பழைய மாணவன் கோ.தாகூர் ஆகியோரும் கலந்து கொள்வர். இ

# சிறுவர் நாடகத் தொடர்-03

(யாழ்ப்பாணம்)

செயல் திறன் அரங்க இயக்கமும் யாழ். பொதுசன நூலகமும் இணைந்து நடத்தும் சிறுவர் நாடகத் தொடர் 03 நாளை வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ். பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

இதில தே.தேவானந்தின் "பசுவும் புலியும் அரங்கில் சந்தித்தால் என்ன நடக்கும்?" நாடகம் இடம்பெறும்.

இலவசமாக இடம்பெறவுள்ள இந்த சிறுவர் நாடகத்தில் சிறுவர்கள் மற்றும் ஆர்வலர்கள் கலந்துகொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)



உடுவில் ஞானவைரவர் ஆலயத்தின் சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டம் அண்மையில் ஆலய வளாகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டதுடன், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் தெற்கு (சுன்னாகம்) பிரதேசசபைத் தவிசாளர் க.தர்ஷன், வலிகாமம் தெற்கு (சுன்னாகம்) பிரதேசசபை உறுப்பினர் திருமதி யோகாதேவி மற்றும் சுன்னாகம் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி செல்வக்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் விருந்தினர்களின் உரைகள், சிறார்களின் கலைநிகழ்ச்சிகள் என்பன இடம்பெற்றதுடன், விருந்தினர்களால் சிறார்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் கந்தையா நடேசு

திதி :– துவாதசி 26.04.2018

மண்ணில் - 1937.06.04 விண்ணில் - 2017.05.07

நேர் கொண்ட பாதையிலே
எமை சீர் கொண்டு செல்ல வைத்து
பார் போற்ற வழி காட்டிய
அன்பான எம் தந்தையே
ஈர விழியுடனே
ஓராண்டு கடந்ததுவே....
அன்பான உம் முகம் காண
நிதம் நிதம் தவிக்கிறோம்
வருவீரோ எம் மனக் குறை தீர்க்க



அம்பனை,
சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.

- குடும்பத்தினர்

# தமது பூர்வீக மண்ணிற்கு மீளவும் திரும்பியுள்ள மக்களுக்கு அடிப்படை வசதி செய்யப்பட வேண்டும்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் வலியுறுத்து





(கண்டாவளை)

வெள்ளைக்கொடியுடன் கடந்த 23 ஆம் திகதி மீன்பிடி வள்ளங்களில் பயணித்த இரணைதீவு மக்கள் இரணை மாதா தேவாலயத்தில் தஞ்சமடைந்து நேற்றைய தினம் மூன்றாவது நாளாகவும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

தேவாலயத்தில் தங்கியுள்ள மக்கள் தமக்கான உணவுகளை அங்கேயே தயாரித்துள்ளனர்.

தாம் அங்கு செல்லும் போது கடற்படையினர் எதிர்ப்பு தெரிவிப்பர் என எண்ணியிருந்தபோதிலும் தமக்கு கடற் படையினரால் எவ்வித எதிர்ப்புக்களும் ஏற்படுத்தப் படவில்லையென இரணைதீவு பிரஜை தெரிவிக்கின்றார்.

இதேவேளை குறித்த இரணைதீவுக்கு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் சென்றிருந்தார். அவர் மக்களுடன் உரையாடிய தன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

தமது பூர்வீக மண்ணிற்கு மீளத் திரும்பி வந்துள்ள இவர்களுக்கான அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேவேளை மக்களின் குறைகளைக் கேட்டறிய இது வரை எவரும் முன்வரவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இரவு வேளையில் தங்கியிருந்தவர்களில் அதிகமானவர்கள் பெண்களாக உள்ளமையால் அவர்களுக்கான அடிப்படை தேவைகள் பல உள்ள நிலையில் அவர்கள் இங்கு தங்கியுள்ளதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

இதேவேளை மனிதவுரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் இயக்குநரும், சட்டத்தரணியுமான இரட்ணவேலும் அங்கு மக்களின் நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

குறித்த பகுதியில் அமைக்கப்பட்ட வீடுகள் உள்ளிட்டவை திட்டமிட்டு மக்கள் மீண்டும் வாழ முடியாத அளவிற்கு உடைக்கப்பட்டுள்ளன. பயன்தரும் மரங்கள் மனித செயற்பாட்டினால் அழிக்கப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிவதாகவும் அவர் கருத்துத் தெரிவித்தார்.

மீள தமது முயற்சியினால் குறித்த பகுதியில் தஞ்சமடைந்துள்ள இந்த மக் களுக்கான அனைத்து வசதிகளும் ஏற்படுத்தி கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதேவேளை வைத்தியசாலை, பாடசாலை விடுதிகள் உள்ளிட்ட அனைத்தும்மீள அபிவிருத்தி செய்யப்பட்டு மக் களுக்கு கையளிக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-315)




# வவுனியா நகரசபை கன்னி அமர்வும் உறுப்பினர்கள் வரவேற்பு நிகழ்வும்



(பனிக்கன்குளம்)

வவுனியா நகரசபைக்கு தெரிவு செய்யப்பட்ட நகராட்சி மன்ற உறுப்பினர்களை வரவேற்கும் நிகழ்வு நகரசபை நகரமண்டபத்தில் நேற்றுக் காலை 9.15 மணியளவில் வவுனியா நகரசபை செயலாளர் இ.தயாபரன் தலைமையில் நடைபெற்றது.

நகரசபை உறுப்பினர்கள், வவுனியா நகரசபைக்கு தெரிவு செய்யப்பட்ட தவிசாளர் இ.கௌதமன், உப தவிசாளர் உள்ளிட்ட 21 உறுப்பினர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர்.

இந் நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரேஸ்குமார், வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, வடக்கு மாகாண சபை உறுப்பினர் தியாகராஜா, முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் செந்தில் நாதன் மயூரன், வர்த்தக சங்க பிரதிநிதிகள், பௌத்த மற்றும் கிறிஸ்தவ மதத் தலைவர்கள், நகரசபை ஊழியர்கள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், நகராட்சிமன்ற உறுப்பினர்களின் உறவினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து முதலாவது கன்னி அமர்வு நேற்று முற்பகல் 11.30 மணியளவில் நகர சபை தவிசாளர் இ.கௌதமனின் தலைமையில் வவுனியா நகரசபை செயலாளர் ஆர். தயாபரன் பங்குபற்றலுடன் நடைபெற்றது.

முதல் அமர்வில் உப தவிசாளர் உட்பட அனைத்து உறுப்பினர்களும் நகரசபையின் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் வவுனியாவை எவ்வாறு முன்னேற்றப் பாதைக்குக் கொண்டு செல்வது, சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு என பல்வேறு விடயங்கள் தொடர்பாக உரையாற்றினர்.

அத்துடன் நிகழ்ச்சி நிரலில் சில விடயங்கள் உள்ளடக்கப்படவில்லை என சில அங்கத்தர்வாகளால் சுட்டிக் காட்டப்பட்டதுடன் குறித்த காலப்பகுதிக்கு முன்னர் சபை அமர்வுகளுக்கான அழைப்புகளோ நிகழ்ச்சி நிரல்களோ வழங்கப்படவில்லை எனவும் சுட்டிக் காட்டப்பட்டது.

எனினும் நிகழ்ச்சி ஒழுங்கமைப்புகள் மற்றும் அழைப்பிதழ்கள் தொடர்பாக செயலாளரே மேற்கொண்டமையினால் செயலாளரின் விளக்கம் கோரப்பட்டிருந்தது.

இதன்போது செயலாளர் சில தவறுகள் இடம்பெற்றுள்ளதை ஏற்றுக்கொண்டதுடன் இனிவரும் காலங்களில் இவ்வாறான நிலை ஏற்படாது என தெரிவித்தார்.

அதற்குமப்பால் உறுப்பினர்கள் சிலரால் தவிசாளர் இவ்விடயங்கள் தொடர்பாக கரிசனை கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் சபையினால் மக்களுக்கு செய்யப்படும் அனைத்து நல்ல விடயங்களுக்கும் கட்சி பேதமின்றி ஒத்துழைப்பு வழங்குவோம் என அனைத்து உறுப்பினர்களும் கருத்துத் தெரிவித்தனர்.

இந் நிலையில் தமிழ்த் தேசிக்கூட்டமைப்பின் உறுப்பினர்களும் நகரசபையின் மக்கள் பணிக்கு சிறந்த ஒத்துழைப்பை வழங்குவோம் என தெரிவித்ததுடன் விரோதமான செயற்பாடுகளுக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தவும் பின்னிற்க மாட்டோம் எனவும் தெரிவித்தனர்.

அத்துடன் மக்கள் ஆணையை அதிகளவில் பெற்று சபைக்கு வந்த தாம் மக்களின் அபிலாசைகளுக்கு எதிராக சபை முடிவுகள் அமையுமானால் அதனை துணிந்து எதிர்போம் எனவும் சபை அமர்வில் வெளிப்படுத்தியிருந்தனர். (2-250-281)

# கேப்பாபிலவு தேக்கமர வனப்பகுதியில் மீண்டும் தீ!



(பனிக்கன்குளம்)

கேப்பாபிலவு படைமுகாம் வாயில் அமைந்துள்ள அண்மித்த பகுதியிலுள்ள தேக்கங்காட்டு வனப்பகுதியில் நேற்று மதியம் தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

நேற்றைய தினம் இரண்டாவது தடவையாக தீ பரவியுள்ளது. கடும் வெய்யில் காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என தெரிய வந்தாலும் தேக்க மரஞ் சோலைகளின் கீழுள்ள காய்ந்த இலைகள் மற்றும் பற்றைகள் தீயில் எரிந்து சாம்பலாகியுள்ளன. அருகில் உள்ள படைமுகாம்களின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு படையினர் தீயை கட்டுப்படுத்தும் நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இதில் குறிப்பாக சுமார் 50 இற்கும் மேற்பட்ட 59 ஆவது படைப் பிரிவினர் ஈடுபட்டு நீர்த்தாங்கிகள் கொண்டு நீரினை பாய்ச்சி குறித்த தீயைப் பரவவிடாமல் கட்டுக்குள் கொண்டுவந்துள்ளதாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது. (2-281)

# பெரிய பரந்தனில் அமைப்பதற்குத் திட்டமிடும் மதுபானசாலைக்கு மக்கள் மீண்டும் எதிர்ப்பு

## கரைச்சிப் பிரதேச செயலரிடம் மகஜர் கையளிப்பு



(பரந்தன்)

கிளிநொச்சி பெரிய பரந்தனில் புதிய மதுபானசாலை அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதேச மக்கள் மீண்டும் கரைச்சிப் பிரதேச செயலாளருக்கு மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

நேற்று கரைச்சிப் பிரதேச செயலகத்திற்கு சென்ற பிரதேச மக்கள், அமைப்புகளின் பிரதிநிதிகள் கரைச்சி பிரதேச செயலாளர் த.முகுந்தனிடம் குறித்த மகஜரை கையளித்துள்ளனர். மகஜரினைப் பெற்றுக்கொண்ட கரைச்சிப் பிரதேச செயலாளர் த.முகுந்தன் இவ் விடயம் தொடர்பில் எதிர்வரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டு முடிவுகள் எட்டப்படும் எனத் தெரிவித்துள்ளார்

பத்துக்கு மேற்பட்ட பொது அமைப்புக்கள் கையொப்பம் இட்டு மீண்டும் குறித்த மகஜர் கையளிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

எனவே குறித்த மதுபானசாலை விடயத்தில் பிரதேச மக்களின் ஒட்டுமொத்த உணர்வுகளையும் கருத்தில் கொண்டு அதற்கான அனுமதியை வழங்காது இருக்க வேண்டும் என மக்கள் சார்பாக பிரதேச மக்கள், அமைப்புகளின் பிரதிநிதிகள் தொடர்ந்தும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (2-312)

# வெதுப்பகத்தை மூடி புனரமைத்து திறக்குமாறு நீதிமன்று உத்தரவு

(மல்லாவி)

மல்லாவி பொது சுகாதார பரிசோதகர் பிரிவிலுள்ள தேறாங்கண்டல் கிராமத்தில் சுகாதார விதிமுறைகளை மீறி வெதுப்பகப் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்த வெதுப்பகம் ஒன்று மல்லாவி பிரதேச சுகாதார பரிசோதகர் தலைமையிலான சுகாதார அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் பரிசோதனை நடவடிக்கைகளின் போது கண்டு பிடிக்கப்பட்டு வெதுப்பக உரிமையாளர் மீது வழக்குத் தாக்கல் செய்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி செல்வநாயகம் - லெனின்குமார் முன்னிலையில் முற்படுத்திய போது வெதுப்பக உரிமையாளர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 33 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதித்ததுடன், வெதுப்பகத்தை மூடி புனரமைப்புச் செய்த பின்னர் மீளவும் திறக்குமாறு நீதிபதி உத்தரவை பிறப்பித்துள்ளதாக மல்லாவி பிரதேச பொது சுகாதார பரிசோதகர் தினேஷ் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று புதன்கிழமை காலை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் அமர்வுகள் துணுக்காய் சுற்றுலா நீதிமன்றத்தில் நடைபெற்ற போது இடம் பெற்றுள்ளது. (2-15)

# கலந்துரையாடல்

(பூநகரி)

பூநகரி பிரதேச மட்டத்திலுள்ள சிறுவர் அபிவிருத்திக் குழுக்களுக்கும் பால் நிலை சமத்துவம் தொடர்பான அபிவிருத்திக் குழு உறுப்பினர்களுக்குமான கலந்துரையாடல் இன்று முற்பகல் 10 மணிக்கு பூநகரி பிரதேச செயலர் சி. ச. கிருஷ்ணேந்திரன் தலைமையில் பூநகரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இக் கலந்துரையாடலில் பூநகரி பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பூநகரி பகுதி கிராம சேவையாளர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை கிராம மட்ட அமைப்புக்களையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (2-84)

# மாற்றுத்திறனாளி நடத்திய கடை தீக்கிரையாகியது

(பனிக்கன்குளம்)

செம்மலைப் பகுதியில் மாற்றுத்திறனாளி ஒருவர் நடத்திய சிறிய கடையொன்று தீயில்எரிந்து சம்பலாகியுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

முல்லைத்தீவு 03 ஆம் குறுக்குத்தெரு செம்மலைப் பகுதியில் வசிக்கும் நாகேந்திரம் அமராவதி(வயது-60) என்ற மாற்றுத்திறனாளியான வயோதிப தாயாரொருவர் தனது வாழ் வாதாரத்திற்காக வீதி ஓரம் வைத்து நடத்திய கடையொன்று தீயில் எரிந்து நேற்று முன்தினம் இரவு சாம்பலா கியுள்ளது.

பிரஸ்தாப தாயார் போரில் பாதிக்கப்பட்டு உடல் காயங்களுக்கு உள்ளான நிலையில் குறித்த சிறிய கடையை நடத்தி தனது வாழ்வாதாரத்தை கொண்டு நடத்திவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# காணிகளை துப்புரவு செய்யத் தவறின் காணியின் பெறுமதியில் இரண்டு வீதம் குற்றப்பணமாக அறவிடப்படும்

## கரைச்சி பிரதேசசபை தலைவர் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி நகர அபிவிருத்தி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு நோய் பரவக்கூடிய இடங்களாகப் பராமரிப்பின்றி பற்றைக்காடுகளாக காணப்படுகின்ற காணிகளை அதன் உரிமையாளர்கள் அல்லது பராமரிப்போர் உடனடியாக துப்புரவு செய்யுமாறு கரைச்சி பிரதேசசபை தலைவர் அ.வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பல பகுதிகளில் பராமரிப்பின்றி காணப்படுகின்ற காணிகள் மற்றும் கைவிடப்பட்ட கட்டடங்களுக்குள் சமூகவிரோதச் செயல்கள் இடம்பெறுவதுடன், டெங்கு நோய் பரவக்கூடிய சூழல் காணப்படுவதாகவும் பல்வேறு தரப்புக்களும் சுட்டிக் காட்டி வருகின்றனர்.

கிளிநொச்சி கரைச்சிப்பிரதேச சபையின் நகர அபிவிருத்தி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உரிமையாளர்கள் இருந்தும் காணிகள் பராமரிக்கப்படாத மற்றும் பற்றைக் காடுகள் வளர்ந்து காணப்படுகின்றது. அத்துடன் சமூகவிரோதச்செயல்கள் இடம் பெறுகின்றன.

இவ்வாறான காணிகளுக்குள் டெங்கு நோய் பரவக்கூடிய சூழல்களும் காணப்படுகின்றன.

அதாவது, இந்தக்காணிகளுக்குள் காணப்படுகின்ற வெற்றுப்போத்தல்கள், பியர் ரின்கள், கோம்பைகள், நீர் தேங்கக்கூடிய சேதமடைந்த பாத்திரங்கள் என்பன காணப்படுகின்றன. இதேவேளை இந்தக்காணிகளில் சமூக விரோதச் செயல்களும் இடம் பெற்று வருகின்றன.

எனவே இக்காணிகளை அதன் உரிமையாளர்கள், பராமரிப்பாளர்கள் உடனடியாக துப்புரவு செயவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு துப்புரவு செய்யத்தவறின் காணியின் பெறுமதியில் இரண்டு வீதம் குற்றப்பணமாக அறிவிடப்படுவதுடன், சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டு காணிகள் துப்புரவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கரைச்சிப் பிரதேச சபை தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# இராணுவம் உறுதியளித்த காணிகள் இதுவரை விடுவிக்கப்படவில்லை

## பாதிக்கப்பட்ட மக்கள் ஆதங்கம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்கு முன்பாக படையினரின் ஆக்கிரமிப்பில் இருக்கின்ற பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளை மூன்று மாதகாலத்திற்குள் விடுவிப்பதாக இராணுவம் உறுதியளித்த காணிகள் இதுவரை விடுவிக்கப்படவில்லை. இதனால் தாங்கள் தொடர்ந்தும் வாடகை வீடுகளில் வாழ்வதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்கு முன்பாக ஏற்கனவே பொன்னம்பலம் ஞாபகார்த்த வைத்தியசாலை அமைந்திருந்த பகுதியில் பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளை விடுவிக்கக்கோரி வரும் அதன் உரிமையாளர்கள் கடந்தஎட்டுவருடங்களுக்குமேலாக பெரும் துன்பங்களுக்கு மத்தியில்தாம் வாழ்வதாகவும் தமது காணிகளை விடுவிக்குமாறு கோரியுள்ளனர்.

682ஆவது படைப்பிரிவின் கட்டுப்பாட்டின்கீழுள்ள மேற்படி காணிகள் விடுவிப்பது தொடர்பில் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி படைத்தரப்பால் தமக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளின் அடிப்படையில் முதற்கட்டமாக 7.2 ஏக்கரை விடுவிப்பதாகவும் மூன்று மாத கால இடைவெளிக்குள் பத்து ஏக்கர் காணியை விடுவிப்பதாகவும் ஆறு மாத காலத்திற்குள் மூன்றாம் கட்டமாக எஞ்சியிருக்கின்ற காணிகளை விடுவிப்பதாகவும் படைத்தரப்பால் உறுதியளிக்கப்பட்ட போதும், முதற்கட்டமாக விடுவிக்கப்பட்ட காணி தவிர ஏனைய காணிகள் எதுவும் விடுவிக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. தமது காணிகளை விடுவிக்க அரசாங்கம் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)





வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனின் மாகாணசபை நிதியொதுக்கீட்டின் கீழ் சாதிக்கும் சந்ததி என்ற செயற்றிட்டத்தின் ஊடாக முல்லைத்தீவு மாவட்டத்தில் வறுமைக்கோட்டிற்குட்பட்ட மற்றும் போரில் பாதிக்கப்பட்ட குடும்பங்களிலுள்ள பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக முதற்கட்டமாக 100 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்வு கள்ளப்பாட்டிலுள்ள பொதுநோக்கு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற போது..

(படம்-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# கனரக இயந்திரங்களினால் இருட்டுமடுவில் சட்டவிரோதமாக காடுகள் அழிப்பு

## தடுத்து நிறுத்துமாறு கோருகின்றார் வடக்கு மாகாண சபை உறுப்பினர்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுதந்திரபுரம் கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட இருட்டுமடு கிராமத்திலுள்ள ஆற்று வாய்க்காலிற்கு மேற்பக்கமாக பல ஏக்கர் காடுகள் சட்டவிரோதமான முறையில் கனரக இயந்திரங்களின் உதவியோடு அழிக்கப்படுவதாகவும் இது தொடர்பில் எதிர் வரும் நாட்களில் நடைபெறும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கவுள்ளதுடன் சட்டவிரோத காடழிப்பை நிறுத்துமாறும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

இதேவேளை மக்களால் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரனுக்கு முறையிடப்பட்டத்தை அடுத்து குறித்த இடத்தை பார்வையிட்ட உறுப்பினர் ஊடகத்துக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

சுதந்திரபுரம் கிராம சேவையாளர் பிரிவிற்கு உட்பட்ட இருட்டுமடு கிராமத்திற்கு அண்மைய காட்டுப்பகுதியில் மூங்கிலாற்றின் நிலப்பரப்பில் ஆற்றோரங்களில் இருக்கக் கூடிய காடுகள் இனம் தெரியாதவர்களினால் அழிக்கப் பட்டுக் கொண்டிருக்கின்றன.

கிராம மக்கள் கனரக இயந்திரங்கள் கொண்டு சட்டவிரோதமான முறையில் யாரோ காடு அழிக்கின்றார்கள் என்று முறைப்பாடு செய்துள்ளார்கள். அந்த முறைப்பாட்டிற்கு அமைவாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலருடன் தொடர்பு கொண்டு வினவியபோது, அது தொடர்பில் தனக்கு எந்தவிதமான தகவலும் கிடைக்கவில்லை என்று தெரிவித்துள்ளார். இந்நிலையில் பிரதேச செயலாளருக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளேன்.

குறித்த பகுதியில் சட்டவிரோதமாக காடழிப்பு இடம் பெறுவதால் உரியமுறையில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தேன்.

இவ்வாறு காடுகளை அழிக்க முடியும் என்றால் மறுபக்கத்தில் சிறைட்டை பறிச்சான் குளத்தின் கீழ் அனுமதிப்பத்திரத்துடன் இருக்கின்ற காணிகளில் காடுகளை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். எதிர்வரும் நாட்களில் நடைபெறும் பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் இது தொடர்பில் தெரிவித்துள்ளதுடன் சட்டவிரோத நடவடிக்கைகளை உடன் நிறுத்த வேண்டும் என்றும் நான் கோருகின்றேன். (2-281)

# தானியங்கி புகையிரதக் கடவைகளை அமைத்து உயிரிழப்புக்களை நிறுத்துங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி அறிவியல் நகர் தொடக்கம் பச்சிலைப்பள்ளி முகமாலை வரைக்குமான பகுதிகளில் ஏ-9 வீதியில் இருந்து புகையிரத வீதியைக்குறுக்கறுத்துச் செல்லும் 38 இற்கும் மேற்பட்ட வீதிகள் காணப்படுகின்றன.


இவ்வாறு காணப்படும் வீதிகளில் 13 வரையான வீதிகளே பாதுகாப்பு கடவைகள் அமைந்த வீதிகளாகக் காணப்படுகின்றன.

ஏனைய வீதிகள் பாதுகாப்பற்ற மிகவும் ஆபத்தான வீதிகளாகவே காணப்படுகின்றன.

குறித்த வீதிகள் இவ்வாறு காணப்படுவதனால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதுடன் உயிரிழப்புக்கள்கூட இடம் பெறுகின்றன.

எனவே குறித்த வீதிகளுக்கு தானியங்கி புகையிரதக் கடவைகளை அமைக்க வேண்டும் என பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் போக்குவரத்து அமைச்சுக்கு கடந்த ஆண்டில் கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது (2-315)



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தேசிய ரீதியிலும் மாவட்ட ரீதியிலும் கடந்தாண்டு நடத்தப்பட்ட இந்து சமய அறநெறி பாடசாலை மாணவர்களுக்கான தேசிய ஆக்கத்திறன் நிகழ்வில் சிறப்பான திறன்களை வெளிப்படுத்திய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் வவுனியா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் நடைபெற்ற போது...

# முல்லைத்தீவு நீதிமன்றம் விடுக்கும் விசேட அறிவித்தல்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தின் செயற்பாடுகள் எதிர்வரும் மேமாதம் 7ஆம்திகதி நடைபெறாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் அரசவிடுமுறை தினமாகையால் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றின் செயற்பாடுகள் நடைபெறாது என்றும் அன்று தவணையிடப்பட்ட வழக்குகள் யாவும் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி நீதிமன்றில் அழைக்கப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றின் பதிவாளர் அறிவித்துள்ளார்.

குறிப்பாக எதிர்வரும் 7ஆம் திகதி தவணையிடப்பட்ட வழக்குகள் இந்தத் தகவல் ஊடாக எதிர்வரும் முதலாம் திகதி நீதிமன்றில் நடைபெறும் என அவர் அறிவித்துள்ளார்கள். (2-281)

# கலைத்தரிசனம்



**❖ புராண இலக்கியங்கள் பாடுவதில் அதி சிறந்த ஒருவராகத் திகழ்கின்றீர்கள். இந்தப் புராண இலக்கியங்கள் மீது உங்களுக்கு எவ்வாறு ஆர்வம் ஏற்பட்டது?**

நான் ஆறுமாதக் குழந்தையாக இருக்கும் போது எனது தந்தையார் இறந்து விட்டார். எனது மாமியார் தான் என்னை வளர்த்தார். நான் எட்டாம் ஆண்டில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் போது எனது சிறிய தந்தையார் தனது விவசாயத் தொழில் உதவிக்காக பாடசாலையிலிருந்து நிறுத்தி தனக்கு உதவிக்கு என்னைக் கூட்டிச் செல்வார். நானோ பாடசாலையை நினைந்து அழுவேன். சாப்பிடாமல் இருப்பேன். அப்போது எனது மாமியார் என்னைத் தேற்றி நீ எட்டாம் வகுப்பு வரை படித்திருக்கிறாய். கெட்டிக்காரன் தானே. கவலைப்படாதே புராணங்களை வீட்டிலிருக்கும் போது படி. அது இம்மைக்கும் மறுமைக்கும் உதவும் என்றார். நானும் அன்றிலிருந்து சிவபுராணம், கந்தபுராணம், திருவிளையாடல் புராணம் போன்ற நூல்களை ஒரு வருடம் தொடர்ச்சியாக வாசிப்பேன். அரும்பெரும் பொக்கிஷங்களாகவும் நம் பண்பாட்டுக்கும் கலாசாரத்திற்கும் ஆணிவேராகவும் விளங்குவது நமது புராண நூல்கள். நான் முதன் முதலாகப் படித்த கதை பசுவின் கதை. அந்தக் கதையில் உயிர்களிடத்தில் அன்பு செலுத்துவதைக் கற்றுக்கொள்ள முடிகின்றது. ஒவ்வொரு புராணங்களும் கதைகளும் மனிதனை மனிதனாக்க உதவின. எழுத்து நடைகள் சுவாரசியத்தைத்தர மேலும் அதில் நாட்டம் ஏற்பட்டது.


**❖ ஓலைச் சுவடிகளில் எழுதுவது மிகக் குறைந்து அவை அச்சுக்களில் வெளிவருகின்ற இக்காலத்திலும் தாங்கள் ஓலைச் சுவடிகளில் எழுதி வருகின்றீர்கள். இது பற்றி?**

தாள்கள், அச்சு இயந்திரங்கள் கண்டு பிடிக்கப்படுவதற்கு முன்னர் எமது முன்னோர்கள் ஓலைச் சுவடிகளில் தான் இலக்கண, இலக்கியங்கள் மற்றும் புராணங்கள், இதிகாசங்கள் என்பனவற்றை எழுதிப் பாதுகாத்தனர்.

பின்னர் நவீன காலத்தில் நூல் வடிவிற்கு மாற்றப்பட்டது. ஓலைச்சுவடிகளில் எழுதுவதற்கு எவ்வளவு கஷ்டப்பட்டு இருப்பார்கள். ஓலைச்சுவடியில் எழுதுவதற்கு நான் எவ்வளவோ கஷ்டப்பட்டுக் கற்றுக்கொண்டேன். மரபு ரீதியான விடயங்களை நாங்கள் பயன்படுத்தாமல் விட்டால் எமது எதிர்காலச் சந்ததியினர் ஓலைச்சுவடி என்றால் என்ன என்றே தெரியாத நிலை ஏற்பட்டு விடும். எமது பழைமையை நாம் விலக்கி விட முடியாது. எழுதுகோலால் எழுதுதாளில் விரைவாக எழுத முடியும். ஆனால் எழுத்தாணியால் ஓலையில் எழுதும் போது நிதானம், பொறுமை, தூய சிந்தனை என்பன அவசியம். இவை இல்லாத காரணத்தினால் எமது பண்பாடே மாறிவிட்டது. அம்மனின் சின்னங்களாக உருக்கு, பிரம்பு, சிலம்பு, ஏடு, அம்மானைக்காய், வேப்பம் பத்திரி என்பனவற்றைக் குறிப்பிடலாம். ஆலயத்தில் ஏடு படிக்கின்ற போது இதய சுத்தியுடன் பாடுவோம். அப்போது கடவுளின் அருளும் கிடைக்கின்றது. நான் இன்றும் ஏடு எழுதுவதற்குக் காரணம் கடவுளின் ஆசீர்வாதமும் மனநிறைவும்தான்.

**❖ தாங்கள் 2002 ஆம் ஆண்டு சிலப்பதிகாரத்தை ஓலைச்சுவடியில் எழுதி வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு வழங் கியுள்ளீர்கள். இவ்வாறு நீங்கள் எழுதத் தூண்டிய சம்பவம்?**

உமையம்மன் கலியுகத்தில் ஆருமறியா வண்ணம் மானிட அவதாரம் கொண்டு கலியினால் கஷ்டப்படும் மானிடர்களின் துயர் தீர்த்தருள் புரிந்த இவ்வரலாற்றை, சிவசிந்தனை கொண்டவரும் இதிகாசவேத புராணங்கள் கற்றவருமான காங்கேயப் புலவரிடம் தனது சிலம்பின் அதிகாரமும் நான் மானிட அவதாரம் மதுரையில் கொண்டதும் கலியுகத்தில் மக்களுக்கு அருள் புரிந்ததும் கூறி இதைச் சிலப்பதிகாரம் எனும் தலைப்பில் ஏட்டில் எழுதியவரும் தெரிந்து கொள்ளும் படிக்கு செய்ய வேண்டும் என்று அருள் கொடுத்து மறைந்துள்ளார். இந்த அருள்மொழி கேட்ட புலவர் தமக்குக் கிடைத்த இன்பமே இன்பமென்று கூறியதுபோல் எழுதினார். இதைத் தொடர்ந்து நயினாப் பளிக்கர் புலவர் அம்பாள் மேல் கொண்ட பக்தி விசுவாசத்துடன் எழுதியுள்ளார். இவ் ஏட்டுப் பிரதியின்படி ஏடுகள் எக்காலத்திலும் இருக்க வேண்டுமென்ற சிந்தனையொன்று குடாரப்பூர் வெற்றிவேற் புலவர் இவ் ஏட்டுப் பிரதியின்படி எழுதினார். இதனைத் தொடர்ந்து பல பெரியவர்கள் எழுதினார்கள். அரியான் பொய்கை செல்லக் குட்டிப் புலவர் ஏட்டினை எழுதி வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் பொங்கலுக்கு முதல் திங்களில் விளக்கேற்றி சிலப்பதிகாரத்தை படிக்க ஆரம்பித்து பொங்கல் குளிர்ச்சியென்று நிறைவு பெறும். இந்த ஏட்டை எல்லாரும் வாசிக்க முடியாது. ஏனெனில் குற்றுப் போடாமல் எழுதப்பட்டது. இவரின் ஏட்டுப் பிரதியின்படி குற்றுப் போட்டு 2002 ஆம் ஆண்டு பங்குனி உற்சவம் அன்று எழுதத் தொடங்கி 2003 ஆம் ஆண்டு பங்குனி உற்சவம் அன்று ஆலயத்தினருக்குக் கையளித்தேன். புலவர் அரியான் பொய்கை செல்லக்குட்டி இல்லாத காலத்தில் ஏடு படிப்பதற்கும் எழுதுவதற்கும் ஆளில்லையே என்று நினைந்து கொண்டிருக்க ஆலய நிர்வாகத் தலைவர் எழுதித் தரும்படி கேட்டதற்கு இணங்கவும் அம்பாளை வேண்டி எழுதி முடித்தேன்.



## முதுபெரும் கலைஞர் கோயிலார் சிவசாமி ஐயா அவர்களுடனான சந்திப்பு

**ஏட்டுப் பிரதி எழுத்தாளரும் ஏட்டுப்பிரதி வாசிப்பாளரும் புராண, இதிகாசங்களை ஓதுகின்றவருமான இவர் 1934 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் மூன்றாம் திகதி முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பில் பிறந்தார். கோயிலார்-தெய்வானை தம்பதியரின் மூத்த மகனான இவர் சிறு வயதிலேயே சிவபுராணம், கந்தபுராணம், திருவிளையாடல் புராணங்களைப் படித்து அதில் மிகத்தேர்ச்சி பெற்றார். 2002 ஆம் ஆண்டு சிலப்பதிகாரத்தை ஏட்டுப் பிரதியாக எழுதி 2003 இல் வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்திற்குக் கொடுத்தார். 84 வயதான இவர் தற்போதும் ஓலைச் சுவடிகளில் புராண இலக்கியங்கள், சமகால இலக்கியங்களையும் எழுதிய வண்ணம் உள்ளார். 1995 ஆம் ஆண்டிலிருந்து கண்ணகை அம்பாளின் காவியத்தில் ஒரு சில கருத்துக்களைச் சொன்னாலே அவரின் மனம் நெக்குருக கண்களிலிருந்து கண்ணீர் சொரிந்து விழும். அவ்வளவிற்கு அம்பாள் மீது ஆழ்ந்த பக்தி கொண்டவர். ஏட்டுப் பிரதி முறைமை அழிந்து விடக் கூடாது என்பதற்காக ஏடு எழுதும் பழக்கத்தைப் பயிற்றுவித்து வருகின்றார். இவர் முல்லைத் தீவு மாவட்டச் செயலகத்தினாலும் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்தினாலும் பலமுறை கௌரவிக்கப்பட்டார். பன்னிரண்டு பிள்ளைகளின் தந்தையரான முதுபெரும் கலைஞர் கோ.சிவசாமி ஐயா அவர்கள் தன்னைப் பற்றியும் தன் இலக்கியப் பணி பற்றியும் மனந்திறந்து கூறியவை வலம்புரியில் பிரசுரமாகின்றது.**

**❖ 2136 ஓலைகளில் சிலப்பதிகாரத்தை எழுதியுள்ளீர்கள். அந்த அனுபவத்தைப் பற்றிக் கூறுங்கள்?**

2002 ஆம் ஆண்டு பங்குனி உற்சவத்தில் எழுதத் தொடங்கினேன். பத்தாவது நாளில் எனது கை பெரிதாக வீங்கி விட்டது. நான் மனதிற்குள்ளும் வெளியிலும் அழுகின்றேன். கண்ணீர் எம் மேனியை நனைக்கின்றது. நான் எப்படி இவற்றையெல்லாம் எழுதி முடிக்கப் போகிறேன். பத்து ஓலை எழுதி முடிக்க முன்னதே கை வீங்கி விட்டதே என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கும்போது தத்ரூபமாக கண்ணகை அம்மன் தனது கோலத்துடன் வந்து "ஏன் கவலைப்படுகிறாய்? ஏடு எழுதி முடிந்துவிட்டது" என்று கூறினார். உடனே கண்ணீரைத் துடைத்துவிட்டு அந்த உற்சாகத்துடன் எழுதத் தொடங்கினேன். எழுதிக் கொண்டிருக்கும்போது மனைவியரும் அருகில் இருப்பார். தேநீர், சாப்பாடு தருவார். நான் அதையெல்லாம் பொருட்படுத்தாது ஏடு எழுதி முடிப்பது தான் எனது நோக்கமாக இருந்தது ஆயிரத்திற்கு மேற்பட்ட ஓலையைத் தெரிவு செய்தேன். அதில் மொழி இல்லாத நல்ல ஓலைகள் 286 இல் எழுதினேன். அந்த ஓலைச்சுவடியில் கடவுள் வணக்கம், பாயிரம், பாண்டியன் அரசிருப்பு, கண்ணகை அம்மன் திருவவதாரம், கோவலனார் அவதாரம், கண்ணகை அம்மன் திருக்கரத்த மர்தல், தூரியோட்டம், கடலோட்டக்காதை, வெடியரசன் போர்க்காதை, நீலகேசரி புலம்பல், வீர நாரணன் வருகை, பாதாள லோகமும் மீகாமனும், வீரநாரயணன் போர், விளங்கு தேவன் போர், கண்ணகை அம்மன் தெய்வத் திருமணக்காதை, அரங்கேற்றுக் காதை, கோவலரைப் பொன்னுக்கு மறித்த காதை, கண்ணகை அம்மன் சிலம்பு கூறல், உயிர் மீட்சிக் காதை, வழக்குரைக்காதை, மதுரைத் தகனம், கண்ணகை அம்மன் குளிர்ச்சி, காப்பு வெண்பா ஆகிய 21 தலைப்புக்களின் கீழ் ஓலைச்சுவடியில் எழுதினேன். ஓலைகள் நீளம் 40 சென்ரிமீற்றர், அகலம் 4 சென்ரி மீற்றர், எழுத்தாணி 14 சென்ரி மீற்றர். 2003 பங்குனி உற்சவம் அன்று ஆலய நிர்வாகத் தலைவர் குகராஸிடம் கையளிக்கச் சென்றேன். அவர் எவ்வளவு பணமென்றாலும் சொல்லுங்கோ தாறோம், எங்களுக்கு ஏடு முக்கியம். சொல்லுங்கோ என்றார். நான் சொன்னேன் இது கண்ணகை அம்மனுக்கு அன்பளிப்பாகத் தாறேன். ஆனால் இரண்டு நிபந்தனைகள் ஏற்பீர்களோ? உடனே ஆம், சொல்லுங்கோ என்றார். எக்காரணம் கொண்டும் அம்மனின் ஆலயத்தை விட்டுப் போகக் கூடாது. மற்றையது எனக்குப் பின்னர் எனது பிள்ளைகள் வந்து அப்பா எழுதின ஏட்டை ஒருக்காக் காட்டுங்கோ என்று கேட்டா காட்டுங்கோ என்றேன். அவரும் அதை ஏற்றுக் கொண்டு எனது ஏட்டை பெற்றுக் கொண்டார்.

அவருக்குச் சரியான சந்தோசம். அதைப் பார்த்துவிட்டு இதேமாதிரி இன்னொரு ஏட்டினையும் எழுதித் தரும்படி கேட்டுக் கொண்டார். அடுத்த வருடம் அந்த ஏட்டினையும் எழுதிக் கொடுத்தேன். என்னை அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்து வ.க.அ. என்று பெயர் பொறிக்கப்பட்ட கணையாழியை அணிவித்தார்கள். ஏடு எழுதி முடிந்தவுடன் பெரிய ஆத்ம திருப்தி ஏற்பட்டது.

**❖ முதுபெரும் கலைஞரான தாங்கள் கலை இலக்கிய உலகிற்கு மனந்திறந்து கூறுவது?**

இறைவன் ஓரறிவு முதல் ஆறறிவு வரை உயிரினங்களைப்படைத்து இவ் வினைகள் முடியும் வரை காத்து திரும்பவும் தனது திருவடியில் அளித்து அருளுகின்றார்கள். இந்த உயிரினங்களில் ஆறறிவுள்ள மனிதப் பிறவி அரிதென்றும், கூன், குருடு, பேடு, செவிடு நீங்கிப் பிறந்த மனிதன் அதிலும் அரிதென்றும் ஞானமும் கல்வியும் பெற்ற மனிதன் அரிதிலும் அரிதென்றும் ஔவையார் கூறுகின்றார். பூமியில் பிறந்த மனிதன் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை எனும் வலையில் சிக்குண்டு ஓடி அலைகின்றான். பகுத்தறிவைவிட்டு ஐம்புலன் வழி சென்று அல்லல்படும் மனிதனுக்கு ஆலயம் நல்வழிகாட்டும்.

மனிதன் தான் எடுத்த பிறவியின் பயனை அடைவதற்கும் நெறிப்பட்ட வாழ்க்கையை அமைப்பதற்கும் ஆலயம் உதவும். எனவே மானிடப் பிறவியெடுத்த ஒவ்வொரு மனிதனும் தூய மனதுடன் ஆலயம் சென்று இறைவனை மனதில் இருத்தி பூசித்தால் இறையருள் கிட்டும். தினமும் பிரார்த்தனை செய்யும் போது நமக்கு ஒரு பெரிய சக்தி கிடைக்கிறது. மன உளைச்சல் பிரச்சினைகள் நீங்கி, ஊக்கம், நம்பிக்கை, ஆற்றல் போன்றவற்றைக் கொடுகின்றது.

நேர்காணல்:
ஜெயம் ஜெகன்

# மணமகள்கள் தேவை



↘ பி.திகதி: 25.11.1986, தொழில்: M.B.B.S, நட்சத்திரம்:பூரம் 2ஆம் பாதம், செவ்வாய் 11இல், கிரகபாவம்: 33, மதம் இந்து

எதிர்பார்ப்பு: மெல்லிய உருவ அமைப்புள்ள தமிழ் பண்பாட்டை மதித்து நடக்கும் அழகிய மணமகள், வயது 25இற்கும் 30 இற்கும் இடையில் சீதனம் மணமகள் வீட்டாரின் பொருளாதார நிலைக்கேற்ப சுமுகமாகப் பேசித் தீர்மானிக்கலாம்.

**மணமகன் புகைத்தல், மதுபாவனை இல்லாதவர், இரு சாராரும் தீர விசாரித்து பூரண சம்மதமெனில் திருமண பந்தத்தை மேற்கொள்ளலாம்.**

↘ பி.திகதி: 18.07.1974, சுவிற்சர்லாந்து நிரந்தர பிரஜாவுரிமை, நட்சத்திரம்: திருவாதிரை 4ஆம் பாதம், செவ்வாய் சூரி 8இல், கிரகபாவம்: 53,

அழகிய மணமகள், வயது: 34-38இடையில், சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.

**மணமகன் புகைத்தல் மதுபாவனை இல்லாதவர்.**



↘ பி.திகதி: 03.03.1986, தொழில்: விவசாய போதனாசிரியர் (நிரந்தரம்), நட்சத்திரம்: அனுஷம் 3ஆம் பாதம், செவ்வாய் 8இல், கிரகபாவம்: 55, மதம்: இந்து

மெல்லிய உருவ அமைப்புள்ள தமிழ் பண்பாட்டை மதித்து நடக்கும் அழகிய மணமகள். சீதனம் மணமகள் வீட்டாரின் பொருளாதார நிலைக்கு ஏற்ப சுமுகமாக பேசி தீர்மானிக்கலாம்.

**மணமகன் புகைத்தல், மதுபாவனை இல்லாதவர்.**

(3754)



## தொடர்புகளுக்கு:
## 077 691 9463

---

## ஒட்டுசுட்டான் முத்துஐயன்கட்டு ப.நோ.கூ.சங்கம், வித்தியாபுரம், ஒட்டுசுட்டான்.

# ஏல விற்பனை

ஒட்டுசுட்டான் முத்துஐயன்கட்டு ப.நோ.கூ.சங்கத்தால் கடந்த இடப்பெயர்வின் போது கைவிடப்பட்டு மீளவும் கொண்டுவரப்பட்ட கீழ்க்குறிப்பிடப்படும் பொருட்கள் எதிர்வரும் **03.05.2018ஆம் திகதி** பகிரங்க ஏலத்தில் விடப்பட இருக்கின்றன. அப்பொருட்களினை பெற்றுக்கொள்ள விரும்புவோர் ஏலத்தில் பங்குகொள்ளுமாறு கேட்டுக் கொள்வதோடு பெற்றுக் கொள்ளும் பொருட்களுக்கான பணத்தினை உடன் செலுத்த வேண்டும் எனவும் பொருட்களை பார்வையிட விரும்புவோர் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு நேரில் பார்வையிடலாம். **(மேலதிக தொடர்புக்கு- 021 320 8067, 021 206 1730).**

**பொருட்களின் விபரம்.**

| தொ.இல | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | கன்ரேனர் பெட்டி | 04 |
| 02. | 42=0728 லொறி அடிச்சட்டம் | 01 |
| 03. | 28=0882 லொறி-பழுது | 01 |
| 04. | நீர் இறைக்கும் இயந்திரம் றொபின்-பழுது | 01 |
| 05. | நீர் இறைக்கும் இயந்திரம் வில்லியஸ்-பழுது | 03 |
| 06. | மின் பிறப்பாக்கி-பழுது | 10 |
| 07. | மோட்டார் சைக்கிள் (MB 1489)-பழுது | 01 |
| 08. | றோளர் (பெரிது) அரிசியாலைக்குரியது | 168 |

**பார்வையிடும் காலம்: 26.04.2018-02.05.2018 வரை(அலுவலக நேரங்களில் காலை 9.00 மணி-மாலை 4.00 மணி வரை)**

- கன்ரேனர் பெட்டி 03 திருமுறிகண்டியிலுள்ளது. இதனை ஆலயத்திற்கு அருகிலுள்ள எமது சங்க உணவக முகாமையாளருடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம். (ஏலம் விடப்படும் நேரம்: காலை 9.30 மணி, இடம்-திருமுறிகண்டி)
- கன்ரேனர் பெட்டி 1 ஒலுமடு சந்திக்கு அருகாமையிலுள்ளது. (ஏலம் விடப்படும் நேரம்: பிற்பகல் 12.30 மணி, இடம்: ஒலுமடு சந்தி)
- ஏனைய பொருட்களினை தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம். (ஏலம் விடப்படும் நேரம்: பிற்பகல் 2.30 மணி, இடம்: அரிசியாலை கட்டடம், வித்தியாபுரம், ஒட்டுசுட்டான்).

(சி-2393)

தலைவர்,
ஒட்டுசுட்டான் முத்துஐயன்கட்டு ப.நோ.கூ.சங்கம்,
வித்தியாபுரம்,
ஒட்டுசுட்டான்.

---

# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 15 சூரிசெவ் 3 இல்<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: B/7617 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/7673 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BFA/அரசதொழில்<br>தொ.இ: B/7620 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 27 செவ் 1 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: BSc IT<br>தொ.இ: G/7674 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 39 சூரிசெவ் 12 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L/சாரதி (அரச)<br>தொ.இ: B/7621 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 10 சூரிசெவ் 10 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: HNDTM, BSc/ தனியார் தொழில்<br>தொ.இ: G/7675 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: செவ் 1 இல்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: B/7622 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>உயரம்: 162cm<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/7676 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.




# பேராசிரியை நிர்மலாதேவி வழக்கில் முக்கிய திருப்பம்



(சென்னை)

பேராசிரியை நிர்மலா தேவி வழக்கில் முக்கிய திருப்பமாக மதுரை காமராசர் பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் முருகன் கைது செய்யப்பட்டார். மேலும் தேடப்பட்டு வந்த ஆய்வு மாணவர் கருப்பசாமியும் சிபிசிஐடி பொலிஸாரிடம் சிக்கியுள்ளார்.

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையில் உள்ள தனியார் கல்லூரி மாணவிகளிடம் பாலியல்ரீதியாக பேசியதாக அதே கல்லூரியின் உதவிப் பேராசிரியை நிர்மலாதேவி கைது செய்யப்பட்டார். இவரை சிபிசிஐடி பொலிஸார் 5 நாள் காவலில் எடுத்து விசாரித்தனர்.

அவர் அளித்த வாக்கு மூலத்தின் அடிப்படையில் மதுரை காமராசர் பல்கலைக்கழக மேலாண்மைத் துறை உதவிப் பேராசிரியர் முருகனுக்கும் முனைவர் பட்ட ஆய்வு மாணவர் கருப்பசாமிக்கும் தொடர்பு இருப்பதாக தகவல் வெளியானது

**3 பேரிடம் விசாரணை**

இந்நிலையில், அருப்புக்கோட்டையில் உள்ள சம்பந்தப்பட்ட தனியார் கல்லூரியில் ஆங்கிலத் துறை பேராசிரியை ஹேமலதா மற்றும் 2 பேராசிரியர்களிடம் விருதுநகர் சிபிசிஐடி அலுவலகத்தில் விசாரணை நடைபெற்றது. இதில் ஹேமலதாவிடம் 2ஆம் நாளாக நேற்று முன்தினம் விசாரணை நடத்தப்பட்டது.

இவர்களிடம் நடத்திய விசாரணையில் மேலும் பல தகவல்கள் தெரிய வந்துள்ளதாக சிபிசிஐடி வட்டாரங்கள் தெரிவித்தன.

அதையடுத்து இவ்வழக்கில் முக்கிய நபராகக் கருதப்படும் உதவிப் பேராசிரியர் முருகனை சிபிசிஐடி பொலிஸார் நேற்று முன்தினம் மாலை கைது செய்தனர். அவரை பலத்த பாதுகாப்புடன் சாத்தூரில் உள்ள 2ஆவது நீதித்துறை நடுவர் மன்றத்தில் ஆஜர்படுத்தினர். முருகனை 15 நாள் காவலில் வைக்க நீதித்துறை நடுவர் கீதா [illegible]த்தரவிட்டார். அதையடுத்து மதுரை மத்திய சிறையில் முருகன் அடைக்கப்பட்டார்.

**கதறி அழுத சகோதரி**

விருதுநகர் மாவட்டம் இருக்கன்குடி அருகே உள்ள நெம்மேனியைச் சேர்ந்தவர்தான் உதவி பேராசிரியர் முருகன்.

இவரது தந்தை இறந்துவிட்டார். தாய், 3 சகோதரிகளும் பட்டாசு ஆலையில் பணி புரிகின்றனர்.

மிக ஏழ்மையான குடும்பம் என்பதால் 3 சகோதரிகளின் உழைப்பில் முருகன் படித்தார். இந்தோனேஷியாவிலும், டுபாயிலும் பணியாற்றியுள்ளார்.

கடந்த இரண்டரை ஆண்டுகளுக்கு முன் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் உதவிப் பேராசிரியராக பணியில் சேர்ந்தார்.

இந்நிலையில் நிர்மலா தேவி வழக்கில் முருகன் பிடிபட்டதை அறிந்த அவரது சகோதரி ஒருவர், அழுது புலம்பியவாறு அருப்புக்கோட்டை நகர் பொலிஸ் நிலையத்துக்குச் சென்றார். பின்னர் விருதுநகர் சூலக்கரை பொலிஸ் நிலையம் வந்தார்.

அங்கு முருகன் வைக்கப்பட்டுள்ளதாக நினைத்த அவர், பொலிஸ் நிலையம் முன் உருண்டு புரண்டு அழுதார். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

**சிக்கிய ஆய்வு மாணவர்**

இதற்கிடையே, உதவிப் பேராசிரியர் முருகன் அளித்த தகவலின் அடிப்படையில் முனைவர் பட்ட ஆய்வு மாணவர் கருப்பசாமியை பிடிக்க சிபிசிஐடி தனிப்படை திருச்சுழி சென்றது.

திருச்சுழி அருகே உள்ள மேலேந்தல் கிராமத்தில் உள்ள தனது மாமனார் வீட்டுக்கு கருப்பசாமி வந்த போது, சிபிசிஐடி பொலிஸ் பிடியில் கடந்த 23 ஆம் திகதி நள்ளிரவு அவர் சிக்கியதாகக் கூறப்படுகிறது.

ஆனால் அவரை கைது செய்ததாக தகவல் வெளியாகவில்லை. அவரிடம் மதுரையில் இரகசிய விசாரணை நடைபெறுவதாகக் கூறப்படுகிறது.

மேலும், அருப்புக்கோட்டை தனியார் கல்லூரியின் செயலர் ராமசாமி, தமிழ்த் துறை விரிவுரையாளர் கந்தசாமி ஆகியோரும் விசாரணைக்காக சிபிசிஐடி அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஆஜராகினர்.

அப்போது கல்லூரியில் இருந்து சில ஆவணங்களையும் ராமசாமி கொண்டு வந்து பொலிஸாரிடம் கொடுத்தார்.

சிறிது நேரத்தில் அவர்கள் இருவரும் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர். இந்த வழக்கில், தூத்துக்குடியைச் சேர்ந்த பேராசிரியை ஜெனிதா என்பவரை விசாரணைக்கு ஆஜராகுமாறு சிபிசிஐடி பொலிஸார் நேற்று முன்தினம் காலை சம்மன் வழங்கினர். (இ)

# காவிரியைவிட மெரினா முக்கியமா? உயர் நீதிமன்ற நீதிபதி கேள்வி



(சென்னை)

காவிரி மேலாண்மை வாரிய விவகாரத்தில் மெரினாவில் உண்ணாவிரதம் நடத்த அனுமதி கேட்டு அய்யாகண்ணு தொடர்ந்த வழக்கில் போராட்டத்தைத் தடுக்க அரசுக்கு உரிமையில்லை என உயர் நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது.

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கக் கோரி தமிழகம் முழுவதும் தன்னெழுச்சியாக போராட்டம் நடந்து வருகிறது. அனைத்து எதிர்க்கட்சிகளும், உண்ணாவிரதம், மறியல், மனித சங்கிலி, நடை பயணம் என ஜனநாயக வழியில் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த மாதம் இளைஞர்கள் சிலர் மெரினாவில் திடீர் போராட்டத்தில் குதித்தனர். அப்போது பொலிஸார் அதிக அளவில் குவிக்கப்பட்டு மறுநாள் பொதுமக்களையே மெரினாவில் கடும் சோதனைக்குப் பின்னே அனுமதித்தனர்.

இந்நிலையில் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க தொடர் போராட்டம் நடத்திவரும் அய்யாக்கண்ணு, மெரினாவில் உண்ணாவிரதம் இருக்க அனுமதி கேட்டு வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு உயர் நீதிமன்றத்தில் நீதிபதி டி.ராஜா முன் விசாரணையில் உள்ளது.

இந்நிலையில் மெரினாவில் போராட்டம் நடத்த யாருக்கும் அனுமதியில்லை என பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மெரினாவில் அரசின் அனுமதியுடன் கடைசியாக எப்போது போராட்டம் நடந்தது என அரசு பதிலளிக்க நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில் இந்த வழக்கு நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்தது. ஜல்லிக்கட்டு போராட்டத்தை தவிர 2003ஆம் ஆண்டிற்கு பின் மெரினாவில் போராட்டங்கள் நடைபெறவில்லை என அரசு கூடுதல் தலைமை சட்டத்தரணி அரவிந்த் பாண்டியன் தெரிவித்தார்.

இதையடுத்து, காவிரியை விட மெரினா கடற்கரை முக்கியமா? என கேள்வி எழுப்பிய நீதிபதி, வைகுண்ட ஏகாதசி, கிறிஸ்துமஸ், ரம்zான் போன்ற பண்டிகை தினங்களில் இலட்சக் கணக்கான மக்கள் கோயில், தேவாலயங்களில் வழிபாடு செய்கின்றனர்.

அந்தக் கூட்டத்தை கட்டுப்படுத்த முடியவில்லை எனக் கூறி மக்கள் அந்த பண்டிகைகளை கொண்டாடக் கூடாது எனக்கூற முடியுமா? எனக் கேள்வி எழுப்பினார். போராட்டங்களை ஒழுங்குபடுத்த மட்டுமே அரசுக்கு அதிகாரம் உள்ளது. போராட்டங்களைத் தடுக்க அரசுக்கு எந்த அதிகாரமும் இல்லை என்றும் தெரிவித்த நீதிபதி பின்னர், வழக்கின் தீர்ப்பை ஒத்திவைத்தார். (இ)


# கமல் காணாமல் போவார்! அமைச்சர் ஜெயக்குமார் கணிப்பு

(சென்னை)

தற்போது டுவிட்டர், முகநூலில் வரும் கமல்ஹாசன், விரைவில் காணாமல் போய் விடுவார் என்று அமைச்சர் டி.ஜெயக்குமார் தெரிவித்தார்.

சென்னையில் நேற்று முன்தினம் நடந்த இளங்கோவடிகள் தின நிகழ்ச்சியில் பங்கேற்ற அமைச்சர் ஜெயக்குமார், பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

மத்திய அரசுடன் தமிழக அரசு இணக்கமாக உள்ளது. அ.தி.மு.க, பா.ஜ.க. கூட்டணி குறித்து உரிய நேரத்தில் கட்சி முடிவெடுக்கும். அ.தி.மு.கவினர் அளிக்கும் பல கட்டுரைகள் கட்சியின் அதிகாரபூர்வ நாளிதழில் வெளியிடப்படுகின்றன. அது போலத்தான் அ.தி.மு.க, பா.ஜ.க பற்றிய கட்டுரையும் வெளியானது. தற்போது கட்டுரை தொடர்பான விளக்கம் அதே நாளிதழில் வெளியாகியுள்ளது.



அ.தி.மு.கவில் ஒற்றைத் தலைமை இல்லாததால் எந்த ஒரு நிகழ்விலும் முடிவெடுப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக கூறுவது தவறான கருத்து. எம்.ஜி.ஆர். ஆரம்பித்த இயக்கம் சிந்தாமல் சிதறாமல் வழிநடத்தப்படுகிறது.

அதேபோல், மறைந்த முதல்வர் ஜெயலலிதாவால் உருவாக்கப்பட்ட இந்த அரசின் தேரை நாங்கள் எல்லோரும் ஒன்று கூடி இழுத்து வருகிறோம். இதில் வேறு கருத்துக்கு இடமில்லை.

அ.தி.மு.கவின் ஊழலுக்கு பா.ஜ.க. உறுதுணையாக இருப்பதாக தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார். ஊழலின் மொத்த உருவமே தி.மு.க.தான்.

ஊழல் குற்றச்சாட்டு கூறுபவர்கள், அவர்கள் நிலையை எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஒப்பந்தங்கள் எல்லாம் முறைப்படி, வெளிப்படையாக செயற்படுத்தப்பட்டு வருகிறது.

அரசு எதற்கும் பதில் சொல்வதில்லை என்று கமல்ஹாசன் கூறியுள்ளார். நான் தினமும் பதிலளித்து வருகிறேன். ஆனால், அவர் திடீரென டுவிட்டரில் வருவார். அதன்பின் முகநூலைத் தொடர்ந்து குறுஞ்செய்தியில் வருவார்.

அதன்பின் காணாமல் போய்விடுவார். அவரே விரைவில் காணாமல் போய் விடுவார் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ)

# ஜெயக்குமாருக்கு கமல் பதிலடி

## யானையின் காதில் எறும்பு புகுந்தால் என்னவாகும்?



(சென்னை)

யானையின் காதில் எறும்பு புகுந்தால் என்ன ஆகும்? என அமைச்சர் ஜெயக்குமாருக்கு மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் பதிலடி கொடுத்துள்ளார்.

சென்னையில் அமைச்சர் ஜெயக்குமார் நேற்று முன்தினம் நிருபர்களுக்கு பேட்டியளித்த போது, 'கட்டெறும்பு சிற்றெறும்பு ஆன கதை என்று மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசனை விமர்சித்தார்.

இதற்கு, மாதிரி கிராம சபை கூட்டத்தில் கமல்ஹாசன் பதிலடி கொடுத்துள்ளார்.

என்னை எறும்பு என்று சில பேர் சொல்லி இருக்கிறார்கள். யானை காதில் எறும்பு போனால், என்ன ஆகும்? நான் எறும்பு என்று ஒத்துக் கொள்கிறேன். அதற்காக நீங்கள் யானை என்று நினைத்துக் கொள்ளாதீர்கள். நீங்கள் என்ன மிருகம் என்று நாங்கள் முடிவு செய்து வைத்துவிட்டோம்.

உங்கள் காதில் போகலாமா? போகக் கூடாதா? என்பதை எறும்பின் சுத்தம் கருதி நாங்கள் செய்வோமா, மாட்டோமா? என்பதை முடிவு செய்துகொள்வோம்.

எனவே இந்த விளையாட்டை எல்லாம் இங்கே விளையாடாதீர்கள்.

அந்த வார்த்தை ஜாலம் எல்லாம் முடிந்துவிட்டது. இது செயற்படும் நேரம் என கமல் பதிலளித்தார். (இ)




# "ஜெ" வழி

## உறவினர்க

(தஞ்சாவூர்)

கட்சிக்கு எதிராக கருத்தை சமூக வலைத்தளங்களில் பதிவு செய்தால் உறவினர்களாக இருந்தாலும் ஜெயலலிதா வழியில் தூக்கி எறிவேன் என்று டி.டி.வி. தினகரன் எச்சரித்துள்ளார்.

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காத மத்திய, மாநில அரசுகளை கண்டித்து தஞ்சையில் அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்தில் அம்மா மக்கள் முன்னேற்ற கழக துணைப் பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரன் உரையாற்றினார். இதன் போது,

ஜெயலலிதாவின் தொண்டர்கள் 90 சதவீதம் பேர் எங்கள் பக்கம் உள்ளனர். இரட்டை இலைச் சின்னம் வழக்கில் நிச்சயம் நீதிமன்றத்தில் நல்ல தீர்ப்பு வரும் என்ற நம்பிக்கையுள்ளது.

தமிழகத்தில் ஆட்சியில் இருப்பவர்கள் உளவுத் துறையைப் பயன்படுத்தி பல்வேறு தவறான தகவல்களை சமூக வலைத்தளங்களில் பரப்புகிறார்கள்.

எனவே கட்சிக்கு எதிரான கருத்தை யாராவது பதிவு செய்தால்

# வெளிநாடு

## தேவாலயத்தில் துப்பாக்கிச்சூடு 18பேர் பரிதாபமாக உயிரிழப்பு!

(மகுர்டி)

நைஜீரியா நாட்டில் உள்ள கத்தோலிக்க தேவாலயத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 18 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

நைஜீரியா நாட்டின் தலைநகர் மகுர்டியிலுள்ள செயின்ட் இக்னேஷியஸ் கத்தோலிக்க தேவாலயத்தில் நேற்று முன்தினம் பலர் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது தேவாலயத்தினுள் துப்பாக்கியுடன் நுழைந்த பலர் திடீரென துப்பாக்கிச் சூடு தாக்குதல் நடத்தினர். இந்தச் சம்பவத்தில் இரண்டு மதகுருமார்கள் உட்பட 18 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியாகினர். மேலும் பலர் படுகாயமடைந்தனர்.

தகவலறிந்து வந்த பொலிஸார் அங்கு சென்று காயமடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக சேர்த்தனர். இதைத் தொடர்ந்து அப்பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். இது குறித்து அவர்கள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். (இ)

## கல்லூரி மாணவர்கள் மூவர் அசிட்டில் அமுக்கி படுகொலை



மெக்சிகோவில் போதைப் பொருள் கடத்தல் கும்பல் ஒன்று 3 மாணவர்களை கடத்தி அவர்களை அசிட்டில் போட்டு படுகொலை செய்த செய்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த மாதம் மெக்சிகோவில் திரைப்பட கல்லூரி மாணவர்கள் 3 பேர் கடத்தப்பட்டனர். மாணவர்களின் பெற்றோர்கள் அளித்த முறைப்பாட்டின் பேரில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டனர்.

பொலிஸார் மேற்கொண்ட தீவிர விசாரணைகளில் கடத்தப்பட்ட 3 மாணவர்களும் அசிட்டில் அமுக்கி படுகொலை செய்யப்பட்ட விடயம் தெரிய வந்துள்ளது.


பொலிஸார் மாணவர்களின் உடலை கைப்பற்றி டி.என்.ஏ. பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளனர்.

மேலும் இக் கொடூர சம்பவம் தொடர்பாக தீவிர விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)




## ழியில் தினகரன்

### ர்களுக்கு எச்சரிக்கை



அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

யாராக இருந்தாலும் மன்னிக்க மாட்டேன். உறவினர்களாக இருந்தாலும் ஜெயலலிதா வழியில் தூக்கி எறிவேன்.

யாருக்கும், எதற்காகவும் பயந்து பின்வாங்கமாட்டேன். என்னை எளிதில் ஏமாற்றி விடலாம் என்று யாரும் நினைத்து விடக்கூடாது. உறவுகளையும், நட்பையும் மதிப்பவன் நான். விட்டில் பூச்சிகளைப்போல் துரோகிகளிடம் மாட்டிக் கொள்ளாதீர்கள். இணையத்தள பதிவு உண்மையா? என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

அடுத்த ஆண்டு நடக்கும் பாராளுமன்றத் தேர்தல் முடியும் வரை காவிரி மேலாண்மை வாரியத்தை மத்திய அரசு அமைக்க போவதில்லை.

அதே சமயம் காவிரி நீரைப் பெற்றுத்தரும் வரை எங்கள் போராட்டம் ஓயாது. ஜெயலலிதாவின் ஆட்சியை தொண்டர்கள் ஆதரவோடு விரைவில் அமைப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## செல்பிக்கு சிம்பன்சி குரங்கு காப்புரிமை கோரமுடியாது



(நியூயோர்க்)

உலகம்முழுவதும்பெரும் பரபரப்பை ஏற்படுத்திய சிம்பன்சி குரங்கின் 'செல்பி' படம் தொடர்பான மேல் முறையீட்டு வழக்கின் கீழ் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை மேல்முறையீட்டு நீதி மன்றம் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தோனேசியாவில்உள்ள காட்டுப்பகுதியில் கடந்த 2011-ம் ஆண்டு வன விலங்குகளை படம் பிடிக்கச் சென்ற புகைப்படக் கலைஞர் டேவிட் ஜே.ஸ்லேட்டர் தன்னுடைய கமராவை ஓரிடத்தில் வைத்து விட்டு சென்றார்.

அந்த கமராவைக் கண்ட நருடோ என்னும் சிம்பன்சி வகையை சேர்ந்த ஒரு குரங்கு, கமராவை கையில் எடுத்து மற்ற குரங்குகளை புகைப்படம் எடுத்தது. மேலும் தன்னைத்தானே அது செல்பியும் எடுத்துக் கொண்டது. இதை கவனிக்காமல் அந்த கமராவை எடுத்துச் சென்ற டேவிட் ஜே.ஸ்லேட்டர் அதில் உள்ள புகைப்படங்களைப் பார்க்கும்போது குரங்கின் செல்பியை கண்டு வியப்படைந்தார்.

அதனைத் தொடர்ந்து குரங்கின் செல்பியை டேவிட் இணையத்தில் வெளியிட்டார். அப்புகைப்படம் உலகளவில் பிரபலமானது. இந்த செல்பி புகைப்படத்துக்கு டேவிட் மற்றும் அவர் பணியாற்றிவரும் ஊடக நிறுவனத்தினர் உரிமை கோரிய நிலையில், அதனை எதிர்த்து விலங்குகள் நல அமைப்பான 'பீட்டா' சான்பிரான்சிஸ்கோ நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது.

அந்த வழக்கில் காப்புரிமை சட்டத்தின்படி தனது செல்பிக்கு காப்புரிமை கோர நருட்டோவுக்கு முழு உரிமையுள்ளது. எனவே, டேவிட் ஜே.ஸ்லேட்டர் மற்றும் அவரது நிறுவனத்தினருக்கு அந்த உரிமையை வழங்கக் கூடாது என பீட்டா அமைப்பு தெரிவித்திருந்தது.

இந்த காப்புரிமை வழக்கில் வெற்றி பெற்றால், மேற்கண்ட செல்பி புகைப்படத்தை இனி விற்பதன் மூலம் கிடைக்கும் தொகையை அழிவின் விளிம்பில் உள்ள சிம்பன்சி குரங்குகளின் நல்வாழ்வுக்காக செலவு செய்ய திட்டமிட்டுள்ளதாக இந்த வழக்கை தொடர்ந்துள்ள பீட்டா அமைப்பினர் தெரிவித்திருந்தனர்.

இதற்கிடையில், பீட்டா அமைப்பினருடன் சமரசம் செய்துகொள்ள விரும்பிய புகைப்பட கலைஞர் ஸ்லேட்டர், மேற்கண்ட புகைப்படத்தின் மூலம் இனி கிடைக்கும் வருமானத்தின் 25 சதவீதத்தை இந்தோனேசியா நாட்டில் அழிவின் விளிம்பில் உள்ள இவ்வகை குரங்குகளை பாதுகாப்பதற்காக அளிக்கப் போவதாக தெரிவித்தார். இதற்கு பீட்டா அமைப்பினர் சம்மதிக்காமல் மேல் முறையீட்டு வழக்கின் தீர்ப்புக்காக காத்திருந்தனர்.

இவ் வழக்கில் நேற்று தீர்ப்பளித்த நீதிபதிகள், 'காப்புரிமை சட்டங்கள் விலங்குகள் உரிமை கோர உருவாக்கப்பட்டது அல்ல. அவ்வாறு உரிமை கோரி வழக்கு தொடர்ந்துள்ள பீட்டா அமைப்பினர், தாங்கள் அந்த படத்தில் உள்ள குரங்கின் அடுத்த நண்பர் என்றும் உறவினர் என்பதையும் நிரூபிக்க தவறி விட்டனர்.

எனவே, மனிதர்களுக்காக உருவாக்கப்பட்ட காப்புரிமை சட்டத்தின்படி ஒரு செல்பி படத்துக்கு குரங்கு காப்புரிமை கோர முடியாது' என தீர்ப்பளித்தனர். (இ)

## குட்டி இளவரசருக்கு குவியும் வாழ்த்துக்கள்





(லண்டன்)

பிரிட்டன் அரச குடும்பத்தைச் சேர்ந்த இளவரசர் வில்லியம் - கேத் மிடில்டன் தம்பதிக்கு ஏற்னவே ஜார்ஜ் என்ற மகனும், சார்லட் என்ற மகளும் உள்ளனர். கர்ப்பமாக இருந்த கேத் மிடில்டன் பிரசவத்திற்காக நேற்று முன்தினம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், அவருக்கு ஆண் குழந்தை பிறந்தது.

வைத்தியசாலைக்கு வெளியே சர்வதேச ஊடகங்கள் குவிந்திருந்த நிலையில், வில்லியம் - கேத் தம்பதி புதிய குட்டி இளவரசருடன் வெளியே வந்து கை அசைத்தனர். இதனை அடுத்து, சில மணி நேரங்களுக்குப் பின்னர் அவர்கள் வைத்தியசாலையில் இருந்து வீடு திரும்பினர். இந்நிலையில், குட்டி இளவரசர் வருகைக்கு பிரிட்டன் பிரதமர் தெரேசா மே, கனடா பிரதமர் ஜஸ்டின், மிட்சேல் ஒபாமா, பிரிட்டன் எதிர்க்கட்சி தலைவர் ஜேரேமி, லண்டன் மேயர் சாதிக்கான் உள்ளிட்ட பல தலைவர்கள் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

அரசியல் தலைவர்கள் மட்டுமல்லாது திரைத்துறை பிரபலங்களும் குட்டி இளவரசரை வரவேற்றுள்ளனர். (இ)

## 18 ஆண்டுகளுக்கு பிறகு வீரப்பனுக்கு விடுதலை



(சென்னை)

யானை தந்தம் கடத்தியது தொடர்பாக சத்தியமங்கலம் நீதிமன்றத்தில் கடந்த 18 ஆண்டுகளாக நடந்த வழக்கில், குற்றம் நிரூபிக்கப்படாததால் சந்தனக் கடத்தல் வீரப்பன் உள்ளிட்ட 6 பேரை விடுதலை செய்து நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் வனக்கோட்டம் கொண்டப்பநாயக்கன் பாளையம் வனப்பகுதியில் உள்ள பில்பாளி என்ற இடத்தில் நாட்டுத்துப்பாக்கியைப் பயன்படுத்தி யானைகளைக் கொன்று, 12 தந்தங்களைக் கடத்தியதாக புகார் எழுந்தது. இந்தச் சம்பவம் தொடர்பாக புளியங்கோம்பையைச் சேர்ந்த ஆறுமுகம், பெரியகுளத்தைச் சேர்ந்த கோவிந்தராஜ், சண்முகம், ஜவகர், ராஜேந்திரன் ஆகியோரை அதிரடிப்படையினர் பிடித்து சத்தியமங்கலம் வனத்துறையினரிடம் ஒப்படைத்தனர்.

இவர்கள் 5 பேருடன் சந்தன கடத்தல் வீரப்பன், வீரப்பன் கூட்டாளியான சிக்கர சம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த சந்திர கவுடா ஆகிய 7 பேர் மீது கடந்த 2000ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வனத்துறை வழக்குப் பதிவு செய்தது.

சத்தியமங்கலம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் இந்த வழக்கு நடந்து வந்தது. இந்த வழக்கில் தொடர்புடைய வீரப்பன், சந்திரகவுடா மற்றும் பெரியகுளத்தைச் சேர்ந்த கோவிந்தராஜ் ஆகிய 3 பேரும் ஏற்கனவே இறந்துவிட்டனர். இந்நிலையில், நேற்று இவ் வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது.

வனத்துறையினர் தகுந்த ஆதாரத்துடன் குற்றத்தை நிரூபணம் செய்யாததால், புளியங்கோம்பை ஆறுமுகத்தை தவிர மற்ற 6 பேரையும் வழக்கில் இருந்து விடுதலை செய்வதாக சத்தியமங்கலம் குற்றவியல் நடுவர் நீதிமன்ற நீதிபதி குமாரசிவம் தீர்ப்பளித்தார். புளியங்கோம்பை ஆறுமுகம் வழக்கில் ஆஜராகாததால், அவர் மீது மட்டும் தொடர்ந்து வழக்கு நடைபெறும் என நீதிபதி உத்தரவிட்டார். (இ)

# இலங்கையில் அதி நவீன இருதய சத்திரசிகிச்சை வைத்தியசாலையை அமைக்க பாகிஸ்தான் ஆர்வம்

## ஜனாதிபதியுடனான சந்திப்பில் முதலீட்டாளர்கள் குழு தகவல்

(கொழும்பு)

இலங்கையில் புதிய முதலீட்டு வாய்ப்புக்களை கண்டறிவதற்காக இலங்கை வந்துள்ள பாகிஸ்தானிய நிறுவனங்களின் முதலீட்டாளர்கள் குழு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்தனர்.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தப் பிரதிநிதிகளின் குழு சுகாதாரம், வீடமைப்பு, சுற்றுலாத்துறை, விஞ்ஞானம் உள்ளிட்ட துறைகளில் முதலீடுகளை மேற்கொள்ளத் தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

மேலும், நெடுஞ்சாலைகளை நிர்மாணித்தல், எரிபொருள் அகழ்வுத் துறைகளிலும் மேற்கொள்ளக் கூடிய முதலீடு தொடர்பிலும் இதன் போது கவனம் செலுத்தினர்.



அதிநவீன தொழில்நுட்பத்துடனான இருதய சத்திர சிகிச்சையை மேற்கொள்ளக் கூடிய நவீன வைத்தியசாலை ஒன்றை நாட்டில் அமைப்பதற்கும் சுற்றுலாப் பேட்டைகளையும் குறைந்த செலவைக் கொண்ட நவீன வீட்டுத் தொகுதி இரண்டினை அமைப்பதற்கான முதலீடுகளை மேற்கொள்ளவும் இவர்கள் விருப்பம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# எதிர்காலச் சந்ததிக்காக நிலைபேறான எரிசக்தியைப் பயன்படுத்த வேண்டும்

## அமைச்சர் திலக் மாரப்பன தெரிவிப்பு



(பேர்லின்)

எதிர்கால சந்ததிக்காக நிலைபேறான எரிசக்தியைப் பயன்படுத்த வேண்டும் என்ற தேவையை இலங்கை உணர்ந்திருப்பதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன கடந்த வாரம் ஜேர்மனியின் பேர்னிங் நகரில் நடைபெற்ற எரிசக்தி நிலைமாற்றம் தொடர்பான மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

எரிசக்தித் துறையில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் குறித்து கலந்துரையாடும் ஒரு முக்கிய சர்வதேச மாநாடாக இது விளங்குகிறது. கொள்கை வகுப்பாளர்கள், தொழில்சார் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஆகியோர் இதில் பங்கேற்றனர். அங்கு பாதுகாப்பான நியாயமான அளவு பணத்தைக் கொண்டு பெற்றுக் கொள்ளும் சுற்றாடல் பாதுகாப்பு மிக்க எரிசக்தி குறித்து கவனம் செலுத்தப்பட்டது. எனினும் துரித மாற்றம் ஒன்றை நோக்கிச் செல்வதற்கு போதியளவு நிதி வளம் இல்லாமல் இருக்கின்றமை கவலைக்குரிய விடயமாகும் என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார். இதற்காக சர்வதேச சமூகமும் கைத்தொழில் நாடுகளும் நிதி வழங்கும் நிறுவனங்களும் முன்வந்து தேவையான வளங்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். (இ)

# கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் வருமானம் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் முதல் தடவையாக இந்த புத்தாண்டுக் காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க வருமானத்தை ஈட்டியுள்ளது.

பண்டிகைக் காலத்தில் மீன் விற்பனை 68 சதவீதத்தால் அதிகரித்துள்ள அதே வேளை, கிடைக்கப் பெற்ற வருமானம் 77 சதவீதத்தால் அதிகரித்திருப்பதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கடந்த 15 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் கடற்றொழில் கூட்டுத்தாபனம் தமது விற்பனை நிலையங்கள் மூலம் ஒரு இலட்சத்து 35 ஆயிரத்து 892 கிலோகிராம் மீனை விற்பனை செய்துள்ளது. இதன்மூலம் ஏழு கோடியே 22 இலட்சத்து 76 ஆயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட தொகை வருமானமாக கிடைக்கப் பெற்றுள்ளது. பண்டிகைக் காலத்தில் மக்கள் கூடுதலாக உட்கொள்ளும் நான்கு மீன் வகைகள் சலுகை விலையில் விற்பனை செய்யப்பட்டன. இதன் மூலம் பண்டிகைக் காலத்தில் மீனின் விலை அதிகரிப்பதை கட்டுப்படுத்த முடிந்தது. இந்த சலுகை விலை இந்த மாதம் முழுவதும் நடைமுறைப்படுத்தப்படும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# சட்டம்-ஒழுங்கைப் பாதுகாப்பதில் மக்களுக்குப் பாரிய பொறுப்பு

## துறைசார் அமைச்சர் மத்தும சுட்டிக்காட்டு



(கொழும்பு)

சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பதில் ஊடகங்களுக்கும் பொதுமக்களுக்கும் பாரிய பொறுப்பு உள்ளது என சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பதற்காக திட்டமிட்ட குற்றச் செயல்களையும் போதைப் பொருளையும் கட்டுப்படுத்த உச்ச நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அவரது அமைச்சில், நேற்று முன்தினம் அமைச்சின் செயலாளர் பொலிஸ்மா அதிபர் ஆகியோருடன் நடத்திய ஊடகவியளாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

பாரிய ஊழல் மோசடிகள் தொடர்பாக இதுவரை 26 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ரஷ்யாவின் முன்னாள் தூதுவரை இலங்கைக்கு கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. சர்வதேச பொலிஸார் ஊடாக இதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

துறைமுகம், தெற்கு, மேல், கரையோரப் பிரதேசங்கள் ஊடாக நாட்டுக்குள் போதைப் பொருள் கொண்டு வரப்படுவதாக இனங்காணப்பட்டுள்ளது, இதனைக் கட்டுப்படுத்த பொலிஸார் உரிய நடவடிக்கையை எடுத்துள்ளனர். திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை கைது செய்யவும் விசேட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் சட்டம்-ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார மேலும் தெரிவித்தார். (இ)

# இன்று ஒரு தகவல்

## தள்ளிப்போட வேண்டிய சங்கதிகள்

விவாகரத்தை வழங்கு முன்பாக ஒரு நீதிமன்றம் என்ன தீர்ப்புச் சொல்கிறது தெரியுமா? ஒரு குறிப்பிட்ட காலம் பிரிந்து வாழச் சொல்கிறது. அதன்படி வெற்றிகரமாக (?) வாழ்ந்துவிட்டால் பிறகுதான் விவாகரத்து வழங்குகிறது.

ஏன் இந்த இரண்டு கட்டத் தீர்ப்பு? அந்த இடைப்பட்ட காலத்தில் இருவரும் மனம் மாறிச் சேர்த்துவிடமாட்டார்களா? என்கிற நல்ல நோக்கம்தான்.

இந்த முயற்சியில் நீதிமன்றம் ஓரளவு வெற்றி பெறவும் செய்கிறது. அந்த மனநிலைக்கு ஏற்ப எண்ணங்களை மாற்றிக் கொள்ளும் பலவீனம் மனிதனிடத்தில் இருப்பதால்தான் இந்த முயற்சி.

ஒருவர் தன் வீட்டையும் நிலத்தையும் விற்க எண்ணினார். நண்பரிடம் போய் நீங்கள் வாங்கிக் கொள்ளுங்களேன் என்றார். நண்பர் நல்லவர். அவசரப்பட்டு விற்காதீர்கள். ஏதும் பணத் தேவை என்றால் என்னிடம் கடனாக வாங்கிக் கொள்ளுங்கள். உங்களால் அதைத் திரும்பத் தர முடியாத நிலை ஏற்பட்டால் மீதிப் பணத்தைக் கொடுத்துவிட்டு வீட்டை எடுத்துக் கொள்கின்றேன் என்றார். காத்திருந்த நாட்களில் வீட்டு விலை கன்னாபின்னாவென்று ஏறிவிட்டது. வீட்டைச் சுற்றியிருந்த நிலத்தின் ஒரு பகுதியை விற்று நண்பரின் கடனை அடைத்துவிட்டு கையில் கொஞ்சப் பணத்தை வைத்துக் கொண்டு நிம்மதியா இருக்கிறார் மனிதர். வீடும் தப்பிவிட்டது.

நிலத்தை, வீட்டை விற்க முயற்சி செய்கிறவர்கள் இனிமேல் தாங்காது என்கிற நிலைமை வரும் வரை விற்கும் முடிவைத் தள்ளிப் போட வேண்டும்.

கோபமாக ஒரு கடிதத்தை எழுதினால் அதை அவசரப்பட்டு போஸ்ட் செய்துவிடக் கூடாது. எழுதிவைத்த இரு தினங்கள் கழித்து சாந்த மனநிலைக்கு வந்ததும் அந்தக் கடிதத்தைப் படித்துப் பார்த்தால் சே! பாவம் ! என்று தோன்றும். நாமே கிழித்துப் போட்டு விடுவோம்.


என்னைப் பற்றி அப்படிப் பேசினீர்களாமே! இப்படிச் சொன்னீர்களாமே! போன்ற விவகாரங்களையெல்லாம் உடனுக்குடன் வைத்துக் கொள்ளக் கூடாது. ஆற அமர வைத்துக் கொண்டால் நல்லது.

ஒரு வேலையை விட்டுவிடுவது, வேலையை விட்டு ஒருவரை நிறுத்துவது, ஒருவரிடம் கடன் கேட்பது ஆகியவற்றையெல்லாம் முடிந்தவரை தள்ளிப் போடுவது நல்லது.

நம்மைப் பாதிக்கக்கூடிய முடிவுகள், மற்றவர்கள் விரும்பாத உணர்வுகள் ஆகிய இரண்டின் விடயத்திலும் தள்ளிப்போட்டு முடிவெடுத்தால் அது பெரும்பாலும் நன்மையில் முடியும்.

லேனா தமிழ்வாணன்

# வீதிக்கு அருகில் கைக்குண்டு



(கரணவாய்)

பருத்தித்துறை இன்பசிட்டிப் பகுதியிலுள்ள வீதிக்கு அருகாமையில் இருந்து கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இன்பசிட்டி பகுதியிலுள்ள கொங்கிறீட் வீதிக்கு அருகாமையில் கைக்குண்டு ஒன்று நேற்றுக் காலை காணப்பட்டதாக பருத்தித்துறைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. அங்கு சென்ற பொலிஸார் கைக்குண்டை மீட்டுள்ளனர். (இ-60)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு:
021 221 7603,
021 567 1532

# வெசாக் அலங்கார நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பாதுகாப்புப்படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெடடியாராச்சியின் திட்டமிடலுக்கு அமைய யாழ்ப்பாண பட்டணத்திலே வெசாக் அலங்கார நிகழ்வு வலயத்தினை 2018.04.29 அன்று தொடக்கம் 2018.05.01 அன்று வரைநடத்துவதற்கானவேலைத் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் முதன்மையானதாக யாழ்ப்பாணத்திலே புத்தபெருமானுடைய புனித தாது காட்சிப்படுத்தப்படுவதோடு பல வர்ணவிளக்குகள் கொண்ட வெசாக் கூடுகள் மற்றும் பிரமாண்டமான அலங்காரங்கள் மற்றும் பக்தி கீதங்கள் இசைத்தல் மற்றும் மாபெரும் அன்னதான நிகழ்வும் குறித்த தினங்களில் நடத்துவதற்கு ஒழுங்கமைப்புக்கள் செய்யப்பட்டுள்ளன. (இ-9)

# பகிரங்க அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதிமன்றில் யாழ்ப்பாணம் பொலிஸாரால் பாரப்படுத்தப்பட்ட பின்வரும் சான்றுப்பொருட்கள் இது வரை உரிமை கோரப்படாத நிலையில் காணப்படுகின்றன.

எனவே குறித்த சான்றுப் பொருட்களை உரிமை கோருபவர்கள் எவரேனுமிருப்பின் 02 மாத காலப்பகுதிக்குள் அலுவலக நேரங்களில் உரிய ஆவணங்களுடன்சமுகமளித்து உரிய கோரிக்கையை நிலைநாட்டும்படி குற்றவியல் நடைமுறை சட்டக் கோவையின் 431(2) இன் பிரகாரம் இத்தால் பகிரங்கப்படுத்தப்படுகின்றது.

வழக்கு. இல - AR/162/18, சான்றுப் பொருள் இல- PR/247/18, PR/248/18, மறுதவணை- 25.07.2018, விபரம்-1. 69846135 இலக்க துவிச்சக்கர வண்டி-01,

2.CT 9507492 இலக்க துவிச்சக்கர வண்டி-01 மன்றின் கட்டளைப்படி பதிவாளர் அறிவித்துள்ளார். (இ


# துயரினைப் பகிர்வதோடு தொடுத்தம் இதய அஞ்சலி



அமரர் திருவாட்டி
**சரோஜினிதேவி சிவஞானம்**

முன்னாள் யாழ் மாநகர சபை விசேட ஆணையாளரும், வடமாகாண சபை அவைத் தலைவரும், நல்லூர் இளங் கலைஞர் மன்றத்தின் தலைவருமான **சி.வி.கே.சிவஞானம்** அவர்களின் அன்பு மனைவி மறைந்தார் என்ற செய்தி கேட்டு ஆறாத்துயரடைந்தோம்.

அன்னாரின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அக்குடும்பத்தாரின் துயரையும் பகிர்ந்து கொண்டு அவர் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம். (C-2403)

நல்லூர் இளங்கலைஞர் மன்றம்
சட்டநாதர் வீதி, நல்லூர்.



# கண்ணீர் அஞ்சலி

## திருநாவுக்கரசு பாக்கியம்

எமது பாடசாலை ஆசிரியை திருமதி வாசுகி சாந்தலிங்கம் அவர்களின் தாயார் திருநாவுக்கரசு பாக்கியம் அவர்கள்



22.04.2018 அன்று இறைபதம் அடைந்தமையையிட்டு அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம், யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்.
யாழ்ப்பாணம்

(3751)



# கண்ணீர் காணிக்கை

## திருமதி சரோஜினிதேவி சிவஞானம்



எமது மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லக் குழந்தைகளின் வாழ்வியல் நலனுக்காக பல வழிகளிலும் தொடர்ந்து பேருதவி ஆற்றிவரும் கௌரவ சீ.வீ.கே.சிவஞானம் (வடமாகாண சபை அவைத்தலைவர்) அவர்களின் அன்புத் துணைவியார் திருமதி சரோஜினி தேவி சிவஞானம் அவர்கள் 23.04.2018 (திங்கட்கிழமை) அன்று சிவபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைந்தோம்.

இவர் தம் பிரிவால் ஆறாத் துயரில் மூழ்கியிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா எல்லாம்வல்ல இறைவனின் சந்நிதியில் சங்கமமாகி நித்திய வாழ்வு பெற இறையருளினை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

(C-2404)

இவ்வண்ணம் : தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள், இல்லக் குழந்தைகள்,
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம், ஜெயந்திநகர், கிளிநொச்சி.


# நல்லூர் பிரதேச சபை

## சட்ட ஆலோசனை வழங்குநர்களைப் பதிவு செய்தல்-2018

சபையானது 2018 ஆம் ஆண்டிற்கு சட்ட ஆலோசனை வழங்குவதற்கு சட்ட ஆலோசகர்களிடமிருந்து விண்ணப்பங்களை ஏற்கவுள்ளது.


விண்ணப்பங்கள் சபையின் தலைமை அலுவலகத்தின் நிதிக்கிளையில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக் கட்டணமாக ரூபா 1000.00 (வரி நீங்கலாக) செலுத்தப்படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சட்டஆலோசனை வழங்கலுக்கான விண்ணப்பம் 2018"என குறிப்பிட்டு பதிவு தபால் மூலம் **"தலைவர், தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேச சபை, இல. 14/05, கருவப்புலம் வீதி, கொக்குவில்"** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் 07.05.2018 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும். மேலதிக விபரங்களுக்கு 021 222 2700 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

தா.தியாகமூர்த்தி,
தவிசாளர்,
நல்லூர் பிரதேச சபை

# மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய அனைவரும் ஒன்றிணைய வேண்டும்

## பரு.தவிசாளர் அரியகுமார் அழைப்பு



(கரணவாய்)

எந்த மக்கள் எங்களைத் தெரிவு செய்தார்களோ அந்த மக்களின்தேவைகளைநிறைவு செய்யக் கூடிய வகையில் எங் களது சிந்தனைகளும் இங்கு எடுக்கப்பட்ட முடிவுகளும் அமைய வேண்டும்என தனது கன்னி உரையில் பருத்தித் துறை பிரதேச சபையின் தவி சாளர் அ.சா.அரியகுமார் தெரி வித்தார்.

பருத்தித்துறை பிரதேச சபையின் முதலாவது அம ர்வு நேற்றுப் புதன்கிழமை பிரதேச சபையின் சபா மண்ட பத்தில் இடம்பெற்றது.

அங்கு தனது கன்னி உரை யினை ஆற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

இங்கிலாந்திலே மிகவும் வலுப்பெற்ற ஓர் அமைப்பாக உள்ளூராட்சி மன்றங்கள் இருக்கின்றன. மக்களுடைய தேவைகளை நிறைவு செய் கின்ற, அவர்களின் எதிர் பார்ப்புக்களை நிறைவு செய் யும் அமைப்பாக உள்ளூரா ட்சி மன்றங்கள் அமைந்தி ருக்க வேண்டும். அந்த வகை யிலேதான் மக்களால் தெரிவு செய்யப்பட்டு அனுப்பப்பட்ட நாங்களும் அவர்களுடைய எதிர்பார்ப்புகள், தேவைகளை நிறைவு செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது என் பதை மறந்து விடக்கூடாது.

இந்த மன்றத்திலே நாங் கள் செலவழிக்கும் ஒவ்வொரு நிமிடமும் மக்கள் நலன் சார்ந் ததாக இருக்க வேண்டும். எங் களுடைய சட்ட வரைபு யாப் பிற்கு ஏற்ப எமது பிரதேச எல்லைப்பரப்பிற்குட்பட்டுவாழு கின்றமக்களுக்கு சேவை செய் பவர்களாக இருக்க வேண் டும்.

எமக்கு தரப்பட்ட வரைபு களை மீறி செல்ல வேண் டாம். மாகாண சபைகள் ஆற்ற வேண்டிய கடமைகளையோ பாராளுமன்றம் ஆற்ற வேண் டிய கடமைகளையோ இந்த பிரதேச சபையோ உள்ளூ ராட்சி மன்றங்களோ ஆற்று வதற்கு அருகதை இல்லை என சொல்லப்பட்டிருக்கிறது.

எனவே மக்கள் எதை எதிர் பார்க்கிறார்கள் என்ற அவர்க ளின் எதிர்பார்ப்புக்களைநிறைவு செய்யக்கூடிய வகையில் எமது சிந்தனைகள் அமைய வேண்டும்.

எந்த அதிகாரத்திற்குள் நின்று நாம் அபிவிருத்தி செய்ய முடியுமோ அவ் அபி விருத்தியை நாங்கள் செய்ய வேண்டும். எமது அதிகாரங் களுக்கு அப்பாற்பட்ட திணை க்களத்துடன் கலந்துரையாட வேண்டிய அவசியம் இருக் கிறது. எமக்கு தரப்பட்ட அதி காரங்கள் வேறு வேறு திணை க்களங்களிலே இருக்கிறது. எனவே அத் திணைக்கள அதி காரிகளை சந்தித்து மக்கள் நலன் சார்ந்த திட்டங்கள் பற்றி கலந்துரையாட வேண் டும் என்பதையும் நாங்கள் மறந்துவிடக்கூடாது என அவர் மேலும் தெரிவித் தார். (இ-60)

# பெற்றோல் கிணறு தீப்பிடித்ததில் 15 பேர் உடல் கருகிப் பலி!

(ஜகார்த்தா)

இந்தோனேசியா நாட்டின் கிழக்கு பகுதியில் புதிதாக தோண்டப்பட்ட பெற்றோல் கிணறு தீப்பிடித்த விபத்தில் 15 பேர் உடல் கருகி உயிரிழந் தனர்.



இந்தோனேசியா நாட்டின் கிழக்கு பகுதியில் சுமாத்திரா தீவின் வடக்குமுனையில் உள்ள ஆசே மாகாணத்துக் குட்பட்ட பல பகுதிகளில் பெற் றோல் ஊற்றுகள் உள்ளன.

அரசின் அனுமதி இல்லா மல் பலர் தங்களுக்கு சொந்த மான நிலங்களில் பெற்றோல் கிணறுகளை அமைத்து சட் டவிரோத பெற்றோல் உற்பத் தியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவ்வகையில், பசி புட்டி கிராமத்தில் புதிதாக பெற்றோ லிய எண்ணெய்க் கிணறு தோண்டப்படுகிறது. சுமார் 250 மீற்றர் ஆழத்துக்கு தோண்டப்பட்ட இந்த கிணற் றில் இருந்து ஊற்றெடுத்து வழியும் கச்சா எண்ணெயை பிடித்து செல்வதற்காக சில நாட்களாக ஆண்களும், பெண்களும் முகாமிட்டுள்ள னர்.

இந்நிலையில், நேற்று அதிகாலை ஒன்றரை மணி யளவில் அந்த பெற்றோல் கிணற்றில் இருந்து பயங்கர வெடிச்சத்தம் கேட்டது. மிகப் பெரிய தீப்பிளம்புகள் எழுந் தன.

வேகமாகப் பரவிய தீயில் அருகாமையில் உள்ள 5 வீடுகள் நாசமடைந்தன. கச்சா எண்ணெயை பிடித்து செல்வதற்காக காத்திருந்த சுமார் 50 பேர் தீயில் சிக்கிக் கொண்டனர்.

இந்த விபத்தில் 15 பேர் சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்தனர். காயம டைந்த சுமார் 35 பேர் வைத் தியசாலைகளில் சிகிச்சை க்காக அனுமதிக்கப்பட்டுள்ள னர்.

காயமடைந்தவர்களில் சிலரது நிலைமை கவலைக் கிடமாக உள்ளதால் இவ் விபத்தில் பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அஞ் சப்படுகிறது. (இ)

# கயிலாச யாத்திரை

## ஓர் அனுபவப் பகிர்வு 31

பரமசாமி பஞ்சாட்சரம்

சிவகாமங்கள் அனைத் தையும் அறிந்தவரும் நந்தி தேவர் ஒருவரே. இவரு டைய அனுமதி இல்லாமல் ஒருவரும் சிவபெருமானை அணுக முடியாது என்று ஸ்ரீ கணேச புராணம் கூறுகிறது.

கயிலாசக் கிரிவலம் ஆரம் பிக்கும் தர்ச்சன் என்னும் இடத்திலிருந்து தான் நந்தி வீதியும் ஆரம்பிக்கின்றது. இந்த நந்தி வீதி (Nandi Kora) 28 கி.மீ. தூரமாகும். இதை நடந்து முடிக்க எட்டு மணித்தியாலங்கள் வரை எடுக்கும். இந்த வழியில் சப்தரிஷி குகையும் இருக் கின்றது. இதற்குச் செல்ல ஏறக்குறைய மூன்று மணித் தியாலங்கள் எடுக்கும்.

ஒருவர் நந்திமலைக் கிரிவலம் வர விரும்பினால் அவர் மூன்று முறை கயிலா யக் கிரிவலம் வர வேண்டு மென உதவியாளர் கூறி னார். நாங்கள் நந்தி வீதிக்குச் செல்லவில்லை.

### சப்தரிஷிகளின் குகையும் கோயிலும்

அத்திரி, வசிஷ்டர், கௌத மர், காஸ்யபர், விஸ்வாமித் திரர், பரத்வாஜர், ஜமத்கனி ஆகியோரே சப்தரிஷிகள் ஆவார்கள். சூரியனுக்கே சக்தியை அருளும் இவர்க ளைச் சூரியன் அனுதினமும் தொழுது வான வீதியில் வலம் வருகிறான். இவர்களை வழிபடுபவர்களுக்கு வலுவும் பொலிவும் ஆரோக்கியமும் ஆயுளும் அதிகரிக்கும் என்பது மக்கள் நம்பிக்கையாகும்.



கயிலை மலை அடிப்பாக த்தில் ஒரு குகை இருக்கின் றது. இக் குகைக்குள் சப்த ரிஷிகளுக்கு ஒரு கோயில் இருக்கின்றது. இங்கு முனி வர்கள் தவம் செய்து கொண்டு இருக்கின்றார்கள்.

### குபேரன் குளம்

சப்தரிஷிகளின் குகைக்குச் செல்லும் பாதையிலே செல்வ த்திற்கு அதிபதியும் புலஸ்திய ரின் பேரனுமாகிய குபேரனு க்கு ஒரு குளம் இருக்கின்றது. குபேரன் பல தடவைகள் இங்கு புட்பக விமானத்தில் வந்து நீரா டிக் கயிலையைத் தரிசனம் செய்து வணங்கிச் சென்றதா கப் புராணங்கள் கூறுகின்றன. ஒருமுறை சிவபெருமானைப் பார்த்துக் குபேரன் பொறா மைப் பட்டதனால் ஒரு கண் பார்வையை அவர் இழந்ததாக வும் புராணங்கள் கூறுகின்றன.

### சொர்க்கத் துவாரா

"சொர்க்கத் துவாரா" என்ற இடம் கிரிவலம் ஆரம்பிக்கும் இடத்திலிருந்து 2 கி.மீ. தூரத் தில் இருக்கின்றது. இந்த இடம் இறைவன் தரிசனம் கொடுக்கும் இடமாகக் கரு தப்படுகின்றது. கயிலாச மலை யின் முடியில் இருந்து வரும் நீர் இங்கு வருகின்றது. இதை இறைவனின் சிரசில் இரு ந்து வரும் புனித நீர் என்று அழைப்பர்.

இந்த நீர் எழில்மிக்க வண்ணக் கோலங்களைக் கொண்டதாக அங்கே பார் க்க முடிகின்றது. அங்கே சித றிக் கிடக்கும் ஒவ்வொரு கற்களும் சிவலிங்கமாகவே காட்சியளிக்கின்றன.

### இராவணன் கயிலையைத் தூக்கிய இடம்

இராவணன் கயிலையைத் தூக்கிய இடம் சொர்க்கத் துவாராவில் இருந்து பார்க்கத் தெரியும்.

கயிலைமலையில் ஓங்கி உயர்ந்து கோட்டைச் சுவராக நிற்கும் மலைகளிலே கயிறு போன்ற தழும்புகள் காண ப்படுகின்றன.

அந்தக் கயிலை நாத னையே தூக்க ஆசைப்பட்ட மகாபக்தகோன் இராவணன் மலையைக் கட்டி உயர்த்தும் போது ஏற்பட்ட தழும்பு என்று நம்பப்படுவதாக எங்கள் சீன வழிகாட்டுபவர் சொன்னார்.

சீன அரசு இந்த இடத்தி லும் யாத்திரிகர்கள் வரும் வீதிகளிலும் சூரிய ஒளியி லிருந்து மின்சாரத்தை எடுத் துத் தொலைபேசியை இயக் கும் நிலையங்களை நிறுவியு ள்ளது. (Solar panels and mobile Antennas Stations are installed).

(தொடரும்)

# அகில இலங்கை இளங்கோ கழகம் நடாத்தும்

## புலமை ஒலி - 2018 சிலப்பதிகார விழா

யா/புற்றளை மகா வித்தியாலயக்
கேட்போர் கூடம்
புலோலி தெற்கு
காலம் : 2018 ஏப்ரல் 28 (சனி)
மாலை 4 மணி
2018 ஏப்ரல் 29 (ஞாயிறு)
காலை 9 மணி
மாலை 4 மணி
2018 ஏப்ரல் 30 (திங்கள்)
காலை 9 மணி – மாலை 4 மணி

**28.04.2018 சனி மாலை 4.00 மணி**
**தமிழ்த்தாத்தா கந்தமுருகேசனார் அரங்கு**

தலைமை : திரு.சி.சத்தியசீலன்
(செயலாளர், விவசாய அமைச்சு, வடமாகாணம்)
பிரதம விருந்தினர்: பேராசிரியர் க.இரகுபரன்
(மொழித்துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்)
விவாத அரங்கு
நடுவர் : திரு.ந.விஜயசுந்தரம்
(பிரதம ஆசிரியர், வலம்புரி.)
இன்றைய இளைய தலைமுறையினரிடம்
நாம் பெரிதும் எதிர்பார்த்து நிற்பது
பற்றுணர்வே பண்பாட்டு பேணுகையே தியாக சிந்தையே

**29.04.2018 ஞாயிறு காலை 9.00 மணி**
**கதிர்காமத்தம்பி அருளானந்தன் அரங்கு**

தலைமை பேராசான் தா.ஜெயவீரசிங்கம்
பிரதம விருந்தினர்
திரு.அழகுசுந்தரம் கிருபாகரன்
(உரிமையாளர், கிருபாஜேணர்ஸ்)
சுழலும் கவிச்சமர்
தலைமை : வேல்.நந்தகுமார் (ஆசிரியர்)

**29.4.2018 ஞாயிறு மாலை 4.00 மணி**
**கமலினி செல்வராஜன் அரங்கு**

தலைமை திரு.ஆ.சிவநாதன்
(அதிபர், யா/புற்றளை மகா வித்தியாலயம்)
பிரதம விருந்தினர்
திரு.வேலாயுதம் கணேஸ்வரன்
(ஸ்தாபகர், சிவன் அறக்கட்டளை)
அகில இலங்கை இளங்கோ கழக
இளைஞர் அணியினர் வழங்கும்
*கி.காங்கேயன் தலைமையிலான*
*வில்லிசை*

**30.04.2018 திங்கள் காலை 9.00 மணி**
**பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை அரங்கு**

தலைமை : திரு.க.திலகநாதன்
(விரிவுரையாளர், யாழ்ப்பாண கல்வியியற் கல்லூரி, கோப்பாய்)
சிறப்புரை : கலாநிதி.ஸ்ரீ.பிரசாந்தன்
(முதுநிலை விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்)
கவியரங்கம்
தலைமை : கவிஞர் இ.த.ஜெயசீலன்

**30.04.2018 திங்கள் மாலை 4.00 மணி**
**நா.சதாவதானி கதிரைவேற்பிள்ளை அரங்கு**

தலைமையுரை : திரு.சி.நந்தகுமார்
(வலயக்கல்விப் பணிப்பாளர், வடமராட்சி கல்வி வலயம்)
பிரதம விருந்தினர் உரை
கௌரவ சந்திரலிங்கம் சுகிர்தன்
(உறுப்பினர்,வட மாகாணசபை)

### விருது பெறுவோர் விபரம்

விநாயகம் கிருஷ்ணகாந்தன் அவர்களால் நிறுவப்பட்ட **வீரகத்திபிள்ளை விநாயகம்** ஞாபகார்த்த கல்விப்பணிக்கான உயர் விருது பெறுபவர் - *திரு.சி.தர்மலிங்கம்*

தங்கராசா வைகுந்தன் அவர்களால் நிறுவப்பட்ட சமூகப் பணிக்கான உயர் விருது பெறுபாவர் - *திரு. வேலாயுதம் கணேஸ்வரன்*

சண்முகநாதன் சுகந்தன் அவர்களால் நிறுவப்பட்ட **திருமதி.இரத்தினமணி சண்முகநாதன்** ஞாபகார்த்த கலைப்பணிக்கான உயர் விருது பெறுபவர் - *திரு. சி.விஜயகுமார்*

**வேலுப்பிள்ளை மனோகரன்** அவர்களால் நிறுவப்பட்ட இளம் சாதனையாளர் விருது பெறுபவர் - *திரு.சி.துவாரகன்*

**திருநாவுக்கரசு நகுலன்** அவர்களால் நிறுவப்பட்ட கழக உறுப்பினர்களுக்கான **சிலம்பிசைவிருது** – பெறுபவர்கள் - *திரு.கோ.கோகிலரதன், திரு.வே.நந்தகுமார்.*

(C-2400)

**அகில இலங்கை இளங்கோ கழகம், புலோலி.**

---

# மணிவிழா நாயகியை
## பாராட்டி வாழ்த்துகின்றோம்

60

திருமதி
## நிர்மலா சிவராசா
*(மு/சிறிசுப்பிரமணிய வித்தியாசாலை)*

**26.04.2018**



**சேவைக்காலம்**
மத்திய கல்லூரி புதுக்குடியிருப்பு
1994.02.22 – 2007.12.31

சிறிசுப்பிரமணிய வித்தியாசாலை
2008.01.01 – 2018.04.25 வரை




ஆங்கில பாடமதை எங்குமில்லாதவாறு
தூங்காமல் கற்பித்தவர் தூமணி சுதா ரீச்சர்
அங்கு அவரிடம் கற்ற ஆயிரமாயிரம் கல்விமான்கள்
பூங்கொடியே வாழியவென பூப்பணிந்து வாழ்த்துகின்றனர்
எங்களின் நாயகியை எம்மினிய பாடசாலையும்
இங்கிதமாய் இந்நாளில் இதயம் பூரித்து வாழ்த்துகின்றது.

(C-2401)

பாடசாலைச் சமூகம், மு/சிறிசுப்பிரமணிய வித்தியாசாலை, புதுக்குடியிருப்பு.

---

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1394

Search for people, places and things — Nagendram Home

## சுமித்ரா

என்னுடைய ஆரம்பமும் மண்தான்...
இறுதியும் மண்தான்....



எவனொருவன் தனது தொடக்கத்தையும் முடிவையும் உணர்ந்திருக்கிறானோ! என்னைப் போல எப்போதும் குளிர்ச்சியாகவே இருப்பான்


## சுதாகர்

நேசிக்க யாருமில்லாத போதுதான் யோசிக்க வைக்கிறது வாழ்க்கை



## சுபாஷ்

பாதைகளை உருவாக்கத் தெரிந்தவர்கள் மிகக் குறைந்த நேரத்தில் இலக்குகளை எட்டி விடுகிறார்கள்



## சுந்தரம்

பெருசா ஒன்னும் ஆசை இல்லைங்க...



கை நிறைய சம்பாதிச்சு கவர்மென்ட் பஸ்ல சொந்த ஊருக்குப் போகனும்...

## சுஜிதா

என் தாய்மொழி

வலிக்கையில்- அ, ஆ
சிரிக்கையில்- இ,ஈ
காரத்தில்- உ, ஊ
கோபத்தில்- எ,ஏ
வெட்கத்தில்- ஐ
ஆச்சரியத்தில்- ஒ, ஓ
வக்கணையில்- ஔ
விக்கலில்- ஃ என்று
நம்மையறியாமல் தினமும்
தமிழை சுவாசித்துக்
கொண்டுதான்
இருக்கிறோம்

என் தாய்மொழி.

## சுமன்

பாலை அடுப்பில வைச்சிருக்கேன், ஒரு 5 நிமிசம் பார்த்துக்கங்கன்னு மனைவி சொன்னா



ஒரு அனுஉலையை பாதுகாக்கிற படபடப்பு உண்டாகுது

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். இவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தமிழர்களுக்கு ஒற்றையாட்சி வீழ்ச்சி சமஷ்டி தான் உயர்ச்சி

எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களை மக்கள் அன்பாக தந்தை என அழைப்பர். தந்தை செல்வா அவர்கள் 1889 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி மலேசியாவில் பிறந்தார். அன்னவர் மறைந்தது 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் 26 ஆம் திகதியாகும். அவரது 41 ஆவது சிரார்த்த தினம் இன்றாகும். அவர் எவ்வாறு அரசியலுக்குள் புகுந்தார், இலங்கைத் தமிழ் மக்களுக்காக என்.ன செய்தியினை விட்டுச் சென்றார் என்பதனை அறிவதற்கு அவர் கடந்து வந்த பாதையினை திரும்பிப்பார்க்க வேண்டிய தருணம் இதுவாகும்.

எத்தனையோ தலைவர்கள் வந்தார்கள், சென்றார்கள். தந்தை செல்வா ஒருவர் தான் இலங்கை தமிழர்களுக்கென்று தாயகம் உண்டென்றும், அவர்களது தாயக பூமி வடக்கு, கிழக்கு மாகாணங்கள்என்றும்அடையாளம்கண்டவர்.

இலங்கைத்தமிழர் ஒரு தேசிய இனம்என்றஉண்மையை வெளிக் கொணர்ந்தவர். ஒற்றையாட்சி தமிழர்களுக்கு வீழ்ச்சி, சமஷ்டி அரசியல் முறைதான் தமிழர்களுக்கு உயர்ச்சி கொடுக்கும் என்ற கருத்தை அரசியல் ரீதியாக முதல் முதலில் முன் வைத்தவர். வேறு எந்த தமிழ் தலைவரும் எக்காலத்திலும் இலங்கைத் தமிழர்களின் எழுச்சிக்கு தூரநோக்குடன் சிந்திக்கவில்லை, செயற்படவில்லை.

### ஐம்பதுக்கு ஐம்பது


இரண்டாம் உலக மகாயுத்தம் முடிவுற்ற பொழுது ஆங்கில அரசு இலங்கைக்கு சில கட்டுப்பாடுகளுக்கிணங்க சுதந்திரத்தை வழங்க முன்வந்தது. சோல்பரி ஆணைக்குழுவொன்றை இலங்கைக்கு அனுப்பத்திட்டமிட்டது. அவ்வேளையில் கொழும்பு நீதிமன்றங்களில் சட்டத்தொழிலில் ஈடுபட்ட பல தமிழ் நியாயவாதிகள் தந்தை செல்வநாயகத்தின் தலைமையில் ஒரு கூட்டத்தை ஒழுங்கு செய்தனர். அக்காலகட்டத்தில் தமிழ் மக்களின் அரசியல் தலைவனாக ஜீ.ஜீ. பொன்னம்பலம் உயர்ந்து நின்றார். அன்னார் 1936ஆம் ஆண்டளவில் சிறுபான்மை இனங்களின் கோரிக்கையாக 50இற்கு 50 திட்டத்தினை முன்வைத்தவர். அவரது சமபல பிரதிநிதித்துவத் திட்டத்தை தந்தை செல்வநாயகத்தின் தலைமையில் கூடிய நியாயவாதிகள் ஏற்றுக் கொண்டனர். தந்தை செல்வநாயகம் அவர்கள் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள் தான் தலைமை தாங்க வேண்டுமென்ற பிரேரணையை முன்மொழிந்தார்.

### தந்தை செல்வாவின் அரசியல் வாழ்வு

1947 ஆம் ஆண்டு தேர்தலில் தந்தை செல்வா வெற்றி பெற்றார். அத்துடன் அரசியல் வாழ்வு தொடங்கியது.

1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி இலங்கை சுதந்திரம் அடைந்தது. இலங்கை சுதந்திரம் அடைந்த பொழுது தந்தை செல்வா தமிழ் காங்கிரஸின் உப தலைவராக இருந்தார். இனங்களுக்கிடையில் அதிகார பங்கீடு இல்லாத ஒற்றையாட்சி முறையின் மூலம் சிங்கள மக்கள் மட்டும் தான் தேசிய இனமாகக் கணிக்கப்பட்டு, சகல அரசியல் அதிகாரங்களுக்கும் அவர்களே உரிமை உடையவர்கள் என்ற கோட்பாடு செயற்பாட்டில் இருந்தது. அதிகாரம் எல்லா இன மக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படவில்லை. சகல அரசியல் அதிகாரங்களும் சிங்கள மக்களிடம் குவித்துக் கொடுக்கப்பட்டன.

இவ்வாறான அரசியல் சூழ்நிலையில் தமிழ் காங்கிரஸ் தலைவர்களான ஜீ.ஜீ.பொன்னம்பலமும் தந்தை செல்வாவும் டி.எஸ். சேனநாயக்கவின் அரசாங்கத்தில் சேருவதற்கான முயற்சிகளை எடுத்தார்கள். மலையகத்தமிழர்களுக்கு பிரஜாவுரிமை வழங்குதல், தமிழ், சிங்கள மொழிகளை அரசகரும மொழிகளாக ஆக்குதல், சுதந்திரம் பெற்ற இலங்கைக்கு ஏற்றதான தேசியக்கொடி உருவாக்குதல். தமிழ் பேசும் மக்களின் பிரதேசங்களில் சிங்கள குடியேற்றங்களை அரசு நிற்பாட்டுதல் ஆகிய நான்கு கோரிக்கைகளுக்கு எழுத்து மூல வாக்குறுதியை பெற்ற பின்பு ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்துடன் சேர வேண்டுமென தந்தை செல்வா நின்றார். தலைவர் பொன்னம்பலம் எழுத்து மூல வாக்குறுதியை மட்டுமல்ல இந்த நான்கு கோரிக்கைகளையும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஒற்றையாட்சித் திட்டத்தில் அமைக்கப்பட்ட சோல்பரி அரசியலமைப்பை ஏற்று ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்துடன் சேருவதற்கான செயற்பாடுகளை தந்தை செல்வா செய்கின்றபொழுதே அவரது சிந்தனையாலும், பேச்சாலும் எழுத்தாலும் சமஷ்டி அரசியல் முறையே தமிழ் மக்களைக்காப்பாற்றும்எனவெளிப்படுத்திக் கொண்டிருந்தார்.




### இலங்கை தமிழர் எதிர்காலம்

1948 ஆம் ஆண்டிலேயேவட்டுக்கோட்டையை நோக்கி பாதை அமைப்பதற்காக இலங்கைத் தமிழரின் எதிர்காலம் என்ற கட்டுரையை 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி, இலங்கை சுதந்திரம் அடைந்த அன்றைய தினத்தின் வீரகேசரியில், தந்தை செல்வநாயகத்தால் எழுதப்பட்டு பிரசுரிக்கப்பட்டது.



இலங்கைத் தமிழரின் எதிர்காலம் எனும் தந்தையின் கட்டுரையின் ஒருபகுதி மின்னி மிளிர்கின்றது.

ஓரே ஏக சர்க்காரின் கீழ் தமிழர்களுக்கு எதிர்காலத்தில் இடமில்லை என்பது என் மனதில் தெளிவாகத் தெரிகிறது. தமிழ் மாகாணங்களையும் சிங்கள மாகாணங்களையும் வெவ்வேறாகக் கொண்ட சமஷ்டி சர்க்காரில் அவர்கள் பிரவேசிக்க வேண்டும்.

பல அழிவுகளுக்குப் பின்பும் சர்வதேச அழுத்தங்களின் பின்பும், ஒரு துரும்பு அதிகாரத்தையும் தமிழருக்குக் கொடுப்பதற்கு பின்னின்றது இலங்கை அரசு. 1956 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையும் வட்டமேசை மாநாடென்றும் சர்வகட்சிகள் கூட்டமென்றும், தெரிவுக்குழுவென்றும் தமிழர் பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. தீர்வு ஒன்றும் காணப்படவில்லை. சட்டங்கள் இயற்றப்பட்டன. அவற்றின் மூலமும் தீர்வு எட்டப்படவில்லை.

ஆனால் இன்றைய புதிய அரசாங்கம் புதிதாக உருவாக்கப்படும் அரசியலமைப்பில் தமிழர்களுக்கென பிரத்தியேக தீர்வு பொதி வைக்கப்படும் என அறிவிக்கப்படுகின்றது. அதன்மூலம் சகல உரிமைகளும் வழங்கப்படும் என அடிக்கடி ஞாபகப்படுத்தப்படுகின்றது. அதன் ரீதியாக கூட்டமைப்புத் தலைவர்களுக்கு சில பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

குறிப்பாக எதிர்க்கட்சி தலைவர் பதவி வழங்கி, அவரையும் அரசியலமைப்பு உருவாக்குவதில் ஒரு பங்குதாரராக ஆக்கியுள்ளனர்.

இச்சூழ்நிலையில், நாம் எல்லோரும் சகலவித முரண்பாடுகளை களைந்து ஒன்று சேர வேண்டும்.

நாங்கள் சிறுவயதில் படித்த வேடனும் புறாக்களும் என்ற கதையில், வேடன் விரித்த வலையுடன் ஒற்றுமையாக பறந்து சென்று புறாக்கள் தப்பித்துக் கொண்டன. அவ்வாறு நாம் எல்லோரும் செயற்பட வேண்டிய வரலாற்று திருப்பு முனையில் இருக்கின்றோம்.

எல்லோரும் ஒன்று சேர்வோம். வருங்காலத்தை இருட்டாக்காமல், ஒளிமயமாக்குவோம்.

சி.வி.விவேகானந்தன்
சட்டத்தரணி,
கொழும்பு.

# தீர்க்கதரிசி தந்தை செல்வா

இன்று தமிழர் தலைவர் தந்தை செல்வா அவர்களின் 41 ஆவது சிரார்த்த தினமாகும். இன்றைய நாளில் அவரை நினைவு கொள்ள வேண்டியது தமிழர் அனைவரதும் தலையாய கடமையாகும். ஏனென்றால் இலங்கையில் தமிழ் இனம் என்று ஒன்று இருக்கிறது என்பதை இன்றும் உயிர்த்துடிப்புடன் வைத்திருப்பதற்கு வித்திட்ட தலைவர் தந்தை செல்வா அவர்களே.

இலங்கையில் தமிழ் பேசும் மக்களும் சிங்களம் பேசும் மக்களும் இரண்டு தனியான தேசிய இனங்கள் என்றும், சிங்களவர்களுக்கும் தமிழருக்கும் தங்களுடைய அரசியல் உரிமையைத் தாங்களே தீர்மானித்துக் கொள்ளும் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர் எனவும் அதனடிப்படையில் சமஷ்டி முறையிலான அரசியலமைப்பே இலங்கைக்குப் பொருத்தமான தெனவும் அதனை அடைவதற்கு அஹிம்சை வழியிலான போராட்டங்களே சரியான தெனவும் தந்தை செல்வா அவர்கள் மிகவும் தெளிவாகவும் ஆணித்தரமாகவும் முதற் கூட்டத்திலேயே அழுத்தம் திருத்தமாக வெளிப்படுத்தினார். இந்த அடிப்படை மூலாதாரக் கொள்கையானது, தத்துவமானது. 69 ஆண்டுகள் கழிந்த பின்பும் இன்றும் மாற்றமடையாது, பின்னால் வந்த பல கட்சிகளுக்கும் இயக்கங்களுக்கும் அடிப்படைக் கொள்கையாகத் திகழ்கிறது.

தந்தை செல்வா அவர்கள் தமிழ் பேசும் மக்களை ஒன்றிணைக்கும் சக்தியாகத் திகழ்ந்தார். பிரதேசவாதங்களுக்கு அப்பால், சமயப் பிரிவினைகளுக்குள் மூழ்கி விடாது, சாதி வேற்றுமைகளுக்கு இடம் கொடுக்காது ஒற்றுமையான தமிழ் இனமொன்றை கட்டியெழுப்ப பாடுபட்ட தலைவராகத் திகழ்ந்தார். தந்தையின் இந்த அணுகு முறை தான் கிறிஸ்தவரான அவரைச் சகலரும் தமது தலைவராக ஏற்றுக் கொண்ட தலைவராக்கியது.

தந்தை செல்வா அவர்கள் அஹிம்சை வழியிலான போராட்டங்கள் மூலம் தமிழரின் உரிமையை வென்றெடுக்கலாம் என பூரணமாக நம்பினார் என மேலே குறிப்பிட்டேன். அதற்காக அவர் காலி முகத்திடல் சத்தியாக்கிரகம், சிறி எதிர்ப்புப் போராட்டம், கச்சேரி மறியல் சத்தியாக்கிரகம், பாதயாத்திரை போன்ற சகல போராட்டங்களிலும் தலைமை தாங்கி மற்றையோருக்கு முன் மாதிரியாக விளங்கினார்.

1972 ஆம் ஆண்டு புதிய குடியரசு அரசியலமைப்பு தமிழர்களின் ஆகக்குறைந்த கோரிக்கைகளையும் நிராகரித்து சோல்பரி அரசியலமைப்பில் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பாக வழங்கப்பட்ட 29 ஆவது சரத்தையும் நீக்கி நடைமுறைப்படுத்தப்பட்டபோது அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தந்தை செல்வா தனது காங்கேசன்துறை பாராளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்து முடியுமானால் இடைத் தேர்தலை வைத்து தன்னுடன் போட்டியிடுமாறு அரசிற்குச் சவால் விடுத்தார். ஆனால் அரசாங்கமோ இடைத் தேர்தலை நடத்தாது இழுத்தடித்தது.

பின்பு 1975 டிசெம்பரில் நடத்தப்பட்ட இடைத்தேர்தலில் அமோக வெற்றி பெற்று தமிழர்களின் அரசியல் நிலைப்பாட்டை உலகுக்கு வெளிப்படுத்தினார்.

இப்படியான துணிச்சலும் மக்களுக்காக இழப்புகளைத் தாங்கிக் கொள்ளும் மனப்பாங்கும் வேறு எத்தலைவருக்கும் எளிதில் வரக்கூடியதொன்றல்ல. தந்தை செல்வாவைத் தவிர வேறெந்த அரசியல்வாதியும் தாம் பிரதிநிதித்துவப்படுத்திய மக்களுக்காக தங்கள் பதவிகளைத் தூக்கி எறிந்த சரித்திரம் முன்பும் இருந்ததில்லை, பின்பும் நடந்ததில்லை.

அழியாத அரசியல் சித்தாந்தத்தையும் முன் மாதிரியாகக் கொள்ளத்தக்க நடைமுறைகளையும், பொதுவாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க முறைகளையும் எமக்கு வழங்கி மறைந்த அரசியற் தீர்க்கதரிசி தந்தை செல்வா அவர்களை அன்னாரின் 41 ஆவது சிரார்த்த தினத்தில் நினைவு கொண்டு மரியாதை செலுத்துவது ஒவ்வொரு தமிழனதும் தலையாய கடமையாகும்.

ஆ.ந.இராசேந்திரன்
முன்னாள் தலைவர், யாழ்.
மாவட்ட அபிவிருத்தி சபை

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பாரிய மாற்றங்களை மேற்கொள்ள தீர்மானம்

## முன்னாள் அமைச்சர் டிலான் தகவல்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை மறுசீரமைப்பதற்கான சீர்திருத்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது என முன்னாள் அமைச்சர் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தின் புதிய அமர்வுகள் ஆரம்பமாகி 45 நாட்களுக்குள் சீர்திருத்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு கட்சி தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்தியகுழுவின் கூட்டத்திலேயே இந்த முடிவினை எடுத்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட 45 நாட்களுக்குள் தேசிய அரசாங்கத்தில் தொடர்வதா என்ற முடிவையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எடுக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

மே 8 ஆம் திகதிக்கு பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி குழுவொன்றை நியமிக்கும் எனவும் தெரிவித்துள்ள அவர் கட்சிக்குள் பல பதவிகளில் நிச்சயமாக மாற்றம் வரும் எனவும் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தின் அடுத்த அமர்வின் போது தேசிய அரசாங்கத்திலிருந்து விலகிய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 16 நாடாளுமன் உறுப்பினர்களும் எதிரணி வரிசையில் அமர்வார்கள் எனவும் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார். (இ)

# பரீட்சை திணைக்கள பெறுபேறுகளை ஒன்லைன் மூலம் உறுதி செய்தல்



(கொழும்பு)

இலங்கை பரீட்சைத்திணைக்களத்தின் பெறுபேறுகளை ஒன்லைன் முறையில் உறுதி செய்ய முடியும்.

இதன் முதற்கட்ட நடவடிக்கை நேற்று முன்தினம் ஆரம்பமானது. 6 இலட்சத்திற்கு மேற்பட்ட சான்றிதழ்களின் பெறுபேறுகள் உறுதி செய்வதற்காக பரீட்சை திணைக்களத்தில் கிடைக்கின்றன.

இவற்றில் பெரும்பாலானவை நாட்டிலுள்ள வலய அலுவலகங்களிலிருந்து கிடைக்கப் பெறும் கோரிக்கையாகும் என்று பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சை சான்றிதழை உறுதி செய்யும் நடவடிக்கையை பரீட்சை திணைக்களத்தின் சான்றிதழ் கிளை மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

உறுதி செய்வதற்கான கோரிக்கையை பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்போது இடம் பெறும்முறைகேடுகள், காலதாமதம் ஆகியவற்றை தடுப்பதே இதன் நோக்கமாகும்.

இதற்காகவே இந்த ஒன்லைன் முறை கணனியுடன் நேரடி தொடர்பை கொண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதனூடாக வலய அலுவலகங்களுக்கு பெறுபேறுகளை உறுதி செய்யும் அதிகாரம் பரவலாக்கப்பட்டுள்ளது.

அனைத்து பணிகளும் பரீட்சை திணைக்களத்தின் முழுமையான கண்காணிப்பில் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தலைமையில் பரீட்சை திணைக்களத்தில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் வீ.எஸ். இராதாகிருஷ்ணன், பரீட்சை திணைக்களத்தின் ஆணையாளர் சனத் பூஜித் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (இ)

# RTI சட்டத்தின் பின் மக்களின் நிலை ஆவணப்படுத்தல் வெளியீடு இன்று

(ஹற்றன்)

இலங்கையில் தகவலறியும் உரிமை (RTI) சட்டம் அமுல்படுத்தப்பட்டு ஒரு வருடம் நிறைவடைந்துள்ளது.

இது தொடர்பாக சமூக சிற்பிகள் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ள, "RTI Law in Sri Lanka - The Dawn of a FISHBOWL REGIME" என்ற தலைப்பிலான பொது மக்களின் குரல்களை வெளிப்படுத்தும் ஆவணப்படுத்தலொன்று வெளியிடப்படவுள்ளது.

இந்த நிகழ்வு ஹற்றன் கல்வி அபிவிருத்திக்கான இலங்கை நிறுவக நிலையத்தில் (SIDA Centre for Education Development, Hatton) இன்று முற்பகல் 10 மணி முதல் 11.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் விருந்தினராக, தகவலறியும் உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளரான கிஷாலி பின்டோ ஜெயவர்தன கலந்து கொள்ளவுள்ளதுடன், விசேட விருந்தினர்களாக, சட்டத்தரணி ஈ. தம்பையா, பிஜிக்கான நீதிபதி ஜயந்த டி அல்மெய்டா குணரத்ன, தகவலறியும் உரிமை தொடர்பான பத்தியாளர் கிங்ஸ்லி கோமஸ் ஆகியோர் பங்குபற்றுவர். (இ)

# அவயவங்களை தானம் செய்வதற்கான உடன்பாட்டு உறுதிப்பத்திரம் கையளிப்பு



(கொழும்பு)

மஹர கடவத்த வெசாக் வலயத்திற்கு அமைவாக கண்களை தானம் செய்வதற்கான உடன்பாட்டு பத்திரம் கைச்சாத்திடும் வேலைத் திட்டம் நேற்று ஆரம்பமானது.

கொழும்பு வித்யா மாவத்தையிலுள்ள கண் தான சங்க தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற இந்த நிகழ்வில் நிதி மற்றும் ஊடகத்துறை பிரதியமைச்சர், லசந்த அழகியவண்ணவின் எண்ணக் கருவிற்கு அமைவாக லசந்த அழகியவண்ண அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

2017ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்த வெசாக் வலயத்தை பார்வையிடுவதற்காக வருகைதந்த நன்கொடையாளர்களால் கைச்சாத்திடப்பட்டு கையளிக்கப்பட்ட கண் மற்றும் அவயவங்களை நன்கொடையாக வழங்குவதற்கான உறுதிப்பத்திரங்களின் B பிரிவு உத்தியோகபூர்வமாக இலங்கை கண்தான சங்கத்திடம் நேற்று கையளிக்கப்பட்டது. (இ)

# செய்தித்துளிகள்

## சித்திரத்தேர் வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டி இனிச்ச புளியடி முருகன் திருக்கோவில் புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் அருளாசிகளுடன் ஆரம்பமாகும். மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் தேர்த் திருவிழா இடம்பெறும். (இ)

## சிறுபோகம் உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளுக்கு ரூ.40,000 காப்புறுதி

(கொழும்பு)

இம்முறை சிறுபோக உற்பத்தியில் ஈடுபடும் அனைத்து விவசாயிகளுக்கும் 40 ஆயிரம் ரூபா காப்புறுதி வழங்கப்படவுள்ளது என கமத் தொழில் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

"ஒன்றிணைந்து தலை நிமிருவோம்" என்ற விவசாய மேம்பாட்டு வேலைத்திட்டம் வடமத்திய மாகாணத்தில்நேற்று இடம் பெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் துமிந்த மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ)

## கஞ்சா பயிரிட்டவர் கைது

(புத்தளம்)

புத்தளம் - வந்தமதெமனிய பிரதேசத்தில் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் கஞ்சா பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருந்த நபர் ஒருவர் புத்தளம் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் பொலிஸாருக்கு தொலைபேசி அழைப்பின் மூலம் கிடைக்கப் பெற்ற ரகசியத் தகவலையடுத்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் புத்தளம் குடாகம்மான லுணு கம்வேஹெர பகுதியைச் சேர்ந்த 31 வயதுடையவராவார்.

மேலும் இச் சுற்றிவளைப்பின் போது ஒரு ஏக்கர் காணியில் பயிர்ச்செய்கை செய்யப்பட்ட 50,000 கஞ்சாச் செடிகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபரை நேற்று வெல்லவாய நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

## அம்பாறையில் குப்பையால் ஆறு யானைகள் உயிரிழப்பு



(அம்பாறை)

அம்பாறை - தீகவாவி பிரதேசத்தில் குப்பைகளை உட்கொண்டதன் காரணமாக இதுவரை ஆறு யானைகள் உயிரிழந்துள்ளதாக அம்பாறை வனஜீவராசிகள் பாதுகாப்புப் பிரிவின் கால்நடை வைத்தியர் நிஹால் புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

கல்முனை, சம்மாந்துறை மற்றும் அக்கரைப்பற்று பிரதேசங்களில் இருந்து கொண்டு வரப்படும் குப்பைகள் குறித்த இடத்தில் கொட்டப்படுவதாக பிரதேச வாசிகள் குற்றம் சுமத்தியுள்ளனர். குறித்த வனப்பகுதியிலிருந்து குப்பைகளை உண்பதற்காக காட்டு யானைகள் நாள்தோறும் வருவதாக பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## கனடாவில் வான் மோதியதால் இலங்கைப் பெண்ணும் பலி!

(டொரண்ரோ)

கனடாவின் டொரண்டோவில் வானால் பொதுமக்கள் மோதப்பட்ட சம்பவத்தில் இலங்கை பெண்ணொருவரும் உயிரிழந்துள்ளார்.

ஹொரணை பகுதியைச் சேர்ந்த ரேணுகா அமரசிங்க என்ற பெண்ணே இந்த சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் கடந்த சில வருடங்களாக டொரண்டோவில் வசித்து வந்ததாக கனடாவிலுள்ள இலங்கையை சேர்ந்த பௌத்தமத குரு ஒருவர் உறுதிசெய்துள்ளார்.

கனடாவை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ள இந்த சம்பவத்தில் 10 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)




# தானத்தில் சிறந்தவர்



ரொம்ப நாட்களாகவே பாண்டவர்களுக்கு ஒரு சந்தேகம் இருந்தது. அது நம்முடைய அண்ணன் தர்மரும் தானம் செய்வதில் சிறந்தவர். இருப்பினும் கர்ணனையே ஏன் எல்லாரும் தானம் செய்வதில் சிறந்தவன். என்று கூறுகின்றனர் என்பது தான் அது. இவர்கள் மனதில் உள்ள சந்தேகத்தை அறிந்த கிருஷ்ணன் ஒரு நாள் பாண்டவர்களை அழைத்தார்.

தங்கமலை, வெள்ளி மலை என இரு மலைகளை உருவாக்கினார். பின் பாண்டவர்களை நோக்கி,

"இங்கே பாருங்கள்! இந்த இரு மலைகளையும் பொழுது சாய்வதற்குள் தருமம் செய்து விட்டால் தானத்தில் சிறந்தவர் தர்மர் என்று நீங்கள் சொல்வதை ஒப்புக் கொள்கிறேன்" என்று கூறினார்.

பீமனும், அர்ஜுனனும் மற்றவர்களும் அந்த இரு மலைகளில் இருந்து தங்கத்தையும், வெள்ளியையும் பாளம் பாளமாக வெட்டி எடுத்துத் தர தருமர் அதை உடனுக்கு உடன் நகர மக்களுக்குத் தானம் செய்தார்.

ஆனால், நகர மக்களில் பெரும் பகுதியினருக்கு அவ்வாறு தானம் செய்தும் தங்கமும் வெள்ளியும் குறையவே இல்லை. அதற்கு மாறாக அவ்விரு மலைகளும் வெட்ட வெட்ட வளர்ந்து கொண்டே இருந்தன.

மாலைப் பொழுது வந்ததும் இனி தங்களால் முடியாது என்பதை உணர்ந்த தருமர், "எங்களால் முடியாது கண்ணா!" என்று தன் தோல்வியை ஒப்புக் கொண்டார்.

உடனே கிருஷ்ணன் ஓர் ஆளை அனுப்பி கர்ணனை வரவழைத்தார்.

"கர்ணா! இதோ பார் இந்த இரண்டு மலைகளில் ஒரு மலை தங்க மலை. மற்றொன்று வெள்ளி மலை. இதை நீ பொழுது சாய்வதற்குள் தானம் செய்ய வேண்டும். பொழுது சாய இன்னும் ஒரு நாழிகைப் பொழுதே உள்ளது. உன்னால் முடியுமா? யோசித்துச் சொல்" என்று கூறினார்.

உடனே கர்ணன், "இதில் யோசிக்க என்ன இருக்கிறது இப்போதே செய்து காட்டுகிறேன்" என்று கூறி அங்கிருந்த இருவரை அழைத்து, "இதோ பாருங்கள்! நீங்கள் இருவரும் ஆளுக்கொரு மலையாக இவற்றை எடுத்துக்கொள்ளுங்கள்" என்று கூறி தனது தர்மத்தை முடித்து விட்டுக் கிளம்பினான்.

பாண்டவர்கள் அசந்து போயினர். அவர்களை ஒரு அர்த்தப் பார்வையுடன் பார்த்து சிரித்தார் கிருஷ்ணன். தர்மருக்கும் பரந்த மனசு தான். அதை யாரும் மறுக்க முடியாது.

ஆனால், அவரைக் காட்டிலும் தான தருமம் செய்வதில் பரந்த மனசு உடையவன் கர்ணனே என்பதை சொல்லாமல் பாண்டவர்களுக்கு உணர்த்திவிட்டார் கிருஷ்ணன்.




- 1802-நெப்போலியன் பொனபார்ட் பிரெஞ்சுப் புரட்சியை அடுத்து நாட்டை விட்டு வெளியேறிய அல்லது வெளியேற்றப்பட்டவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கினான்.
- 1865-அமெரிக்க அதிபர் ஆபிரகாம் லிங்கனை கொலை செய்த ஜோன் பூத் என்பவனை கூட்டணிப் படைகள் சுட்டுக் கொன்றனர்.
- 1954-பிரெஞ்சு இந்தோசீனா, மற்றும் வியட்நாமில்வில் அமைதியைக் கொண்டுவரும் முகாமாக ஜெனீவாவில் அமைதிப்பேச்சுக்கள் ஆரம்பமாயின.
- 1982-தென் கொரியாவில் முன்னாள் காவல்துறையினன் ஒருவன் துப்பாக்கிச் சூடு நிகழ்த்தியதில் 57 பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

**பிறப்புகள்**

- 1762-சியாமா சாஸ்திரிகள், கர்நாடக இசைமும்மூர்த்திகளில் ஒருவர் (இ. 1827)
- 1889-லுட்விக் விட்கென்ஸ்டைன், யூத ஆத்திரிய-ஆங்கிலேய மெய்யியலாளர் (இ. 1951)
- 1900-சார்லஸ் ரிக்டர், அமெரிக்க இயற்பியலாளர் (இ. 1985)
- 1906-ஜி. பட்டுஐயர், திரைப்பட நடிகர், இயக்குநர்
- 1912-தி. க. சண்முகம், தமிழக நாடக, திரைப்பட நடிகர், அரசியல்வாதி (இ. 1973)
- 1914-ஆர். சுதர்சனம், தென்னிந்தியத் திரைப்பட இசையமைப்பாளர்
- 1917-ஐ. எம். பேய், சீன-அமெரிக்க கட்டிடக்கலைஞர்
- 1938-நீல பத்மநாபன், தமிழக எழுத்தாளர்
- 1965-கெவின் ஜேம்ஸ், அமெரிக்க நடிகர்
- 1967-மா. ஆண்டோ பீட்டர், தமிழக எழுத்தாளர், மென்பொருள் உருவாக்குநர் (இ. 2012)
- 1970-சரண்யா பொன்வண்ணன், தென்னிந்தியத் திரைப்பட நடிகை
- 1970-மெலனியா திரம்ப், அமெரிக்காவின் முதல் பெண், அரசுத்தலைவர் டோனால்ட் டிரம்ப்பின் மனைவி
- 1973-சமுத்திரக்கனி, தமிழகத் திரைப்பட இயக்குநர்

**இறப்புகள்**

- 1897-பெ. சுந்தரம் பிள்ளை, மனோன்மணீயம் என்ற நாடக நூலைப் படைத்த தமிழறிஞர் (பி. 1855)
- 1920-இராமானுசன், இந்தியக் கணிதவியலாளர் (பி. 1887)
- 1961-ஹரி சிங், இந்தியாவின் சம்மு காசுமீர் சுதேச சமத்தானத்தின் இறுதி டோக்ரா குல மன்னர் (பி. 1895)
- 1976-க. இராமச்சந்திரா, ஈழத்துத் தமிழறிஞர், எழுத்தாளர்
- 1977-எஸ். ஜே. வி. செல்வநாயகம், இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் (பி. 1898)
- 1991-வேலா அரசமாணிக்கம், தமிழக இதழாளர், பேச்சாளர் (பி. 1937)
- 2005-அகுஸ்டோ ரொவ பாஸ்டோ, பராகுவை ஊடகவியலாளர், எழுத்தாளர் (பி. 1917)
- 2016-எம்.எச். முகம்மது, இலங்கை அரசியல்வாதி (பி. 1921)

**சிறப்பு நாள்**

- செர்னோபில் விபத்து நினைவு நாள் (உருசியா, பெலருஸ்)
- இணைவு நாள் (தான்சானியா)
- அறிவுசார் சொத்துரிமை நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சுன்னாகம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 30 | 40 | 50 | 45 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 70 | 80 | 65 | 80 | 75 |
| பச்சைமிளகாய் | 50 | 40 | 30 | 50 | 45 | 80 | 30 |
| தக்காளி | 30 | 40 | 20 | 30 | 20 | 60 | 20 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 | 50 | 25 | 40 | 30 |
| கோவா | 30 | 40 | 30 | 50 | 25 | 50 | 30 |
| கரட் | 80 | 100 | 100 | 100 | 50 | 100 | 80 |
| பூசணி | 30 | 20 | 50 | 40 | 15 | 40 | 40 |
| புடோல் | 80 | 50 | 60 | 70 | 20 | 80 | 80 |
| வாழைக்காய் | 40 | 40 | 30 | 50 | 30 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 160 | 170 | 130 | 150 | 180 | 160 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 70 | 60 | 55 | 60 | 70 |
| பாகற்காய் | 120 | 120 | 100 | 100 | 80 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 60 | 50 | 30 | 160 | 60 |
| கருணைக்கிழங்கு | 60 | 100 | 60 | 40 | — | 80 | 50 |
| பயற்றங்காய் | 100 | 100 | 80 | 70 | 40 | 80 | 80 |
| லீக்ஸ் | 150 | 200 | 160 | 200 | 170 | 240 | 160 |
| பீற்றூட் | 40 | 30 | 30 | 40 | 15 | 60 | 30 |
| கறிமிளகாய் | 100 | 60 | 70 | 60 | 20 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 300 | 250 | 250 | 250 | 200 | 240 | 300 |
| போஞ்சி | 120 | 200 | 100 | 100 | 40 | 200 | 100 |
| கத்தரித்தம்பிரான் | 40 | 20 | 40 | – | — | 60 | 40 |
| கீரை - பிடி | 40 | 20 | 30 | 50 | 20 | 30 | 50 |
| தேசிக்காய் | 250 | 200 | 280 | 280 | 180 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 90 | 75 | 30-55 | 50-75 | 90 |
| இராசவள்ளி | 180 | 200 | — | 120 | 130 | 160 | 150 |
| வெங்காயப்பூ | – | — | — | – | — | — | — |
| முள்ளங்கி | 40 | 100 | 40 | – | 15 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 40 | 10 | 30 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 10 | 20 | 35 |
| ஈரப்பலா | — | — | — | – | — | – | — |

தமிழ் மக்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும். – தந்தை செல்வா

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# ஸ்ரீலங்கன் விமான சேவை மோசடிகள் குறித்த விசாரணைகள் அடுத்த இரண்டு வாரத்தில்

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

(கொழும்பு)

ஸ்ரீலங்கன் விமான சேவை மோசடிகள் குறித்த விசாரணைகள் அடுத்த இரண்டு வாரத்தில் ஆரம்பிக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இலங்கை விமான சேவை நிறுவனத்துடன் இணைந்த, தொழிற்சங்க சம்மேளனத்துடன் நேற்றுக் காலை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் ஊழல், மோசடிகள் தொடர்பில் விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் சாட்சி விசாரணை நடவடிக்கைகள் எதிர்வரும் இரணடு வாரத்திற்குள் ஆரம்பிக்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

மேலும், தொழிற்சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரிடமும் தரவுகள் மற்றும் ஆலோசனைகளையும் பெற்று, அரசாங்கத்துக்கு தேவையான பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்கு அந்த ஆணைக்குழு விரைவாக பணிகளை ஆரம்பிக்கும் என்று ஜனாதிபதி இதன்போது தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கன் விமான சேவை தொடர்பாக சர்வதேச அளவில் இருக்கும் வரவேற்பையும் நன்மதிப்பினையும் பாதுகாத்துக் கொண்டு தரமானசேவையை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி இதன்போது தெளிவுபடுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

# பிரச்சினையை தீர்க்காவிட்டால் சம்பந்தர் ஐயா என்ன செய்வார்?

அரசாங்கம் இனப்பிரச்சினையைத் தீர்க்காவிட்டால் உரிய தீர்வை நாமே தேடிக் கொள்வோம் என எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தர் அவர்கள் கூறியுள்ளார்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றியபோது அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தர் அவர்கள் ஆற்றிய இந்த உரை பல்வேறு கோணங்களில் நம்மைச் சிந்திக்க வைக்கின்றது.

அதில் முக்கியமானது இலங்கை அரசாங்கம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு தரும் என்று சம்பந்தர் ஐயா நம்புகிறார்.

அவ்வாறு தீர்வு தராவிட்டாலும் தீர்வைப் பெறுவதற்கான வியூகம் தன்னிடம் இருப்பதைப் போலவும் அவர் காட்டியுள்ளார்.

இங்குதான் ஒரு கேள்வி எழுகிறது. அதாவது நல்லாட்சி அரசாங்கம் இதுவரை தமிழ் மக்களின் முதன்மைப் பிரச்சினைகள் பற்றி இம்மியும் சிந்திக்கவில்லை.

அதில் காணாமல்போனவர்களின் விவகாரம், தமிழ் அரசியல் கைதிகளின் விடயம், தமிழ் மக்களின் வாழ்விடங்களை ஆக்கிரமிப்புச் செய்துள்ள படையினரின் நிலக்கபளீகரம் என்பன முக்கியமானவை.

இதுவிடயத்தில் நல்லாட்சியின் நடவடிக்கை எதுவுமில்லை. அதிலும் தமிழ் அரசியல் கைதி ஆனந்தசுதாகரனை விடுதலை செய்வதாக அவரின் குழந்தைகளிடம் ஜனாதிபதி உறுதியளித்தும் அதுகூட நடக்கவில்லை.

ஆக, நல்லாட்சி பதவியேற்று காலம் கடக்கிறதே தவிர, இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயத்தில் எந்த முன்னேற்றமும் ஏற்பட்டதாக இல்லை.

இதுதவிர, நம்பிக்கையில்லாப் பிரேரணையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகக் கூட்டமைப்பு வாக்களித்தது.

அதேசமயம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இரண்டாயிரம் பௌத்த விகாரைகளை வடக்கு கிழக்கில் ஸ்தாபிப்பது என குறிப்பிட்டிருந்தது.

இத்தகையதொரு தேர்தல் விஞ்ஞாபனத்தின் தூண்டுதல் காரணமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தில் புத்தர் சிலையை வைப்பது தொடர்பில் சிங்கள மாணவர்கள் விடாப்பிடியாக நின்றனர்.

இதனால் தமிழ் – சிங்கள மாணவர்களிடையே மிகப்பெரும் மோதல் ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகியிருந்தது.

இவற்றுக்கு அப்பால், இந்து ஆலயங்கள் அமைந்துள்ள இடங்களில் புத்தர் சிலைகளை நிறுவி இந்து ஆலயங்களைத் தமதாக்குகின்ற நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

நிலைமை இதுவாக இருக்கையில், இலங்கை அரசாங்கம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு தரும் என சம்பந்தர் நம்புவது அவர் குறித்த சந்தேகங்களை ஏற்படுத்தும் அதேவேளை, அவர்கள் தராவிட்டால் நாங்கள் தீர்வைப் பெற்றுக் கொள்வோம் என்று கூறுவதானது,

சம்பந்தர் ஐயா தன் வயோதிபத்தைக் குறிப்பிட்டுச் சொல்கிறாரா? அல்லது மாபெரும் போராட்ட வியூகம் அவரிடம் இருக்கிறதா? என்பதுதான் புரியாமல் உள்ளது.

## உரையாற்ற சந்தர்ப்பம் வழங்கப்படாததால்

# வட மாகாண சபை உறுப்பினர் நிகழ்வு மண்டபத்திலிருந்து வெளியேறினார்

வவுனியா நகரசபை வரவேற்பு நிகழ்வில் இருந்து சடுதியாக வெளியேறிய மாகாண சபை உறுப்பினர்களால் பரபரப்பு ஏற்பட்டது.

வவுனியா நகரசபையின் உறுப்பினர்களை வரவேற்கும் நிகழ்வு வவுனியா நகர சபை மண்டபத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இதன்போது அதிதிகளுக்கு உரையாற்றும் சந்தர்ப்பம் வழங்கப்பட்ட நிலையில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் உரையாற்றிய நிலையில் மாகாணசபை உறுப்பினர் எம்.தியாகராசா மேடையில் அமர்ந்திருந்த சந்தர்ப்பத்தில் நிகழ்வுக்கு சமுகமளிக்காத பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தானின் பிரதிநிதியொருவருக்கு உரையாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

இதனால் ஆத்திரமடைந்த மாகாணசபை உறுப்பினர் நிகழ்வு மண்டபத்தில் இருந்து வெளியேறியிருந்தார்.

இந்நிலையில் ஊடகவியலாளர்கள் ஏன் வெளியேறுகின்றீர்கள் என தொடர்பு கொண்டு கேட்டபோது யார் யாரோ எல்லாம் பேசுகின்றார்கள்.

மாகாண சபை உறுப்பினர் என்றவகையில் மதிப்பளிக்கத்தெரியாத இடத்தில் இருப்பது சிறப்பல்ல. எனவே வெளியேறி வவுனியா வடக்கு பிரதேச சபையின் நிகழ்விற்கு செல்கின்றேன் என தெரிவித்தார். (ம-250)

# அரசின் அறிவிப்பை புறம் தள்ளிவிட்டு மே முதலாம் திகதி தொழிலாளர் தினம்

## தமிழ்க் கட்சிகள், பொது அமைப்புக்கள் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

தொழிலாளர் தினத்தை மே மாதம் முதலாம் திகதியே நடத்துவதற்கு தமிழ் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

அரசாங்கம் மே மாதம் முதலாம் திகதியை வெசாக் விடுமுறை தினமாக அறிவித்து மே 7 ஆம் திகதியை மே தினமாக அறிவித்திருந்தது.

இந்த நிலையிலேயே அரசின் தீர் மானத்துக்கு தாம் கட்டுப்படப் போவதில்லை என தமிழ் கட்சிகளின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தொழிலாளர் தினம் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி மாலை நான்கு மணியளவில் நல்லூர் கிட்டு பூங்காவில் நடைபெறவுள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைபபின் தொழிலாளர் தினம் முதலாம் திகதியன்று வடமராட்சி மாலு சாந்தி மைதானத்தில் பிற்பகல் மூன்று மணியளவில் நடைபெறவுள்ளது.

இதேபோன்று யாழ்.பல்கலைக்கழக அமைப்புக்கள், ஆசிரியர் சங்கங்கள், வடக்கு மாகாண சபை மற்றும் வடக்கில் உள்ள சிவில் அமைப்புக்களின் தொழிலாளர் தினம் என்பன எதிர்வரும் முதலாம் திகதியன்றே நடைபெறவுள்ளதாக அறிய முடிகின்றது.

இதேவேளை உலகம் முழுவதும் தொழிலாளர் தினம மே மாதம் முதலாம் திகதியனறே இடம்பெறவுள்ள நிலையில்,

இலங்கையில் ஒரு இனத்தை சேர்ந்தவர்களுக்காக உழைக்கும் மக்களுக்காக உள்ள ஒரே தினத்தை மாற்றி அமைப்பது என்பது ஒருபோதும் ஏற்க முடியாது என தமிழ் அரசியல் தலைவர்கள தெரிவித்துள்ளனர். (இ-4)

# இலங்கை ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி

இலங்கை ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளது.

அமெரிக்க டொலர் ஒன்றுடன் ஒப்பிடுகையில் இலங்கை ரூபாயின் பெறுமதி வரலாறு காணாதளவு வீழ்ச்சி கண்டுள்ளது.

இதற்கமைய அமெரிக்க டொலர் ஒன்று 159 ரூபாயுக்கும் அதிக தொகையில் விறபனை செய்யப்படவுள்ளது.

நேற்றுமுன்தினம் டொலர் ஒன்றின் பெறுமதி 158.17 ரூபாயாக காணப்பட்டதுடன் நேறறு டொலர் ஒன்றின் பெறுமதி 159.04 ரூபாயாக அதிகரித்துள்ளது. (ம)

# சத்திய தரிசனம்



## அழுதால் அவனருள் பெறலாம்

❖ பிறக்கும் போது நாம் அழுது, இறக்கும் போது பிறரை அழ வைக்கிறோம், அழுகையொடு பிறந்து, அழுகையோடு மறையும் நாம், இறைவனை நினைத்து சற்று அழ வேண்டும். கண்ணீர் மல்க வேண்டும்.

❖ நாக்கில் சர்க்கரை இருக்கும் வரை இனிப்பு இருக்கும். அதைப்போல இருதயத்தில் அன்பு, அமைதி, பக்தி இருக்குமானால் ஆனந்தத்தை உணர முடியும்.

❖ மனிதனின் அறியாமையை பக்தியினால் அழிக்கலாம். மனித சேவை மகேசனின் சேவை என்று கருதிச் செய்தால் அறியாமையின் ஆழத்தை நாம் கண்டறியலாம்.

❖ செயற்கைக்கோளை உருவாக்கிய விஞ்ஞானியைப் பாராட்டும் நாம், இயற்கைக்கோளை உருவாக்கிய இறைவனையும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

❖ இயற்கையை உணர்வதற்காக அறிவும், இறைவனின் புகழைப்பாட வாயும், இறைவனின் பாடல்களை கேட்க காதும், பிறருக்கு உதவுவதற்காக உடம்பையும் இறைவன் படைத்துள்ளான்.

❖ இறைவனால் அளிக்கப்பட்ட உடலை நன்கு பராமரிக்க வேண்டும். அழுக்கு, நோய், வருத்தம், தோல்வி மனப்பான்மை ஆகியவற்றால் பாதிக்கப்படாமல் பாதுகாக்க வேண்டும்.

# வீட்டு வாசலிலிருந்த பெண்ணின் தங்கச் சங்கிலி அறுப்பு!

(யாழ்ப்பாணம்)

இருபாலை கட்டப்பிராய் கலைமகள் வீதியிலுள்ள வீடொன்றில் முன்வாசலில் அமர்ந்திருந்த பெண்ணொருவரின் தங்கச்சங்கிலி அறுத்துச் செல்லப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றது.

குறித்த பெண் வீட்டு வாசலில் அமர்ந்திருந்த வேளை திடீரென மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் ஒருவர் வீட்டினுள் நுழைந்து அவர் கழுத்தில் அணிந்திருந்த இரண்டரைப் பவுண சங்கிலியை அறுத்து தப்பிச் சென்றுள்ளார்.

இதனையடுத்து குறித்த பெண் பொலிஸ் நிலையத்தில முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளார். (இ-7,136)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மன்னார் பிரதேசத்தில் முருங்கனிலிருந்து நானாட்டான் வரை, அறுகுக்குன்று, முருங்கனிலிருந்து முள்ளிக்குளம் வரை, சிலாவத்துறை கடற்படைமுகாம், முள்ளிக்குளம் கடற்படைமுகாம், செம்மணதீவு நெற்களஞ்சியம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# ஸ்ரீலங்கா கிரிக்கெட் பிரிவு III யாழ்.ஜொனியன்ஸ் அணி வெற்றி

ஸ்ரீலங்கா கிரிக்கெட் பிரிவு III தொடரில் யாழ்.நகரில் இருந்து 2 அணிகளை தெரிவு செய்வதற்கான சுற்றுப் போட்டியின் 3ஆவது போட்டி கடந்த வாரம் ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் யாழ்ஜொனியன்ஸ் அணி, ஸ்கந்தாஸ்ரார் அணியை 91 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.ஜொனியன்ஸ் அணி 45 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 300 ஓட்டங்களை பெற்றது.

அன்புஜன் - 21, திலக்ஸன் - 12, கிஷாந்துஸன் - 32, ஜதூஸன் - 96, அமிடயன் - 28 ஓட்டங்களை பெற்றனர்.

பந்துவீச்சில் சோபிதன் ஒரு விக்கெட்டையும், டனூஸன் 3, துவாரகன் ஒரு விக்கெட்டையும், தனூஸன் 3 இலக்குகளையும்கைப்பற்றினா்

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தாஸ்ரார் அணி 40 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 209 ஓட்டங்களை பெற்றது.

துவாரகன் - 36, அஜின்தன் - 24, தனூஸன் - 30 கயன்தன் - 52 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சன்சயன் 2, அக்ஸன் 2, யதுஸன் 2, சின்துஜன் ஒரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப் போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் தர வரிசைப் பட்டியலுக்கு யாழ் ஜொனியன்ஸ் அணி 9.91 புள்ளிகளையும், ஸ்கந்தாஸ்ரார் 2.99 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (க)




# ஊடகவியலாளர் ரூபன் ஞாபகார்த்தமாக பொன்னாலையில் மரதன் ஓட்டப்போட்டி



ஊடகவியலாளர் அமரர் அராலியூர் செ.ரூபனின் 8 ஆவது ஆண்டு நினைவுதினத்தை முன்னிட்டு மரதன் ஓட்டப்போட்டி நடத்தப்பட்டது.

பொன்னாலை வெண்கரம் படிப்பகத்தின் ஏற்பாட்டில் பொன்னாலை ஸ்ரீ கண்ணன் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை இப் போட்டி நடத்தப்பட்டது.

பொன்னாலை வெண்கரம் படிப்பகத்திற்கு முன்பாக காலை 6.45 மணியளவில் இப்போட்டி ஆரம்பமானது. வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர்களான த.றஜீவன், ரி.சுஜிந்தன், ச. ஜெயந்தன், ந.பொன்ராசா மற்றும் வெண்கரம் செயற்பாட்டாளர் மு.கோமகன் ஆகியோர் இணைந்து இப் போட்டியை ஆரம்பித்து வைத்தனர்.

வெண்கரம் படிப்பகத்திற்கு முன்பாக ஆரம்பமான இப்போட்டி பொன்னாலைச் சந்தி, வட்டுக்கோட்டைச் சந்தி, சங்கரத்தைச் சந்தி, மாவடிச் சந்தி, மூளாய் வீதி ஊடாகப் பயணித்து ஆரம்பித்த இடத்தைச் சென்றடைந்தது.

இப்போட்டியில், ச.அஜந்தன் முதலாம் இடத்தையும் பா.டல்சியன் இரண்டாம் இடத்தையும் கு.அனுசன் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

வெற்றியாளர்களுக்கான பரிசில்கள் இன்று வெண்கரம் படிப்பகத்தில் நடைபெறும் அமரர் ரூபனின் நினைவேந்தல் நிகழ்வில் வழங்கப்படும். (க)

# நான்காவது முறையும் இறுதியில் இளங்கதிர்



வல்வை வருத்தப்படாத வாலிபர் சங்கம் தொடர்ச்சியாக நான்காவது ஆண்டாக நடத்தும் உதைபந்தாட்ட தொடரின் பிளே ஓவ் ஆட்டங்கள் அண்மையில் தீருவில் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்றது. இளங்கதிர் அணியானது சைனிங்ஸ் அணியுடன் மோதியது. இதில் வெற்றி பெறும் அணியானது நேரடியாக தகுதிபெறும் என்பதால் ஆட்டம் விறுவிறுப்பாக இடம் பெற்றது. ஆட்ட நேர முடிவில் இளங்கதிர் அணியானது 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதிபெற்றது.

மற்றுமொரு பிளே ஓவ் ஆட்டத்தில் உதயசூரியன் அணியை 4-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி ரேவடி அணியானது அரையிறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.

இவ்வெற்றியின் மூலம் வருத்தப்படாத வாலிபர் சங்க தொடரில் நான்காவது ஆண்டாகவும் இறுதியாட்டத்திற்கு இளங்கதிர் அணி தெரிவாகி சாதனை படைத்துள்ளது. (க)

# இறுதிக்குள் நுழைந்தது பாடும்மீன்

புதிய விடியல் கால்பந்தாட்டத் தொடரின் இறுதிக்குள் தொடர்ந்து ஐந்தாவது முறையாக குருநகர் பாடும்மீன் அணி உள்நுழைந்தது.

டான் தொலைக்காட்சியின் அனுசரணையில், யாழ். மாவட்ட கால்பந்தாட்டச் சங்கம் ஒழுங்கமைத்து, யாழ். மாவட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் புதிய விடியல் என்னும் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் அரையிறுதிக்கு ஊரெழு றோயல் அணி உள்நுழைந்தது.

யாழ்ப்பாணம், வலிகாமம், தீவகம், பருத்தித்துறை மற்றும் வடமராட்சி ஆகிய லீக்குகளின் அனுமதியுடன் இந்தச் சுற்றுப்போட்டியானது நடைபெற்று வந்தது.

இந்தச் சுற்றுப்போட்டியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 39 விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றியிருந்தன. முதற்சுற்று ஆட்டங்கள் நொக்கவுட் முறையில் நடைபெற்று, மயிலங்காடு ஞானமுருகன், புங்குடுதீவு நசரேத், குருநகர் பாடும்மீன், அரியாலை ஐக்கியம், இளவாலை யங்ஹென்றிஸ், குப்பிளான் குறிஞ்சிக்குமரன், ஊரெழு றோயல், நவிண்டில் கலைமதி ஆகிய அணிகள் காலிறுதிக்குத் தகுதி பெற்றன.

தொடர்ந்து நடைபெற்ற காலிறுதியாட்டங்களில் மயிலங்காடு ஞானமுருகன், இளவாலை யங்ஹென்றிஸ், குருநகர் பாடும்மீன் மற்றும் ஊரெழு றோயல் அணிகள் அரையிறுதிக்குத் தகுதி பெற்றன.

முதலாவது அரையிறுதியில், மயிலங்காடு ஞானமுருகன் அணி, இளவாலை யங்ஹென்றிஸ் அணியை வீழ்த்தி இறுதிக்குள் நுழைந்தது.

தொடர்ந்து, இரண்டாவது அரையிறுதியாட்டம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்றது. இதில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதியது.

முதற்பாதியாட்டத்தில் பாடும்மீன் அணியின் ஆதிக்கம் மைதானத்தில் நிலைபெற்றது. அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் போட்டு, ஆட்டத்தில் முன்னிலை வகித்தது. முதற்பாதியாட்டம் முடிவில் பாடும்மீன் அணி, 2:0 என்ற கோல்கள் கணக்கில் முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதி யாட்டம் தொடங்கியதும், பாடும்மீன் அணி மேலும் ஒரு கோலைப் போட்டது. அது வரையில் மந்தமாக ஆடி வந்த றோயல் அணி, அதன் பின்னர் விஸ்வரூபம் எடுத்தது. அடுத்தடுத்து 3 கோல்களை அபாரமாக அடித்து, பாடும்மீன் அணியை திக்குமுக்காடச் செய்தது. எனினும், இறுதி நிமிடத்தில் தமக்கான வெற்றிக் கோலை பாடும்மீன் அணியினர். அடித்து தங்கள் வெற்றியை உறுதி செய்தனர். முடிவில், 04:03 என்ற கோல்கள் கணக்கில் வென்று பாடும்மீன் அணி இறுதிக்குள்நுழைந்தது. (க-26-106)

**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது 076 636 3378
என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**



2017, 2018ஆம் ஆண்டுக்கான லயன்ஸ் கிளப் இனால் நடத்தப்பட்ட மென்பந்து துடுப்பாட்ட போட்டியின் இறுதி போட்டியில் சாவகச்சேரி சிவன் விளையாட்டு கழகத்தை எதிர்த்து விளையாடிய மட்டுவில் கண்ணகை விளையாட்டு கழகம் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை தன் வசப்படுத்தியது.

# கனிஷ்ட மெய்வல்லுநரில் வடமாகாண வீர, வீராங்கனைகள் ஜொலிப்பு

56 ஆவது கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிகள் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது. இதில் வடமாகாண மெய்வல்லுநர் சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றி வரும் வீர, வீராங்கனைகள் சாதனைகளை நிலை நாட்டி வருகின்றனர்.

20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் பங்குபற்றிய சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஆ.புவிதரன் 4.70 மீற்றர் உயரம் தாண்டி, தங்கப்பதக்கம் பெற்றதுடன், 2017 ஆம் ஆண்டு அகில இலங்கை விளையாட்டு விழாவில் அருணோதயக் கல்லூரியைச் சேர்ந்த கே.நெப்தலி ஜோய்சனால் நிகழ்த்தப்பட்ட 3.61 மீற்றர் உயரம் என்ற சாதனையையும் தகர்த்தார்.

மேலும், தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.கபில்ஸன் 4.20 மீற்றர் உயரம் தாண்டி இரண்டாமிடத்தையும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியைச் சேர்ந்த ஜதுஸன் 4.10 மீற்றர் உயரம் தாண்டி மூன்றாமிடத்தையும் பெற்றார்.

கடந்த வருடம் தங்கப் பதக்கம் வென்ற நெப்தலி ஜோய்சன் இந்தவருடம் முதற் சுற்றுடன் வெளியேறினார்.

23 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் வடமாகாணத்தைச் சேர்ந்த கே.தினேஸ் 4.00 மீற்றர் உயரம் பாய்ந்து முதலிடத்தைப் பெற்றார்.

18 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் அளவெட்டி அருணோதயக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.திஸாந்த் 3.90 மீற்றர் உயரம் தாண்டி தங்கப்பதக்கம் வென்றார். இதே பிரிவில் பங்குபற்றிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி வீரன் ஏ.பவிதரன் 3.80 மீற்றர் உயரம் பாய்ந்து இரண்டாமிடத்தையும் அதே பாடசாலையின் என்.பானுஜன் 3.70 மீற்றர் உயரம் பாய்ந்து மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான தட்டெறிதலில் யாழ்ப்பாணம் ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த எஸ். மிரக்ஸ் 42.50 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப்பதக்கம் வென்றார். 16 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான குண்டெறிதல் போட்டியில் ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த எம்.மிதுன்ராஜ் 14.07 மீற்றர் தூரம் எறிந்து தங்கப்பதக்கம் வென்றார். (க-26)



உடுவில் பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையிலான எல்லை போட்டியில் களமிறங்கிய விக்னேஸ்வரா அணி - ஸ்கந்தா ஸ்ரார் அணியை 6 : 5 என்ற ரீதியிலும், அரையிறுதியில் றில்ஸ்ரார் அணியை 5 : 5 என சமப்படுத்தி சுப்பர் சுற்றிலும் 1 :1 என சமப்படுத்தி பின்னர் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று இறுதிப் போட்டியில் நியூவாரியஸ் அணியை 6:5 என்ற அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணத்தை சுவீகரித்தது. (க)

## விடுவித்து தருமாறு...

இரட்ணசபாபதி ஸ்ரீதர் உள்ளிட்ட 6 பேர் மனுதாரர்களாகவும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவை முதலாவது எதிர் மனு தாரர்களாகவும் மற்றொரு வரை இரண்டாவது எதிர்மனுதாரராகவும் குறிப்பிட்டு சட்டத்தரணி கேசவன் சயந்தன் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

1996ஆம் ஆண்டு நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையைப் பயன்படுத்தி அனுமதி எதுவுமின்றி சட்டவிரோதமாக குடியேறிய முதலாவது எதிர்மனுதாரர் 20 ஆண்டுகளுக்கு மேலாக வாடகை எதையுமே வழங்காமல் ஆதனத்தையும் கட்டடத்தையும் வைத்துள்ளார்.

இதன் காரணமாக உரிமையாளர்களாகிய எமக்கு மாதம் ஒன்றுக்கு 75 ஆயிரம் ரூபா வீதம் ஏற்பட்ட இழப்பும் அதன் வட்டியையும் இணைத்து இதுவரை காலத்துக்குமான இழப்பீடாக 100 மில்லியன் ரூபாவையும் எதிர் மனுதாரர்கள் வழங்கவேண்டும்.

தற்போது இடம்பெறும் வழக்குச் செலவுடன் கட்டடத்துடன் கூடிய ஆதனத்தின் உரித்தினையும் பெற்றுத் தரவேண்டும் என்று மனுதாரர்கள் கேட்டுள்ளனர். (ம-4)

## யாழ் பல்கலையில்...

ஆணைக்குழுவும் உயர்கல்வி அமைச்சும் பணித்துள்ளதாக தெரிவிக்கப்படுள்ளது.

வன்னி இறுதிப் போரின் போது உயிரிழந்த பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் உறவுகள் உட்பட முள்ளிவாய்க்கால் பேரவலத்தை நினைவு கூருவதற்கு நினைவுத் தூபி அமைக்க பல்கலைக்கழக மாணவர்கள் திட்டமிட்டனர்.

பல்கலைக்கழக வளாக முன்றலில் அதனை அமைக்கும் பணிகளை அவர்கள் கடந்த புதன்கிழமை ஆரம்பித்திருந்தனர். எனினும் அந்த இடத்தில் அமைப்பதற்கு பல்கலைக்கழக நிர்வாகத்தின் பணிப்பால் தடங்கல் ஏற்பட்டது.

இந்த நிலையில் பல்கலைக்கழக நிர்வாகத்தில் உயர்மட்டத்துக்கும் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும் இடையே கடந்த வியாழக்கிழமை பிற்பகல் பேச்சுக்கள் இடம்பெற்றன.

அதனை பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள மாவீரர் நினைவிடத்துக்கு அருகாமையில் அமைக்குமாறும் உயர்மட்டத்தினரால் மாணவர் ஒன்றியத்திடம் கோரப்பட்டது.

பல்கலைக்கழக நிர்வாகத்தின் கோரிக்கையை பரிசீலனை செய்த மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் அதற்கு இணக்கம் தெரிவித்தனர்.

இந்த நிலையில் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி பல்கலைக்கழக வளாகத்தில் நிர்வாகத்தால் அடையாளம் காட்டப்பட்ட இடத்தில் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் நேற்று பிற்பகல் வரை அமைக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் பல்கலைக்கழக வளாகத்துக்குள் அமைக்கப்படும் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி பணிகளை தற்போது உள்ள நிலையுடன் இடைநிறுத்துமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி அமைச்சு இணைந்து யாழ்ப்பாண பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு பணித்துள்ளது.

இந்த நிலையில் மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட பணிகள் நேற்று மாலையுடன் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ்.பல்கலைக்கழக மாணவ பிரதிநிதிகளுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது தமக்கு அவ்வாறு அறிவித்தல் நேற்று இரவு வரை கிடைக்கவில்லை என தெரிவித்தனர். (ம-4)

## 80 வீத காணிகள்...

வத்தினரின் வசமிருந்த 56 ஆயிரம் ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்தார்.

கடந்த 2015ஆம் ஆண்டு முதல் இது வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் 21,898.79 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் கூறியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 24,390.35 ஏக்கரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 7066.69 ஏக்கர் காணியும் விடுவிக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஏனைய பகுதிகளை விடுவிப்பது தொடர்பில் அவதானம் செலுத்தி வருவதாகவும் இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த 13ஆம் திகதி வலிகாமம் வடக்கில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த 683 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

## தமிழ் மக்களுடைய...

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம் பௌசி வடமாகாண பாடசாலை நூலகங்கள் மற்றும் சமூக மட்ட நூலகங்களுக்கான நூல்களை விநியோகம் செய்திருந்தார்.

அண்மையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான சுமந்திரன், தமிழ் மக்களுக்கான தீர்வுகள் வழங்கப்படாவிடின், நிர்வாக முடக்கங்களை முன்னெடுப்போம் என தெரிவித்திருந்தார். கூட்டு எதிரணி பொதுத் தேர்தல் நடத்துமாறும், அரசாங்கத்தினை கலைப்பதற்கான பல நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார்கள். பொதுத் தேர்தல் நடத்த முடியுமான, அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்றும் ஊடகவியலாளர் கேள்வி எழுப்பியபோதே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்க வேண்டுமென்றும், அரசாங்கம் அபிப்பிராயம் வைத்துள்ளதுடன், ஆலோசனைகளையும் நடாத்தி வருகின்றார்கள்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றதுடன், அந்தப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக தமது நேரத்தினையும் செலவழிக்கின்றார்கள்.

எனவே, 2020 ஆம் ஆண்டிற்குள் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு முன் வைப்பார்கள் என எண்ணுகின்றேன். அத்துடன், மகிந்தவின் யோசனை மடத்தனமான யோசனை, தற்போது அரசாங்கத்தினை கலைக்க முடியாது.

அரசாங்கத்தினைக் கலைக்காது எவ்வாறு பொதுத் தேர்தல் வைக்க முடியும். அது நடக்கின்ற விடயம் அல்ல.2020 ஆம் ஆண்டு வரைக்கும் அரசாங்கம் நீடிக்கும் என்றும், கடவுள் புண்ணியத்தில் எதிர்வரும் 08 ஆம் திகதிக்குப் பின்னர் நல்லாட்சி அரசாங்கம் சக்தி வாய்ந்த அரசாங்கமாக செயற்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## ஒழிக்கும் யோசனை...

சமர்ப்பிக்கவுள்ளதாக இலங்கை நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சி பிரதம கொறடாவான ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார். (ம)

## தனிப்பட்ட பிரேரணை...

த்தார்.

நேற்றுக் காலை கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த வரைபு பாராளுமன்றத்திற்கு தாக்கல் செய்யப்பட்ட பின்னர் மகா சங்கத்தினர், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் பொது அமைப்புக்களுடனும் கலந்தாலோசிக்க திட்டமிட்டுள்ளதாக அவர் கூறினார்.

தற்போதைய அரசாங்கம் புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்த போதிலும் அது இடைநடுவில் நிறுத்தப்பட்டிருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போது இருக்கின்ற சூழ்நிலையில் இந்த யோசனையை முன்வைப்பதற்கு சரியான தருணம் இதுவாகும் என்று அநுரகுமார திஸாநாயக்க மேலும் கூறினார். (ம)

# அபிவிருத்தி உத்தியோகத்தர் தாக்கப்பட்டதை கண்டித்து கவனயீர்ப்பு போராட்டம்




(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பிரதேச பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் தாக்கப்பட்டமையைக் கண்டித்தும் தாக்குதலை நடத்தியவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கையை எடுக்க வலியுறுத்தியும் சாவகச்சேரி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் நேற்று கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

சாவகச்சேரி பிரதேச செயலக பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், நாவற்குழியில் கடந்த வெள்ளிக்கிழமை வெளிக்களப் பணியில் ஈடுபட்டிருந்தபோது, அங்கிருந்த சிலரால் கடுமையாகத் தாக்கப்பட்டிருந்தார்.

தலையில் பலத்த காயங்களுக்குள்ளான அவர், சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த நிலையில் கடமையின் போது உயிராபத்தை ஏற்படுத்தும் வகையில் உத்தியோகத்தர் மீது தாக்குதல் நடத்தப்பட்டமையைக் கண்டித்தும் அவர் மீது தாக்குதல் நடத்தியோர் தொடர்பில் விரைவான விசாரணைகளை முன்னெடுத்து சட்ட நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியுமே சாவகச்சேரி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம)

# கனரகவாகனம்-மோட்டார் சைக்கிள் பூநகரியில் கோர விபத்து-ஒருவர் பலி

(பூநகரி)

கிளிநொச்சி பூநகரி நல்லூர் பகுதியில் ஏற்பட்ட விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் பலியாகியுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பூநகரி நல்லூர் வீதியில் நேற்று மாலை 6.00 மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவர் மீது தென்னிலங்கையைச் சேர்ந்த அபிவிருத்தி லொத்தர் சபைக்குச் சொந்தமான கனரக வாகனம் ஒன்று மிகவேகமாக வந்து மோதியது.

அந்த வாகனத்தின் அடிப்பகுதியில் மோட்டார் சைக்கிளும் மோட்டார் சைக்கிளில் சென்றவரும் அகப்பட்டு கடுமையான காயங்களுக்குள்ளாகி சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் சென்றவர் யார் என இனங்காணப்படவில்லை. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

மேற்படி வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்றவரும் அபிவிருத்தி லொத்தர் சபைக்குச் சொந்தமான கனரக வாகனமும் மிக வேகமாகச் சென்றதாக அவதானித்தவர்களால் கூறப்படுகின்றது. (ம)

## ஸ்ரீலங்கா சுதந்திர...

மன்ற குழுவினர் தீர்மானித்துள்ளனர் என அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கட்சியை பலப்படுத்துவது என கட்சியின் பாராளுமன்ற குழு தீர்மானித்துள்ளது என குறிப்பிட்டுள்ள அமைச்சர் கட்சியின் மத்திய குழுவின் கூட்டத்தில் இது குறித்து நீண்டநேரம் ஆராயப்பட்டது எனவும் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்சியை பலப்படுத்துவதற்கு அவசியமான சீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்கு இணங்கியுள்ளனர் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கட்சிக்குள் எந்த பிளவும் இல்லை எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். கட்சியை பலப்படுத்தவேண்டும் என்பது தொடர்பில் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியிலும் ஒரேநிலைப்பாடே உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ம)

## ஜே.வி.பியுடன் எவ்வித...

மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி.யின் அரசியல் பீட உறுப்பினர் கே.டி. லால்காந்தவின் தாயாரின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தியதன் பின்னர் அநுராதபுரத்தில் ஊடகவியலாளர்களை சந்தித்த போது அவர் இதனைத் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணி மற்றும் கூட்டு எதிர்க்கட்சிக்கு இடையே இத்தினங்களில் பேச்சுவார்த்தைகள் இடம்பெறவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளதாக ஊடகவியலாளர்கள் இதன்போது முன்னாள் ஜனாதிபதியிடம் வினவினர்.

இதற்கு பதிலளித்த மகிந்த அவ்வாறான எவ்வித பேச்சுவார்த்தைகளும் இடம்பெறவில்லை என தெரிவித்தார். (ம)

# கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கைச் சேர்ந்த சுமார் 200-ற்கும் மேற்பட்ட மக்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் கொழும்பு விகாரமஹாதேவி பூங்காவிற்கு முன்பாக நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தை தேசிய மீனவ ஒத்துழைப்பு அமைப்பு, காணி உரிமைகளுக்கான மக்கள் இயக்கம், பிரஜா அபிலாசை வலையமைப்பு, காணி மற்றும் விவசாய மறுசீரமைப்பு இயக்கம் என்பன ஏற்பாடு செய்திருந்தன.

மக்களின் காணிகளை மீள பெற்றுக் கொடுக்க வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் அதிகாரிகளை வலியுறுத்தினர். (ம)

## வெடி மருந்தை கட...

ரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் விடுவிக்கப்பட்ட காங்கேசன் துறை வள்ளுவர்புரம் பகுதியில் மீட்ட வெடி பொருட்கள் இரண்டினை வாளால் வெட்டி அதிலிருக்கும் மருந்தினை எடுத்துச் சென்ற வேளை குறித்த இளைஞன் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவிலிருந்து சுமார் மூன்றரை மணித்தியாலங்களாக நேரத்தினை செலவிட்டு காட்டுப்பகுதியில் காணப்பட்ட வெடிபொருளை வாள் மற்றும் உளி கொண்டு உடைத்து அதிலிருக்கும் மருந்தினை எடுத்துச் சென்றுள்ளார். குறித்த மருந்தினை மீன்பிடிக்கு பயன்படுத்துவதற்காக குறித்த இளைஞர் எடுத்துச் சென்றுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணையின் போது பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னாரில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் குறித்த இளைஞர் கடலில் அதிகளவான மீன்களை பிடிப்பதற்கான டைனமெட்டினைத் தயாரிப்பதற்கு குறித்த வெடிபொருளின் மருந்தினை வெட்டி எடுத்திருக்கலாம் என காங்கேசன்துறை குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ம-9)

## மோசடிக் குற்றச்சா...

தொடர்பில் விசாரணை நடத்தி உண்மை நிலை அறிக்கையை சமர்ப்பிக்குமாறு பிரதம செயலாளருக்குப் பணித்துள்ளேன்.

அந்த அமைச்சர்கள் தொடர்பில் தற்போது எதுவுமே கூற முடியாது. விசாரணையின் பின்னரே எந்த முடிவுக்கும் வர முடியும் என்று வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் முதலாவது அமைச்சரவையில் இடம்பெற்றவர்களில் இருவர் மீது மோசடிக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு, அவர்கள் இருவரும் பதவி விலகி ஒரு ஆண்டுகள் நிறைவடைய முன்னர் புதிய அமைச்சரவையின் அமைச்சர்கள் மீது மோசடிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## பொது செயலாளரா...

அகில விராஜ் காரியவசம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அத்துடன் தவிசாளராக கபீர் காஸிமும், தேசிய அமைப்பாளராக நவீன் திஸாநாயக்கவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அலரி மாளிகையில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசியற்குழுக் கூட்டத்தின் போதே இந்த பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் உப தலைவராக ரவி கருணாநாயக்க தெரிவுசெய்யப்பட்டுள்ளதோடு, பிரதித் தலைவராக தொடர்ந்தும் சஜித் பிரேமதாசவே பதவி வகிக்கவுள்ளார்.

இன்று கூடவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் முன்வைக்கப்படவுள்ளதோடு, ஏனைய பதவிகள் குறித்தும் இன்று தீர்மானிக்கப்படவுள்ளன. (ம)

## வலிந்து காணாமல்...

ர்கள் என்று சாட்சியத்தில் தெளிவாகத் தெரிவிக்கப்படவில்லை என்றும் முல்லைத்தீவு நீதிமன்றம் தெரிவித்துள்ளதாக வவுனியா மேல் நீதிமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற வழக்கு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது என்றும் அவர் கூறினார்.

அளிக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் காணாமல் போயுள்ளவர்கள் என தெரிவிக்கப்பட்டவர்கள் யுத்தத்தில் கொல்லப்பட்டார்களா? அல்லது காணாமல் போனார்களா? என்பதைத் தீர்மானிப்பது முடியாதுள்ளது என்றும், காணாமல் போனார்கள் என தெரிவிக்கப்பட்டவர்களுக்கு இந்த மனுக்களின் எதிர் தரப்பினர் பொறுப்பு கூற வேண்டியதில்லை என்றும் முல்லைத்தீவு நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளதாகவும் சட்டத்தரணி குறிப்பிட்டார்.

இந்த ஆட்கொணர்வு மனுக்கள் வவுனியா மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு நடைபெற்ற விசாரணைகளின்போது ஆட்கள் காணாமல் போன சம்பவம் முல்லைத்தீவு நீதிமன்ற நியாயாதிக்கத்திற்கு உட்பட்ட பகுதியில் நடைபெற்றிருப்பதனால், அந்தச் சம்பவம் குறித்து விசாரணைகள் நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு வவுனியா மேல் நீதிமன்றம் முல்லைத்தீவு நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்தது.

இவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனுக்களில் விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளரும், வடமாகாண அமைச்சருமாகிய அனந்தியின் கணவருமாகிய சசிதரன் (எழிலன்) சம்பந்தப்பட்ட மனுவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

வவுனியா மேல் நீதிமன்றத்தில் நடைபெற்ற இந்த மூன்று வழக்குகளின் மனுதாரர்களான விசுவநாதன் பாலந்தினி, கந்தசாமி பொன்னம்மா, கந்தசாமி காந்தி ஆகியோருடன் வடமாகாண அமைச்சர் அனந்தி சசிதரனும் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தனர்.

வவுனியா மேல் நீதிமன்றத்தின் அறிவித்தலுக்கு அமைய முல்லைத்தீவு நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணைகளின் முடிவில் அந்த விசாரணைகளில் கண்டறியப்பட்ட விடயங்கள் தொடர்பான அறிக்கைகள் வவுனியா மேல் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டிருந்தன. அதனையடுத்து, நேற்று புதன்கிழமை இந்த மூன்று வழக்குகளும் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, அந்த அறிக்கைகளின் இறுதிப்பகுதியில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் நீதிமன்றத்தில் வாசிக்கப்பட்டதாக மனுதாரர் தரப்பில் மன்றில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி தெரிவித்தார்.

எனினும் அந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு வவுனியா மேல் நீதிமன்றத்தினால் கோரப்பட்டிருந்ததே தவிர, அந்த விசாரணைகளின் அடிப்படையில் தீர்ப்பு வழங்குவதற்கு முல்லைத்தீவு நீதிமன்றத்திற்கு அதிகாரமில்லை என சட்டத்தரணி ரட்ணவேல் வவுனியா மேல் நீதிமன்றத்தில் வாதிட்டார்.

அத்துடன் முல்லைத்தீவு நீதிமன்ற அறிக்கைகளின் பிரதி மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் அவற்றை ஆராய்ந்ததன் பின்னர் அடுத்த கட்டமாக இந்த வழக்குகளை முன்னெடுத்துச் செல்வது தொடர்பில் முடிவெடுப்பதற்காக தவணையொன்றைத் தரவேண்டும் என்று மன்றில் கோரிக்கை விடுத்தார்.

அவரது கோரிக்கையை ஏற்ற வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் முல்லைத்தீவு நீதிமன்ற அறிக்கைகளின் பிரதியை மனுதாரருக்கு வழங்குமாறு உத்தரவிட்டதுடன், இந்த வழக்குகளின் விசாரணையை எதிர்வரும் மே மாதம் 22 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

விடுதலைப்புலி உறுப்பினர்களை இராணுவத்திடம் சரணடையுமாறும், அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் அரசாங்கம் இராணுவத்தின் ஊடாக அளித்த உத்தரவாத அழைப்பை ஏற்று பெரும் எண்ணிக்கையான விடுதலைப்புலி உறுப்பினர்கள் இராணுவத்திடம் இறுதி யுத்தத்தின் போது மே மாதம் 18 ஆம் திகதி வட்டுவாகல் பகுதியில் சரணடைந்தனர்.

இவ்வாறு சரணடைந்து காணாமல் போயுள்ளவர்களில் 14 பேர் தொடர்பில் இரண்டு தொகுதிகளாக அவர்களுடைய உறவினர்களினால் வவுனியா மேல் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த வழக்குகள் சம்பந்தமாக விசாரணைகள் நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு வவுனியா மேல் நீதிமன்றம் முல்லைத்தீவு நீதிமன்றத்திடம் இந்த வழக்குகளைப் பாரப்படுத்தியிருந்தது.

அதன் அடிப்படையில் வவுனியா மேல் நீதிமன்றத்திற்கு மூன்று வழக்குகள் தொடர்பான அறிக்கைகள் அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. அந்த வழக்குகள் தொடர்பான விசாரணைகளே வவுனியா மேல் நீதிமன்றத்தில் நடைபெற்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-281)

## காற்றுடன் மழை...

ளவில் மழையுடன் கடும் காற்று வீசியதால் காற்றினால் பல வீடுகள் சேதமடைந்துள்ளன. இந்த விடயம் குறித்து மேலும் தெரிய வருகையில்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாங்குளம் கிராம அலுவலர் பிரிவில் துணுக்காய் வீதியில் அமைந்துள்ள வீடுகளே இவ்வாறு சேதமடைந்துள்ளன

மாலை 5 மணியளவில் மழை பெய்து கொண்டிருந்ததோடு பலத்த காற்று வீசியுள்ளது இதனால் குறித்த பகுதியில் இருந்த சுமார் பத்து வீடுகள் வரை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதோடு மேலும் பத்து வீடுகள் வரை சிறியளவில் பாதிக்கப்பட்டுள்ளதோடு பயன்தரு மரங்கள் பலவும் சேதமாகியுள்ளது.

குறித்த பகுதிக்கு புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் செ.பிரேமகாந்த் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் மு.முகுந்தகஜன் ஆகியோர் சென்று பார்வையிட்டு மக்களுக்கான தேவைகள் தொடர்பில் கலந்துரையாடி உணவு உள்ளிட்ட ஒழுங்குகளை மேற்கொண்டனர். (ம-281)

## 16 பேரும் எதிர்க்கட்...

மைத்திரிபால சிறிசேன அனுமதியளித்துள்ளார். இது தொடர்பாக நேற்று புதன்கிழமை நடைபெற்ற மத்திய செயற்குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி குறித்த அனுமதியினை வழங்கியுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

நேற்று இரவு 8 மணிக்கு ஆரம்பமாகிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம், இரவு 10.30 மணி வரையில் நடைபெற்றுள்ளது.

இதே வேளை மத்திய செயற்குழுக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டமும் ஜனாதிபதி தலைமையில் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.(ம)

வேலைவாய்ப்பு
அரச அங்கிகாரம் பெற்ற எமது DNMC PVT LTD ஆனது கிளிநொச்சியில் புதிய கிளையினை நிர்மாணித்துள்ளது.
முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் மேலும் புதிய கிளைகளை நிறுவவுள்ளது.
அதற்கான வேலையாட்கள் பின்வரும் நியந்தனைக்கு அமைய கோரப்படுகின்றது.
தரம் : 10 - O/L, A/L, Diploma
உடன் தொடர்பு கொள்ளுங்கள் (3763)
தொடர்புகளுக்கு : 076 676 7620, 076 666 8385

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK - 550*/=Kg
நெதர்லாந்து - 700/=Kg (Holland)
DELIVERY IN 3-5 DAYS
தொடர்புகளுக்கு 0768226240
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS

நூற்றுக்கணக்கான நாடுகளில் கிளைகளைக் கொண்ட அமெரிக்க நிறுவனங்களான
McDonald's Marriott HOTELS & RESORTS
ஆகியவற்றில் வேலைவாய்ப்பு ஏற்பாடு!
அல்லது
ஜேர்மன் உல்லாசப் பயணக் கப்பல் வேலைவாய்ப்பு!
அல்லது
சுவிஸ், அவுஸ்ரேலியா, சிங்கப்பூர் நியூசிலாந்து, கனடா விசா ஏற்பாடு என்பவற்றுடன்
O/L உடன் விரும்பிய நாடு சென்று 50,000 - பல இல. சம்பாதிக்க
10ம் அணி TOURISM & Hotel Management 4 MONTHS DURATION
Entry Level with FREE ENGLISH COURSE
பதிவுகளுக்கு 0777 324 004
9வது ஆண்டில் 9th Year
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
FAST TRACK to CAREERS
Sri Lankan Entrepreneur of the Year 2017
இல.221-1/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9 221 www.sikaram.lk

யா/கொக்குவில் இந்துக் கல்லூரி - சாரணிய பவள விழா
பவள விழா மலருக்கான கட்டுரைகள் புகைப்படத்தொகுப்புகள் வரலாற்றுத் தகவல்கள்
கல்லூரியின் பழைய மாணவர்களே, நலன் விரும்பிகளே சாரணிய பவள விழா (75-வது ஆண்டு) மலருக்கு கடந்த கால சாரணிய மாணவர்களின் தகவல்களை ஆதாரத்துடன் தருவதுடன் (வரலாறு மற்றும் புகைப்படங்கள்) சாரணியம் சார்ந்த தங்களது செய்திகளையும் கட்டுரைகளையும் வைகாசி மாதம் 8-ம் திகதிக்கு முன் கல்லூரி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.
தொலைபேசி : 077 855 8715
மின்னஞ்சல் : samal2015@gmail.com

சாவகச்சேரியில்....
வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
அருள்ஸ் பிறைவேற் லிமிட்டட் நிறுவனங்களின் இணை நிறுவனம்
அருள்
இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
076 443 1576

நெல்லியடியில்....
வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
அருள்ஸ் பிறைவேற் லிமிட்டட் நிறுவனங்களின் இணை நிறுவனம்
அருள்
இல.01, எரிபொருள் நிரப்பு நிலையம் அருகில், நெல்லியடி.
076 443 1576

குத்தகைக்கு/ விற்பனைக்கு
மூளாய் வீதி, வட்டு தெற்கு, வட்டுக்கோட்டையிலுள்ள அரிசி ஆலை வருடக் குத்தகைக்கு கொடுக்கப்படும். அல்லது (18 பரப்பு காணியுடன்) விலைக்கு வாங்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்.
0776660222 (ரஞ்சன்) (3762)

வேலை ஆட்கள் தேவை
யாழ்.நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை. மேலும் சிட்டை எழுதுநர் இருபாலாரும் விரும்பத்தக்கது.
தொடர்பு: 0773482634, 0213213117

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.04.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.